www.padippakam.com

# வண்ணத்துப்பூச்சி




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வண்ணத்துப்பூச்சி
# ஐந்தாவது ஆண்டு மலர்


ஆசிரியர்:
'காசி'
வி. நாகலிங்கம்

வடிவமைப்பு:
மஞ்சுளா

கணனிப்பதிப்பு:
சுலக்ஷினி

ஓவியங்கள்:
சேகர்

Zur Essenthoer Muehle 4,
3538 Marsberg 15,
GERMANY.
Tel: 02992/ 5855


## எண்ணம்

சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது என்பது மிக இலகுவான விடயம் என்றும் பேனாவும் பேப்பரும் இருந்தால் எழுதிவிடலாம்; சஞ்சிகையை அடித்துத்தர ஒரு பொது நிறுவனம் உதவி புரிந்தால் ஓகோ என்று சஞ்சிகை நடத்திவிடலாமென்று சிலர் நினைக்கிறார்கள்.

எழுதுவது இலகுவாக இருக்கலாம். ஆனால் எழுதும் அந்த எழுத்துக்கள் தனது இனத்துக்கு, தான் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு, தான் வாழும் இவ்வுலகுக்கு நல்லதைப் படைக்கக் கூடியதாகவும், முன்னேற்றப் பாதைகளை உருவாக்க வல்லதாயும் இருக்கவேண்டும். பகுத்தறிவை வளர்த்து மூடக்கொள்கைகளைத் தகர்த்தெறிய வல்லவனாய் அறியாமை இருளில் கிடந்து அதர்மங்கள் செய்வோருக்கு அறிவு ஒளியூட்டித் தர்ம வழி காட்டவல்லவனாய் இருக்கவேண்டும்.

எமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்பதற்காகவோ அல்லது எம்முடன் கருத்து வேறுபட்டவர்களைத் தாக்கி இகழ்ந்து எழுதவேண்டும் என்பதற்காகவோ நாம் பேனாவை எடுப்போமேயானால், எமது பேனா எழுத்துலகில் எதையும் படைத்துவிடமாட்டாது. மாறாகப் பல்லிழிப்புக்கும், பரிதாபத்துக்கும் உரிய நிலைக்குத் தள்ளப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

பேனாக்கள் அறிவிலிப் பேய்களை விரட்ட வேண்டுமே தவிர, அவற்றுக்கு உணவூட்டி வளர்க்கக்கூடாது. பிரிவினைகளைப் போக்கவும், சமாதானத்தை உருவாக்கி வழிநடத்தவும் பேனாக்கள் கங்கணங்கட்ட வேண்டும். வறுமையைப் போக்க, அழிவுகளைத் தடுக்க, பண்பாடுகளை வளர்க்க கலையுணர்வுகளைச் செழிக்க வைக்க எமது எழுத்துக்கள் பிறக்கவேண்டும்.

மனதில் சுதந்திரம், எண்ணத்தில் தூய்மை, அறிவில் தெளிவு, செய்கையில் உறுதி என்பன இருந்தால் தான் எமது எழுத்துக்களும் மக்களுக்குச் சுதந்திர உணர்வையும் , தூய்மையையும் , தெளிவையும், உறுதியையும் ஏற்படுத்தவல்லனவாக இருக்கும். இல்லையேல் சொல்லொன்று, செயலொன்றாகிப் பயனற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். இதனை உணர்ந்து அறவழியில் எனது பேனா தொடர்கிறது. ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறது. இந்த எழுத்துக்கள் மக்களின் மனதைத் தொடுமானால் அது நான் செய்த பாக்கியமே. எனக்குத் தெரியாததை நான் எழுதவில்லை. எனக்குத் தெரிந்தவை , என் நெஞ்சில் உதிப்பதை எழுதுகிறேன். நன்மைகள் எனது சமூகத்துக்கும், உலகத்துக்கும் குவிய வேண்டுமென்ற உள்ளத்துடிப்பில் எழுதுகிறேன். இது எனது திறமையல்ல. இந்த ஆற்றலைத் தந்தவன் இறைவன். இதனை வளர்க்கவும், தடுக்கவும் அவனால் முடியுமென்பதை நான் அறிவேன். மனிதனின் இயக்கமும் சரி, உயிர்களின் இயக்கமும் சரி ஏன் இந்த உலகத்தின் இயக்கமே இறைவனின் சக்தியால் ஆளப்படுகிறது. இதனால் மமதை கொள்வது மனிதனுக்கு ஆகாது.

ஒரு சஞ்சிகை நடாத்துபவர் அதற்காகப் பெரும் பொழுதையும், பணத்தையும் செலவிடுகிறாரே தவிர, அதிலிருந்து பணம் பெறமுடியுமென்று நினைப்பது முயற்கொம்பு. இலாபமில்லாமலா இவர்களெல்லாம் சஞ்சிகை வெளியிடுகிறார்கள் என்று சிலர் கதைப்பதும் உண்டு. இலாபம் உண்டு தான், இங்கு ஜேர்மன் வங்கியில் அல்ல; தர்மத்தின் வங்கியில் வரவு வைக்கப்படுகிறது. சஞ்சிகை மட்டுமல்ல எந்தவொரு காரியத்தையும் கடமையுணர்வுடன் இலாபம் கருதாது அடுத்தவருக்குத் தீங்கு விளைவிக்காத விதத்தில் உலக நன்மை பேசுவதற்குள் தர்மம் பேசும் என்பதை உணர்ந்து தீயது களைந்து நல்லது படைப்போம். எமது தாயகத்தின் துயர் துடைக்க எம் பேனாக்களைத் தூக்குவோம். சமாதான உலகைப் படைக்க எழுத்துக்களைக் குவிப்போம். அறியாமைப் பேயை விரட்டப் புத்தகங்களைப் படைப்போமென்று அனைத்து எழுத்தாளர் சகோதரங்களையும் அன்புடன் அரவணைக்கிறது வண்ணத்துப்பூச்சி.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துகிறோம்



## எஸ். எஸ். குகநாதன்

**பிரதம ஆசிரியர்,**
**"ஈழநாடு"**
**பாரிஸ்.**

பத்திரிகை - சஞ்சிகைகள் வெளியி டுவதென்பது பிரசவவேதனைக்கு ஒப்பானது.

ஒரு குழந்தையைப் பிரசவிக்கின்ற வேதனையை -அக்குழந்தையைப் பெற்றெடுத்த தாயினால் மட்டுமே உணரமுடியும். அதனை எழுத்திலே எழுதிவிடமுடியாது.

அதுபோலத்தான் பத்திரிகை ஒன்றை , அல்லது சஞ்சிகை ஒன்றை வெளி யிடுவதில் இருக்கும் வேதனையை - கஷ்டங்களை எழுத்தில் எழுதிவி டமுடியாது.

சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதென் பது, அதுவும் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து வெளியிடுவதென்பது சாதாரண விடயமல்ல. அது ஒரு இமாலய சாதனை ! அந்தச் சாத னைக்குரியவர்கள் ஐரோப்பிய தமிழ் இலக்கிய வரலாற்றில் தமக்கென ஓரிடத்தைப் பெறுவார்கள்.

நாம் பிறந்து - வளர்ந்து - ஓடித்தி ரிந்த நமது மண், இன்று இரத்தத் தில் தோய்ந்து கொண்டிருக்க, ஐரோப்பிய நாடுகளில் தஞ்மடைந் துள்ள நமது மக்களில் சிலரோ இங்கு கிடைக்கின்ற 'ஐரோப்பிய சுகபோகங்களி'ல் தம்மை மறந்து வாழ்கின்றனர்.

இந்த அவலங்களைக் கண்டு இலக் கியம் படைக்கும் முன்னணியாளர்க ளில் ஒருவரான "வண்ணத்துப்பூச்சி" காசி. வி. நாகலிங்கம் அவர்கள் தமது பாதையில் தொடர்ந்து வெற்றி நடைபோடவும், "வண்ணத்துப்பூச்சி" சஞ்சிகை மேலும் பல்லாண்டு காலம் இலக்கியப் பணியாற்றவும் வாழ்த்து கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துகிறோம்

கடல் கடந்து- மலை கடந்து- ஆயிரமாயிரம் மையில் கடந்து- இந்த ஐரோப்பிய மண்ணாம் ஜெர் மனியில் தமிழ் மணம் பரப்ப பிறப் பெடுத்த "வண்ணத்துப்பூச்சி" இன்று ஐந்தாண்டுகள் வளர்ந்து தன்னெறி பரப்பி நிற்பதைக் காணுகையில் என் நெஞ்சில் இன் னருவி பாய்கிறது.

"வண்ணத்துப்பூச்சி" சஞ்சிகை என் கைக்குக் கிடைத்ததும் அதன் அட்டையில் இடம் பெற்ற திருக் குறளைப் படிப்பேன். அதன்பின் ஆசிரியர் கருத்தாக வரும் என் னுடன் ஒரு நிமிடம் என் நெஞ் சைக் கொள்ளை கொள்ளும்.

ஒற்றுமையையும், சமாதானத்தை யும், அன்பையும் , தர்மத்தையும், அடிக்குமேல் அடிப்பது போல "வ ண்ணத்துப்பூச்சி"யில் எழுத்துக் களாய் வளர்கிறது. எறும்பூரக் கல் லும் தேயும் என்பது போல "வண் ணத்துப்பூச்சி"யின் மென்மையான ஆனால் அழுத்தமான தொடர்ச் சியான எழுத்துக்கள் எம் தமிழ் மக்களின் முன்னேற்றமான எதிர் காலத்திற்கு வழிவகுக்கும் படிக்கற் களாக அமையும் என்பது என் அசைக்கமுடியாத நம்பிக்கை.

"வண்ணத்துப்பூச்சி" தன் உயர்ந்த பணியில் ஐந்து ஆண்டுகளைக் கடந்து ஆறாவது ஆண்டில் அடி யெடுத்து வைக்கும் இந்நாளில் அதன் சேவைகள் வளரவும் மேலும் பெருகி தமிழ் மக்கள் நெஞ் சம் எல்லாம் கொள்ளை கொள் ளவும் வாழ்த்துகிறேன். வாழ்க "வ ண்ணத்துப்பூச்சி".




## சிவனடியான் ஸ்ரீபதி

**தலைவர்,**
**தமிழ் மன்றம்,**
**பிராங்பேர்ட்.**




படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துகிறோம்

ஜெர்மனி, கோக்சவர்லாண்ட் மாநிலத்தில் (H. S. K) வாழும் தமிழ்மக்களாகிய நாம் வண்ணத் துப்பூச்சி சஞ்சிகையின் ஐந்தாவது நிறைவையொட்டி மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம், பாராட் டுகின்றோம் -வாழ்த்துகின்றோம்.

இது வண்ணத்துப்பூச்சி நிறுவனத்தாரு டைய சஞ்சிகை என்பதைவிட H. S. K தமிழ் மக்களுடைய சஞ்சிகை என்றால் மிகையாகாது. குறுகிய காலத்துக்குள் மிகப் பெரிய எண்ணங்களையும் உண்மைகளை யும் நல்ல தத்துவங்களையும் கொண்ட ஏடாக மலர்ந்ததை நாம் மட்டுமன்றி தமி ழர் வாழும் ஐரோப்பிய நாடுகளுக்கே தெரியும்.

சில ஏடுகள் மற்றவர்களை தாக்கியும் தனிப்பட்ட சுயநலத்தை உடையதாகவும் மக்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்தி வந்ததையும் நாம் அறிவோம். ஆனால் நமது வண்ணத்துப்பூச்சி மலர் எல்லோருக் கும் சமநீதி, சம அந்தஸ்து கொடுத்து பாரபட்சம் காட்டாது நடுநிலையாக நின் றது என்றால் அது வரலாற்றில் பதிக்கப்ப டவேண்டிய சாதனையே.

வாழ்க்கையை எப்படியும் வாழ்ந்துவிட்டு போகலாம் என்றில்லாமல் இப்படியும் வாழலாம் என்று வாழ்ந்து காட்டிய எமது வண்ணத்துப்பூச்சி ஆசிரியர்கள் திரு. காசி, திருமதி காசி ஆகியோருக்கு H. S. K மக்களாகிய நாம் அன்புடன் வாழ்த்துகின் றோம். பாராட்டுகின்றோம். உயர்ந்த இலட் சிய மனப்பாங்கைக் கொண்ட எழுத்தாளர் என்பதையும் பெருமையுடன் முன்மொழிகின் றோம். எத்தனையோ பேர் பெரிய பெரிய பட்டப் படிப்புக்களையெல்லாம் படித்து விட்டு மக்களுக்கு ஒவ்வாத கீழ்த்தரமான வேலைகளைச் செய்து கொண்டிருக்கின் றனர். நமது சுதந்திரப் பாதைகளை மூடி மறைக்க முன் நிற்கின்றனர். ஆனால் வண் ணத்துப்பூச்சி சுதந்திர தாகத்தோடு நம் மண்ணில் அகதிகளாக அநாதைகளாக வாடும் நம் இனத்திற்கும் சுதந்திரத்திற்கும் ஆதரவளிக்கின்ற சஞ்சிகையாகும் என்ப தையும் H. S. K மக்களாகிய நாம்

(42ம் பக்கம் பார்க்க)

**அனலை விஜயன்**

(ஜெர்மனி,
கோக்சவர்லாண்ட்
மக்கள் சார்பாக)



படிப்பகம்

www.padippakam.com

# தமிழருவி

## வாழ்த்துகிறோம்

"வண்ணத்துப்பூச்சி" சஞ்சிகைக்கு ஐந்து வயதாகின்றது எனும்போது மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த ஐந்து வருடங்களிலும் நீங்கள் சந்தித்த, சாதித்த சாதனைகளைப் பாராட்டி வாழ்த்துவதில் மிகவும் பெருமையடைகின்றேன். சஞ்சிகை வெளியிடுவதென்பது சுலபமான காரியமல்ல. நீங்கள் ஐந்து வருடங்களைத் தாண்டி வந்துள்ளது பாராட்டுக்குரியது. "வண்ணத்துப்பூச்சி" மேலும் சிறப்புற்று, பல்லாண்டு காலம் தமிழுக்குச் சேவையாற்ற வேண்டும். அதற்கான வலிமையை இறைவன் உங்களுக்கு அளிப்பானாக!

"தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை"

**- நயினை விஜயன்**

**ஆசிரியர், "தமிழருவி"**

## வாழ்த்துகிறோம்

ஒரு அன்னிய நாட்டில் ஐந்து வருடங்களாக ஒரு சஞ்சிகை நடாத்துவது என்பது ஒரு சிரமமான விடயம் என்பதை யாவரும் அறிவார்கள். இருந்தும் தமிழ் மொழிமேல் கொண்ட பற்றும் பாசத்தாலும் 'வண்ணத்துப்பூச்சி' பல இடர்களுக்கு மத்தியிலும் கையெழுத்துச் சஞ்சிகையாக மலர்ந்து நான்கு வருட வளர்ச்சியின் பின் அச்சு எழுத்துக்களினால் இன்று சஞ்சிகையாக மிளிர்ந்து ஐந்தாண்டு கொண்டாடும் நிகழ்வை ஒரு அதிசயமாக நாம் எண்ணுகின்றோம்.

'வண்ணத்துப்பூச்சி' ஐந்தாண்டுகளாக தமிழ்மணம் மாறாது தரம் மிக்க சுவையான பல படைப்புக்களையும் மற்றும் தனித்துவமான உயிரோட்டமுள்ள பல கதைகளையும் இங்கு வாழும் மக்களுக்கு வழங்கி வந்ததை நாம் அறிவோம். அத்துடன் 'ஜெர்மன் -தமிழ்' மொழிப் பயிற்சி புத்தகங்களையும் வழங்கி 'வண்ணத்துப்பூச்சி' ஒரு பல்கலைக்கழகமாக திகழ்வது கண்டு ஐரோப்பிய வாசகர் வட்டம் பெருமையுடன் வாழ்த்தும் அதேவேளை தொடர்ந்தும் தமிழ் வாசகர்களுக்கும் தமிழ் மொழிக்கும் தரமான சேவைகளை ஆற்றி மேன்மேலும் வளரவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

**இ. க. கிருஷ்ணமூர்த்தி**

**ஐரோப்பிய தமிழ் வாசகர் வட்டம்**



படிப்பகம்

www.padippakam.com



# நோக்கம் ஒன்றெனில் பிரிவினை ஏன்?

ஜெர்மனியில் திறமையாளர்கள், பட்டதாரிகள், உலகைப்படித்தவர்கள், அனுபவமிக்கவர்கள் என்று நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனால் இவர்களெல்லாம் ஒரு சிறு குப்பி விளக்குகளாக, ஒரு எல்லைக் கோட்டுக்குள் அடங்கித் தனித்தனியாக நிற்கிறார்கள். ஏன் இந்த நிலை? எல்லோரும் பொதுச் சேவை தான் செய்கிறார்கள். ஆனால் ஒன்று சேர்ந்து ஒரு கோபுர விளக்காகி எம்மினம் முழுவதற்கும் அறிவு ஒளி கொடுத்து ஒற்றுமையுணர்வையூட்டி ஓரணியில் திரள வைத்து தமிழினத்துக்கு ஒரு விடிவையேற்படுத்தினால் எமது வருங்காலச் சந்ததி இவர்களைப் போற்றிப் புகழும் என்பதை ஏன் இவர்கள் சிந்திக்கவில்லை?

' எந்தவொரு பொருள் தன்னைத் தான் காப்பாற்றிக்க வலுவற்று இருக்கின்றதோ அதை இயற்கை கூட ஒரு போதும் காப்பாற்ற வரமாட்டாது' என்று எமர்ஸன் என்ற அறிஞர் கூறியிருக்கிறார். இது எமக்கும் தான் . நாங்கள் தான் எங்களை, எங்கள் இனத்தைக் காப்பாற்ற வேண்டும். தனித்து நின்று சாதிக்கமுடியாது; சாதித்தாலும் சரித்திரமாகாது. துணிந்து நிற்கும் கரங்களுக்குத் துணைக்கரங்கள் உயரவேண்டும். முன்னின்று உழைப்பவர்களுக்கு பக்கபலமாக இணையவேண்டும். வடக்கும், தெற்குமாக , எதிரும் புதிருமாக ஒவ்வொரு திறமைசாலியும் நின்றால் எதிரிக்குத்தான் வாய்ப்புக்கள் அதிகம்.

மக்கள் நல்லவர்கள்; பலம் மிக்கவர்கள். ஆயினும் மனக்குழப்பங்களினால், கருத்துத் தெளிவின்மையால் , முழுதான விளக்கமின்மையால் பல்வேறு கோணங்களில் நிற்கிறார்கள். சோர்ந்து போய் ஒதுங்கி வாழ்கிறார்கள். இவர்களைப் பலமூட்ட இவர்களின் நல்ல இதயங்களை வெளிக்கொணர படித்த திறமையுள்ளவர்களால் முடியும். படித்தவர்களென்றால் நான்கு சுவர்களுக்குட் படித்தவர்களை மட்டும் சொல்லவில்லை. உலகைப் படித்தவர்களை , மனித நேயம் உள்ளவர்களை, அனுபவம் நிறைந்தவர்களை, அறநெறிகளிற் செயற்படுபவர்களைச் சொல்கிறேன்.

இரத்த ஆறு ஓடுகின்றது; மனிதர்களின் அவலக்குரல்கள் ஒலிக்கின்றன. மனிதனின் உடமைகள் தீயில் எரிந்து நீறாகின்றன. கண்ணீர் கடலாகப் பெருக்கெடுக்கிறது. கால்களில் நடக்க வலுவில்லை; நெஞ்சிலோ சோகத்தின் சுமைகள் கனக்கின்றன; மனித உடல்கள் தெருவோரத்தில் சின்னாபின்னமாகக் கிடக்கின்றன; நாய்கள் விசர் பிடித்து மனிதர்களைக் கடிக்கின்றன; பசி வயிற்றை எரிக்கிறது; நோய்கள் புதிது புதிதாய்த் தலையெடுக்கின்றன. இந்த நிலையிலும் இதயத்தில் ஒரு நம்பிக்கை ஒளி நம்மவர்களை இயக்குகிறது. அந்த நம்பிக்கை ஒளியை அணையவிடாது வளர வைக்க எமது அறிவையும், திறமையையும் வழங்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

நெல் விளையாவிட்டால் சோறு உண்ண முடியாது ; மீன் கடலில் இல்லாவிட்டால் கறிச்சட்டிக்குள் மீன் இருக்காது; கிணற்றுக்குள் நீர் ஊறாவிட்டால் எம் தாகம் தீர்க்கத் தண்ணீர் இருக்காது; இப்படி இயற்கை நீராக, உணவாக, காற்றாக எம்மை வாழ வைக்கும் வேளையில் நாங்கள் இயற்கைக்கும், நாம் பிறந்து வாழும் இனத்துக்கும் எங்களால் இயன்றதைச் சுயநலமின்றிச் செய்ய வேண்டும். போட்டிகள் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம் ஆனால் போட்டிகளில் சுயநலம் தலைநீட்டும் போது பொறாமைகள் உருவெடுக்கின்றன. ஒருவரையொருவர் தாக்கவும், இகழவும் முனைகிறோம். இதனாலே நாம் எமது தர்ம வழியிலிருந்து விலகி தகாத செயல்களை நாடுகின்றோம். அடுத்தவர் நல்லது செய்தாலும் அவர் எமக்குப் பிடிக்காதவர் என்ற ஒரே காரணத்தினால் அவர் செயற்பாடுகளில் பிழைகளைத் தேடி , அவர் அறிந்தோ அறியாமலோ விட்ட தவறுகளை பெரிதுபடுத்த பறைசாற்றுகிறோம். இதனால் பயன்களை விட பாதிப்புக்களே வளர்கின்றன. நன்மைக்குப் பதில் தீமைகளே உருவெடுக்கின்றன. சுயநலம் அழிக்கப்படவேண்டும், அதுவும் பொதுச் சேவையில் ஈடுபடுபவர்கள் சுயநலத்தை அறவே ஒழிக்கவேண்டும். ஒருவரின் புகழ் உயர்ந்தால் இன்னொருவரின் புகழ் வீழ்ந்துவிட்டது என்பது அர்த்தமாகாது. ஒரு தீபம் எரிந்தால் மற்றத் தீபத்தின் ஒளி தெரியாமற் போய்விடமாட்டாது. இதனால் அடுத்தவரின் உயர்ச்சி கண்டு , உள்ளம் புழுங்கி தனியாக நோவது வேண்டாம். நாங்கள் தான் எங்கள் நேரத்தையும் , உடல் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்கின்றோம். எங்கள் நற்பெயருக்கு களங்கம் தேடிக் கொள்கின்றோம்.

நாம் திறமைசாலி என்றால் எமது திறமையால் எமது மக்களுக்கும், உலகத்துக்கும் உதவிகள் புரியவேண்டும். இது கண்டு மற்றவர்கள் எம் திறமையை பாராட்டலாம், புகழலாம் அல்லது அப்படிச் செய்யாமலும் இருக்கலாம். எனினும் எமது கடமையை நாம் செய்து கொண்டே இருக்கவேண்டும். இதை விட்டு மற்றவர்களின் திறமைகளிலும் செயற்பாடுகளிலும் குறுக்கிடுவதிலேயே எமது திறமையையும், நேரத்தையும் செலவிடுவோமேயானால் எம்மைத் தண்டிக்க இயற்கையே தேடிவரும். எமது வாழ்நாள் நீண்டதல்ல, பதினாறு வயது மார்க்கண்டேயரல்ல நாங்கள் என்றும் இளமையோடும் பலத்தோடும் இருப்பதற்கு. காலம் செல்ல அறிவு தடுமாறும், கால்கள் பலமிழக்கும், கொடிய நோய்கள் கூட எங்களை நாடலாம். இதனால் உடலில் ஆரோக்கியமும், நெஞ்சில் உரமும் இளமை வேகமும் இருக்கையில் எமது கடமையைச் செய்வோம். நாம் பிறந்து வளர்ந்த மண்ணில் சுதந்திரமாக வாழ ஒன்றுபட்டு உழைப்போம். எமது இனம் ஒற்றுமைமிக்கது, சாதனைகள் படைக்க வல்லது என்பதை உலகரங்கில் பொறிக்க வைப்போம்.

கருத்து வேறுபாடுகள் இருந்தால் வட்டமேசை ஒன்றின் முன் சுற்றியிருந்து கோப்பி அருந்தியவாறே கருத்துக்களைப் பரிமாறி தெளிவை ஏற்படுத்துவோம். நீர் இடித்து நீர் விலகாது, நீர் ஆவியாகப் பறந்தாலும், பனியாக உறைந்தாலும் நீர் நீர் தான். இதுபோலத் தான் நாங்களும் பணத்தால், கருத்தால் நிலைமாறி இருந்தாலும் தமிழர்கள் தமிழர்கள் தான். இதனால் நாம் உயிரோடு இருக்கையிலேயே எம்மினம் வாழ ஒருங்கிணைந்து உழைத்து , மரணத்தின் பின்னும் மரணிக்காத மனிதர்களாய் எம் சந்ததிகளுடன் வாழ்வோம். ■



படிப்பகம்

www.padippakam.com



# அணைக்கும் கரங்கள்



காசி

'ஜெர்மன் மாப்பிள்ளை நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். பாருங்க படத்தை. சீதனம் ஒண்டும் வேண்டாமாம். என்ன சொல்லுறீங்க' என்று புறோக்கர் சோமண்ணை சொல்ல பொன்னம்மா முழுமனதுடன் மாப்பிள்ளையின் படத்தைப் பார்த்துவிட்டு மகள் ரஜனியிடம் கொடுத்தாள். நாணம் தலை தாழ்த்த அரைக்கண்களால் படத்தை ஆர்வத்துடன் பார்வையிட்ட ரஜனியின் முகத்தில் சம்மதத்திற்குரிய ரேகைகள் சங்கமித்தன.

'மாப்பிள்ளையின் பெயர் மணி. வெளிநாட்டிற்குப் போய் பத்து வருடங்களிற்கு மேலாகிறது. உறவினர்கள் எல்லாம் ஊரிலை இங்க கொழும்புக்கு வரமுடியாமை நிக்கினம் கலியாணத்துக்கு எப்படியும் வந்திடுவினம் எல்லாத்துக்கும் நான் பொறுப்பு. பெண்ணுக்கு நீங்க போடுற நகையைப் போடுங்க. வேறை ஒண்டும் கொடுக்கத் தேவையில்லை. கலியாணச் செலவு எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார். ஆடம்பரம் ஒண்டும் வேண்டாம். சட்டுப்புட்டென்று விடயத்தை முடிக்கவேண்டும். இல்லாட்டி எத்தனையோ பேர் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு கியூவிலை நிக்கினம். இதெல்லாம் உங்களுக்குச் சொல்லியே தெரியவேண்டும்'

பொன்னம்மா மகளைப் பார்த்துவிட்டு மகளின் முகத்தில் அவள் உள்ளத்துப் பூரிப்பைக் கண்டு கொண்டு

'எங்களுக்குச் சம்மதம் சோமண்ணை ஒருக்கா, தம்பியை இங்க கூட்டி வாங்கோவன் நேர பார்த்தால் அவருக்கும் ஒரு திருப்தியா இருக்கும்'

'அதுக்கென்ன பின்னேரமே கூட்டிக் கொண்டு வாறன்' என்றுவிட்டு புறோக்கர் சோமண்ணை புறப்பட்



படிப்பகம்

www.padippakam.com

டார்.

ரஜனியும் அம்மாவும் கொழும்பிற்கு வந்து ஆறுமாதங்கள் ஆகின்றன. கனடா மாப்பிள்ளைக்கு ரஜனியை கலியாணம் பேசி முற்றாக்கி கனடா வுக்கு அவளை அனுப்பவே இருவ ரும் கொழும்புக்கு வந்து லொச் ஒன் றில் தங்கியிருந்தார்கள். அங்கும் இங் கும் ரெலிபோன் கதைத்தே ஆயிரக்க ணக்கான ரூபாய்களை செலவழித் தும் கடைசியில் மாப்பிள்ளை வீட்டுக் காரர் வேறொரு வசதியான இடம் வந்து கைக்குள் சிக்கியதும் அதை இதைச் சொல்லி மறுப்புச் சொல்லி விட்டு மாறிவிட்டார்கள். இந்த நேரத்தில் புறோக்கர் சோமண்ணை யைத் தெரிந்தவர்கள் யாரோ பொன் னம்மாவுக்கும் ரஜனிக்கும் அறிமுகப் படுத்த அவரிடம் பொன்னம்மா பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை பார்க்கச் சொல்ல அவர் இரண் டொரு மாதங்களாகத் தேடி செருப் பறுத்து இந்த மாப்பிள்ளையின் விடயத்துடன் வந்திருந்தார்.

ரஜனி சின்னவயதிலிருந்தே செல்ல மாக வளர்ந்தவள். நினைத்தது நினைத்தவுடன் அவளுக்கு வேண் டும். இல்லாவிட்டால் அடம்பிடித்து வீட்டையே இரண்டுபடவைத்து விடுவாள். அந்தக் காலத்திலை ஐஸ் கிறீம் பத்து சதம் விற்ற நேரத்திலை ஐஸ்கிறீம்காரர் சையிக்கிளில் வர, வாங்கித் தரும்படி தாயார் பொன் னம்மாவைக் கேட்க அவளோ சில் லறைக் காசு இல்லாமல் நாளைக்கு வாங்கலாம் நேற்றும் குடித்தனி தானே என்று சொல்ல இல்லை இப்ப வேண்டும் என்று குதறிக் கூத் தாடி முத்தமெல்லாம் பிரதட்டை பண்ண தாயும் ஆற்றாமல் நூறு ரூபாய் நோட்டை மாற்றி பத்துசத ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுத்தாள். இப்படித்தான் அவள் எல்லா விட யங்களிலுமே பள்ளிக்கூடம் கூட ஊருக்கு அண்மையில் எல்லாப்பிள் ளைகளும் போகும் பள்ளிக்கூடம் போகமாட்டன் வேம்படிக்குத்தான் போவன் என்று ஒற்றைக்காலில் நின்று போய்ப் படித்தவள். கலியாண விடயத்தில் ஊர் மாப்பிள்ளை வேண் டாம். வெளிநாட்டு மாப்பிள்ளை தான் வேண்டும். அவளது பேச்சுக்கு அவள் வீட்டில் மறுபேச்சு இல்லை. மறுத்தும் பயனில்லை என்று தெரிந்து அவள் இஸ்டத்துக்கே ஆடினாள் பொன்னம்மா.

மாலையானதும் மாப்பிள்ளையுடன் புறோக்கர் வந்தார். வெளிநாட்டு வனப்பு உடலெங்கும் கோலமிட வந்து அமர்ந்த மணியைப் பார்க்க, இவனே தன் இலட்சியக் கணவன் என்று ரஜனியின் உள்ளம் இனிய ராகம் பாட, கல்யாணப் பேச்சை புறோக்கரும் பொன்னம்மாவும் பேசி கல்யாணம் நிச்சயம் ஆகியது.

பக்கத்து வீட்டுக் குமார் கொழும்புக் கும் யாழ்ப்பாணத்துக்கும் சாமான்கள் கொண்டு சென்று கடைகளுக்கு கொடுத்து இன்றைய நெருக்கடியான கட்டத்திலும் ஏதோ சம்பாதித்து தன் கடமைகளை செய்து கொண்டிருந் தான். அவனின் உதவியுடன் தான் ரஜனியும் தாயும் யாழ்ப்பாணத்திலி ருந்து கொழும்புக்கு வந்ததும் லொச்





படிப்பகம்

www.padippakam.com

சில் இடம் எடுத்ததும் அல்லாமல் எடுத்ததுக்கெல்லாம் அவனின் உதவி அவர்களுக்கு அவசியப்பட்டது. இப்பவும் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளுக்கு உடுபுடவை நகை வாங்க என்று அவனை ஏவினார்கள் பொன்னம்மாவும் ரஜனியும்.

இருபது இருபத்தைந்து பேரோடை கதிரேசன் கோவிலிலை கலியாணம் நடந்தது. பாவம் குமார் தன் வேலைகளையும் விட்டு குமர் கரை சேரவேண்டும் என்பதற்காக ரஜனியின் தந்தை, தமயன், உறவினர்கள் யாவரும் நின்று ஓடியாயடிச் செய்யும் அத்தனை கருமங்களையும் தானே தனியாக நின்று ஒப்பேத்தி வைத்தான். இறுதியில் முதலிரவிற்கு புதுமணத் தம்பதிகளை ஏயர்போட் ஹோட்டலிற்கு கூட்டிச் சென்று தங்க வைத்துவிட்டு தன் இடத்திற்குத் திரும்பியிருந்தான். மணியும் ரஜனியும் இளமையின் இராகங்களை அணுஅணுவாக அனுபவித்தனர். இன்பம் என்றால் இதுவல்லவோ இன்பம் இதைவிட வேறு இன்பமும் இவ்வுலகில் உண்டோ என்று இன்பக் கிறுகிறுப்பில் இருந்தனர் இருவரும்.

கொழும்பு பார்த்தனர்; கடைவீதிகளில் நடந்தனர்; காலிமுகக் கடற்கரையில் மடிமீது தலை வைத்து அலைகளின் துள்ளல்களைக் கண்டு மகிழ்ந்தனர். மணி தனது வெளிநாட்டு அனுபவங்களை ரஜனிக்கு கூறினான். ரஜனி தேனுண்டு மயங்கிய வண்டாக அவன் மார்பிலே சாய்ந்திருப்பாள். மணிக்குத் தலையிலே வழுக்கை விழுந்திருந்தது. ஆயினும் அது அவன் அழகுக்கு பங்கம் விளைவிக்கவில்லை. அவன் முகத்தில் அருச்சுனனின் கவர்ச்சி இருந்தது. பேச்சில் அசஜகசூரன். ஆங்கிலம் அவனுக்குத் தண்ணி பட்டபாடு. அவன் தனக்கு கணவனாக வந்தமைந்தது தான் செய்த பாக்கியம் என்று அகமகிழ்ந்தாள் ரஜனி.



மணி, மாமியாரையும் அப்பப்ப அக்கறையுடன் கவனித்துக் கொண்டான். பட்டுச் சேலைகள் வாங்கிக் கொடுத்து பணியாரங்கள் வாங்கி வந்து -தலைச்சுற்று என்றால் டாக்டரிடம் கூட்டிச் சென்று -நகைகள் சில கூட வாங்கிக் கொடுத்து தனது பாசத்தை நிரூபித்தான்.

ரஜனிக்கு விசா எடுக்க மணி பல தடவை ஜெர்மன் தூதராலயத்திற்கு சென்று வந்தான். நாட்கள் விரைவாக நகர்ந்தன. மணியுடன் தானும் ஜெர்மன் செல்லவிருப்பதால் நாட்களின் வேகத்தைப் பற்றி ரஜனி கவலைப்படவில்லை. தாயை விட்டுப் பிரியப்போகிறேனே என்று மனதில்



படிப்பகம்

www.padippakam.com

வேதனை பிறந்தபோது ஒரு சில மாதங்களில் அம்மாவையும் அவர் அங்கே கூப்பிட்டு விடுவார் என்ற தால் ஓரளவு ஆறுதலாக இருந்தது. குமார் வியாபார அலுவலாக யாழ்ப் பாணம் சென்றுவிட்டு ஒரு மாதங்க ழித்து கொழும்புக்கு வந்தான். வந் ததும் முதலில் ரஜனி தங்கியிருந்த லொட்ஜ்க்கு வந்தான். அவனுக்கு தான் ஜெர்மன் போகும் விடயத் தைப் பற்றி தெரிவித்ததுடன் தாயாரை கூப்பிடும் வரை அவவைக் கவனமாகப் பார்க்கும்படியும் கேட் டுக் கொண்டாள்.

மணி விமான ரிக்கற்றோடு வந்தான். நாளைமறுநாள் பயணம் என்றான். அவனது உடுப்புக்கள் அடங்கிய சூட் கேஸ் நண்பன் ஒருவன் வீட்டில் இருந்தது. அவற்றை எடுத்து வருவ தாகச் சொல்லி புறப்பட்டான்.

நேரமானது. ரஜனியும் தாயாரும் வழியை வழியைப் பார்த்து கண்கள் பூக்க கவலையுடன் இருந்தனர். நண் பரின் பெயரையோ விலாசத்தையோ கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் விட் டுவிட்டேனே தெரிந்து வைத்தாலா வது அங்கு போய் என்ன நடந்தது என்று விசாரிக்கலாம் ·ஏதோ எண் ணத்தில் அக்கறை இன்றி இருந்து விட்டேன் இப்போ யாரிடம் விசாரிப் பது என்று அவலப்பட்டாள் ரஜனி.

அப்போ திக்கற்றவனுக்கு தெய்வம் துணை வந்தது போல குமார் அங்கு வந்தான். அவனிடம் மணி இன்ன மும் வீட்டிற்கு வராததை அவர்கள் கூறி மனங்கலங்க, அவர்களைத் தேற்றி விடியும் வரை பொறுப்போம் சிலவேளை நாளை பயணம் என்ப தால் ஏதாவது விசேடமான பார்ட்டி ஏற்பாடு செய்திருந்தாலும் இருக்க லாம் என்று தன் மனதிற்குப் பட்ட தைக் கூறிவிட்டு மணி ஏற்கனவே தங்கியிருந்த லொச்சிற்கு சென்று விசாரித்து வரப் புறப்பட்டான் குமார்.

மணியைப் பொலிசார் பிடித்துக்கொ ண்டு போயிருப்பார்களோ என்று தான் ரஜனி பயந்தாள். அவளுக் கொன்றென்றால் அவள் இதயமே வெடித்திடும் நிலையில் அவன் மீது. அந்தக் குறுகிய நாட்களிலேயே உயிரை வைத்து உறவு கொண்டு விட்டாள்

மகளுக்கு ஆறுதல் கூறுவதும், சிறிது நேரத்தில் செல்ல மகளுடன் சேர்ந்து மனம் வருந்துவதுமாக இருந்தாள் பொன்னம்மா. நள்ளிரவு கடந்தும் தூங்காமல் மணியின் வரைவை எதிர் பார்த்திருந்தனர். அப்போ கதவை மெதுவாகத் தட்டும் ஒலி கேட்க இருந்த கவலையெல்லாம் பறந்து இன்பம் நெஞ்சை நிரப்ப ஓடோடி வந்து கதவைத் திறந்தாள் ரஜனி. கூடவே விரைந்து பொன்னம்மாவும் கதவண்டை வந்தாள்.

"மாமி ஏமாந்து போய்விட்டீங்கள்" என்று சோகம் கொட்ட நின்றான் குமார்.

" என்னடா குமார் சொல்லுறாய் ? மாப்பிள்ளை அங்க இல்லையே. . - பொலிஸ் கிலிஸ் பிடித்துப் போட் டாங்களோ. . என்று கேள்விகளை பொன்னம்மா அடுக்க. . .

" அம்மா கொஞ்சம் பொறுங்க" என்று தாயை அமைதியாக இருக்கும்படி சைகை காட்டி குமாரின் பதிலை எதிர்பார்த்தாள் ரஜனி.

" வேறென்ன ரஜனி புறோக்கரும் அவனும் உங்களிற்கு காதிலை பூ வச்சு விட்டாங்கள். அவன் மணி யைப் பார்க்கேக்கையே எனக்குக் கொஞ்சம் சந்தேகம் வந்தது என் றாலும் உங்கட நம்பிக்கையளைக் குழப்பக்கூடாது என்று விட்டுவிட் டன். கலியாணம் அவசரமாக நிகழ்ந் ததால் விசாரிக்க நேரமில்லை. கள் ளப்பூனை மாதிரி அவன் காக்கையன் கலியாணம் செய்து இரண்டு பிள்



படிப்பகம்

www.padippakam.com

ளையளும் இருக்காம் அவனுக்கு. . . .'
தலையில் குண்டடிபட்டது போல சுருண்டு விழுந்தாள் ரஜனி.
'தம்பி சரியாக விசாரிச்சனியே? யாரும் பகிடிக்கு கிருடிக்கு சொல்லியிருக்கலாம் வடிவாக நாலு பேரிட்டை கேட்டால் தானே உண்மை விளங்கும்' ஏமாற்றத்தின் இடையே ஒரு நப்பாசை தலைதூக்கக் கூறினாள் பொன்னம்மா.
'ஆள் இப்ப இங்க இல்லை. பிளேன் ஏறிவிட்டான். குமாரின் கோபம் வார்த்தைகளில் மின்னியது.
'அவரேன் என்னை விட்டிட்டுப் போறார் ? நாளைக்கு எல்லோ பிளைற் யாரோ கட்டுக்கதை கட்டியிருக்கினம்' கண்ணீருடன் விழுந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முனைந்தபடி கூறினாள் ரஜனி. அவள் வார்த்தைகளில் உயிர் இருக்கவில்லை.
மறுநாள் குமார் புறோக்கர் சோமண்ணையைத் தேடி நாலு உதை உதைத்து கேட்டும் தனக்கு ஒன்றும் தெரியாது என்றே பொழிந்தான். அவன் பகட்டு வார்த்தையில் தானும் ஏமாந்துவிட்டேன் என்று கைவிரித்தார் புறோக்கர்.
உண்மை தெளிவாகத் தெரிய வந்ததும் பொன்னம்மா படுத்த படுக்கையானாள். வைத்தியரின் மருந்துகளால் அவளைக் காப்பாற்ற முடியவில்லை. ரஜனி தனிமரமானாள். அவளை அழைத்துக் கொண்டு றெட் குறோஸ் (செஞ்சிலுவைச் சங்கம்) உதவியுடன் யாழ்ப்பாணம் புறப்பட்டான் குமார்.
அம்புலன்ஸ் போய்க் கொண்டிருக்கின்றது. குமாருக்குப் பக்கத்தில் ரஜனி அமர்ந்திருந்தாள். துக்கமும் துயரமும் அவளை அவன் மீது சாய வைத்தது. அவள் விழித்துப் பார்த்தாள். அவன் மீது சாயாது நிமிர்ந்திருக்கவும் எண்ணினாள். அப்போ



அவன் கரமும் அவளை ஆதரவுடன் அணைத்திருப்பதை அவளால் உணரமுடிந்தது.
அவள் மன அரங்கில் பழைய நினைவு ஒன்று மேடை ஏறியது. பள்ளியில் படிக்கும்போது அவளிடம் குமார் தன் ஆசைகளை வெளிப்படுத்தினான். அதற்கு ' போடா மொக்கா ! உன்னை மட்டுமல்ல இந்த ஊரிலை யாரையுமே நான் காதலிக்கமாட்டேன். என்னைக் கட்டிக்கிற தகுதி உங்க யாருக்குமே இல்லை ' என்றாள். அதற்குப் பிறகு குமார் அவளை திரும்பிக்கூடப் பார்த்தது கிடையாது. ரஜனி வீட்டில் கடைக்குப் போய்வரவோ அதை இதைச் செய்யவோ அவனை அவளோ தாயோ அழைத்தால் மறுக்காமல் வந்து அவர்களுக்கு உதவி புரிவான். காலம் செல்ல அவள் தந்தை இராணுவத்தின் குண்டு வீச்சுக்குப் பலியான பிறகு அவன் கேட்காமலே அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தான். இத்தனைக்கும் காதற் பேச்சோ, காமப் பார்வையோ, இரண்டுபட மொழிகிற தன்மையோ அவனிடம் இருந்ததில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அவள் கண்கள் குளமாகின. தொலைவில் இருக்கும் நிலவை நம்பி கையில் இருக்கும் விளக்கை எறிந்துவிட்டேன் என்று அவள் நெஞ்சு விரக்தியில் அழுதது. இவளைப் போலவே அகலக் கால் வைத்து நடக்கத் துடிப்பவர்கள் பலர். நாகரிகம், பணம், வெளிநாடு என்ற மோகங்களில் மனதைப் பறி கொடுத்து நல்லவர்களை, அன்புள்ளவர்களை, அருகில் இருந்தும் அவர்களை புறக்கணித்து பெரிய எடுப்பெடுத்து முன்பின் தெரியாதவர்களை அவர்களின் தேன் ஒழுகும் வார்த்தைகளிலும் போலி நடவடிக்கைகளிலும் கருத்தைப் பறிகொடுத்து நம்பிக்கை வைப்பவர்கள் ரஜனி போல் ஏமாந்து தனக்குத்தானே மண்ணை அள்ளிப் போடாமல் இருக்கவேண்டுமெனின் கண்ணையும் கருத்தையும் திறந்து அன்புக்கு முதலிடம் கொடுத்து வாழ முற்படவேண்டும். -

ரஜனியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டபடி "கவலைப்படாதே. நான் இருக்கிறேன் உனக்காக கலியாணம் செய்யாமலே நான் இருப்பேன். சின்ன வயதிலை நானும் நீயும் வீடு கட்டி விளையாடினோம். நான் கட்ட நீ அழிப்பாய். நீ கட்ட நான் அழிப்பன். தினமும் விளையாட்டின் இடையில் சண்டை பிடித்துக்கொண்டு அழுதவாறு வீட்டிற்குள் போவோம். ஆனாலும் மறுநாள் இருவரும் சிரித்த முகத்துடன் விளையாட வந்து நிற்போம். ஞாபகம் இருக்கிறதா ?

அவள் கண்ணீரின் இடையே இதழ் விரித்த புன்னகையும் தலையாட்டி நினைவிருக்கிறது என்பதைத் தெரிவித்தாள். " அன்று அந்த நெஞ்சங்களில் சுமைகள் இல்லை. இன்று நெஞ்சமெல்லாம் சுமைகள் நிறைந்து நிற்கின்றன" என்றான் குமார்.

அவன் கரத்தை தன் இருகரங்களுக்குள்ளும் பிடித்துக் கொண்டு " அன்று நீ கோபுரம் இன்றும் நீ கோபுரம் நான் தான் உன் உயர்ந்த மனத்தை கண்டு கொள்ளாமல் அறிவிலியாக இருந்துவிட்டேன். இன்று எல்லாத்தையும் இழந்துவிட்டேன். கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் போல் இப்போ தெரிகிறது உன் பெருமை" என்றாள் ரஜனி.

"இயற்கைக்கு மாறாக நடக்க வெளிக்கிடும்போது தடைகளும் தண்டனைகளும் வந்து எம்மை தாக்குகின்றன. இயற்கையுடன் ஒத்து ஓடுகையில் உயர்வும் நிம்மதியும் கிடைக்கின்றன இதனை மனதிற் கொண்டு வாழ்ந்தால் வாழ்க்கையை வளமாக்கலாம் கவலையை விடு" என்ற அவன், தன் கரங்களைப் பற்றிய அவள் கரங்களை " உன்னை நான் கைவிடமாட்டேன் " என்று உறுதியாக கூறுவது போல் இறுகப் பற்றினான். ●

# அகதிகளின் கரங்களிலே

காசி யாத்திரையிலே கூடவே பறந்து வந்த வண்ணத்துப்பூச்சியதற்கோ வயது ஐந்து
மாவட்டமதில் வட்டமாய் பறந்து வந்த வண்ணாத்துப்பூச்சியதற்கு வயது ஐந்து.
தன்னியக்கச் செய்தியொடு ஆன்மீகப் பொலிவோடு வந்துவிட்ட
வண்ணத்துப்பூச்சியதற்கோ வயது ஐந்து
எண்ணங்கள் பல கொண்டோர் எழுதிவிட்ட வண்ணத்துப்பூச்சியதற்கு வயது ஐந்து
புத்தாண்டு புலர்ந்திடவே புதுப் பொலிவோடு நறுமணம் காவி பறந்தே
வந்து செட்டை ஆட்டிக் குந்திவிடு இவ் அகதிகளின் கரங்களிலே

## வந்தமர்ந்துவிடு!

- ஜெயம்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் ஓவியருக்கு

ரு
து

மேற்கு ஜெர்மனியில் லூாடின் சைட் நகரில் (LUDENSCHIED) லூாடின்சைட் நக்றிக்ஸ்ரன் (LUDENSCHIED NACHRICHTEN) தினசரி பத்திரிகையும் ECE கட்டிடப் பொறியியல் நிறுவனமும் சேர்ந்து நடாத்திய மாபெரும் சுவர்ச்சித்திரங்கள் (அளவு 2 M . 1 1/2 M) போட்டியில் முதலாவது இடத்தை ஓவியர் கண்ணா பெற்றுள்ளார். ஒரு மாதகாலமாக (01. - 10. 92-31. 10. 92) நடைபெற்ற இப் போட்டியில் முதலாவது இடத்தை அவருக்கு மக்களே அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 361 அதிகப்படியான வாக்குகளை மக்கள் அவரின் ஓவியத்துக்குக் கொடுத்து முதல் இடத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

"வேலையில்லாப்பிரச்னை" யை தனது கருவாகக் கொண்டு தீட்டப்பட்ட நவீன ஓவியத்துக்கே மக்கள் முதலிடம் கொடுத்தனர். ஓவியத்தில் தன்னியல்பாக இயங்கும் இயந்திரங்களினால் தொழிலாளி வேலையை இழக்கின்றான். அதனால் மக்கள் வன்முறை, கொள்ளை இவற்றில் ஈடுபட முயல்கின்றனர். குழந்தைகள் ஏக்கத்தைத் தாயிடம் காட்டுகிறார்கள். இருப்பினும் முதலாளிகள் பாதிக்கப்படவில்லை என்பதனை அந்த ஓவியம் சித்தரித்து நின்றது. மேலைநாட்டில் வாழ்ந்தாலும் நவீன ஓவியத்தில் வரையப்பட்டாலும் ஓவியத்தை பார்த்ததும் தமிழனின் படைப்பு என இனம் காணும் வகையில் ஓவியநயம் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது பரிசாக சான்றிதழும் 400 D. M வழங்கப்பட்டது. "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்னும் பாரதியின் அடியினை செயற்படுத்துவதில் ஓவியர் மனம் மகிழ்கின்றார்.

**கவலை கொள்ளாதே மகனே**

உலகம் பார்த்து சிரிக்குதென்று
கவலை கொள்ளாதே மகனே
கவலை கொள்ளாதே,

பார்க்கும் மனிதன் அல்ல
கேட்கும் மனிதன், மனிதன் அல்ல
கவலை கொள்ளாதே மகனே

மரங்களைப்பார் செடிகளைப்பார்
காய்கனிகளைப் பார் மகனே
கவலை கொள்ளாதே...

உலைவாயை மூடினாலும் ஊர்வாயை
மூடலாமோ மற்றவர்களை நினைத்து
கவலை கொள்ளாதே மகனே கவலை
கொள்ளாதே,

மனதில் ஒன்றை மறைத்து வைத்து
வெளியில் ஒன்றை கதைக்கும்
மடைமை கெட்ட மனிதரடா
சந்திரனை பார்த்து நாய் குலைப்பதினால்
சந்திரன் தேய்ந்திடுமா சொல் மகனே

**- சின்னத்துரை ராஜகருணா**
லூாடன்சைட்



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு சிகரரெட் இயந்திரத்தின் சவால்



நான்
தினமும் பொரித்துக்கொண்டிருக்கிறேன்.
ஆனால்
என் சந்ததியை அழிப்பதில்
இந்த மனிதர்களுக்கு
அடங்காத ஆவல்.
என் சந்ததியைக் கொழுத்தி
அவர்களின்
மூச்சு சுவாசத்தை
உறிஞ்சும் இவர்கள்,
இரத்த அட்டைகள்.
என் சந்ததியினரின்
மரணத்தில்
இந்த மனிதர்கள்
இன்பம் காணும்
இராட்சத வண்டுகள்.
ஆனாலும்
என் சந்ததியினர்
இறந்த பின்பும்
இரகசியமாகப் பழிவாங்கும்
மோகினிப் பெண்கள்
பதுங்கிப் பாயும் புலியின்
வம்ச விருட்சங்கள்
இவர்களின்
தாக்குதலில்
எத்தனை மனித ஜீவன்கள்
மரணக் கிடங்கில்
விழுந்திருக்கிறார்கள்.

மனிதர்களின்
வாசகக் கூட்டில்
என் சந்ததியினரின் ஆவிகள்
வீடு கட்டுவதை
இவர்கள் அறிய மாட்டார்கள்
பாவம் இவர்கள்.

இவர்கள்
சுவாசக் கூட்டில்
என் சந்தகளின்
ஆவி வீட்டிற்கு
கான்சர் என்று பெயரிட்டு
புத்திசாலி போல்
வைத்தியம் தேடுகிறார்கள்
முட்டாள் மனிதர்கள்.

நாங்கள்
சூரனின் பரம்பரைகள்
வெட்ட வெட்ட
முளைத்துக் கொண்டே
இருப்போம்
எம்மை அழிக்க
வேண்டுமானால்
இவர்களும்
அழிய வேண்டும்.

- கி. சசி
பிராங்கோர்ட்

## வண்ண வண்ணப் பூச்சி



வண்ண வண்ணப் பூச்சி வாய் திறவாப் பூச்சி
வட்ட வட்டமாய் பறக்கும் வண்ணத்துப்பூச்சி
வரிவரியாய் பைந்தமிழைச் சொல்ல வந்த பூச்சி
வாழ்க்கை தன்னை சீர்திருத்த பாரெங்கும் பறந்து செல்லும் பூச்சி
பல விசயங்களைக் கூறிப் பல கலைஞர்களை உருவாக்கும் பூச்சி -நீ
கலையுலகில் கசங்கிடாத பூச்சி
கலையுலகுக்கு வந்து வயது ஐந்தாகும் பூச்சி
நீ வாழிய வாழிய வாழியவே பல்லாண்டு.

- சுகுணா



படிப்பகம்

www.padippakam.com



# நமது குழந்தைகள்------

மஞ்சுளா விஸ்வநாதன்

நாங்கள் எங்கள் பிள்ளைகளை இங்கு மிகச் செல்லமாக வளர்க்கின்றோம். இது நன்மை பயக்குமா ? அல்லது எதிர்காலத்தில் இந்தச் செல்லம் எமக்கு அளவுக்கு மீறிய அன்பு விபரீதங்களை விளைவிக்குமா ? என்று நாம் எண்ணிப் பார்த்துச் செயற்படுவது எங்களுக்கு மட்டுமல்ல எங்கள் வருங்காலச் சந்ததிக்கே பயன்மிக்கதொன்றாகும்.

பெற்றோருக்குப் பிள்ளைகள் மீது பாசம் இருப்பது புதுமையானதொன்றல்ல. ஆனால் அந்தப் பாசம் ஆக்கபூர்வமான முறையில் வழிநடத்தப் படவேண்டும். பாசம் மிகுதியால் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் செல்லமானது அவர்கள் உள்ளத்தில் ஒருவித பலயீனத்தை உருவாக்குகிறது. பிள்ளை கேட்கிறது என்பதற்காகக் கேட்கும் அத்தனை பொருட்களையும் வாங்கிக் கொடுப்பதுதான் அப்பிள்ளை மீது நாங்கள் கொண்டிருக்கும் அன்புக்கு அடையாளம் என்று சிலர் கருதிக் கொள்கிறார்கள். இது தவறானது. பிள்ளைகளுக்கு வேண்டிய அவசியமானவற்றை வாங்கிக் கொடுப்பது சரியானதே. அதே வேளை அவசியமல்லாத ஆடம்பரப் பொருள் ஒன்றை அது விளையாட்டுப் பொருளாக இருக்கலாம் அல்லது ஆடம்பரப்பொருளாக இருக்கலாம் எங்கேயோ யாரோ வைத்திருந்ததைப் பார்த்துவிட்டு பிள்ளை அடம் பிடிக்கிறது. எங்கள் அன்புப்பிள்ளை அழக்கூடாது என்று பணத்தை பார்க்காமல் வாங்கிப் பிள்ளையிடம் கொடுக்க, அப்பிள்ளை அதை இரண்டொரு நாட்கள் கொண்டு திரிந்து விளையாடிவிட்டோ அல்லது அணிந்துவிட்டோ மூன்றாம் நாள் ஒரு மூலையில் விட்டெறிந்து விட்டு இன்னொரு புதிய பொருளை வாங்கித் தரும்படி அடம் பிடிக்கும். எதைக் கேட்டாலும் அப்பா, அம்மா வாங்கித் தருவார்கள் என்று பிள்ளைக்குத் தெரியும். அது அடம்பிடித்தால் பெற்றோர் தன் வசம் திரும்புவார்கள் என்பதை அந்தப்பிள்ளை அறிந்து வைத்திருக்கிறது. இந்தக் காசை வைத்து நாங்கள் என்ன கோட்டையா கட்டப் போகிறோம் எல்லாம் எங்கள் பிள்ளைக்குத் தானே என்பார்கள் சில பெற்றோர்கள். உண்மை தான் ஆனால் இந்த நாடும் எமக்குச் சொந்தமல்ல; இந்த வருமானமும் இந்தக் குளுகுளுவாழ்க்கையும் எமக்கு நிரந்தரமல்ல. இந்நிலையில் எம்பிள்ளை நினைத்ததையெல்லாம் பெறமுடியும், கேட்டதையெல்லாம் அடையமுடியும் என்ற விதத்தில் வளர்ப்போமேயானால் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி தங்கள் சொந்தக் கால்களில் செயற்பட விளையும்போது நினைத்ததெல்லாவற்றையும் அடையமுடியாது என்ப



படிப்பகம்

www.padippakam.com

தைக் காலங்கடந்து கண்டு கொள்ளும்போது மனம் பேதலித்து ஏமாற்றத்துக்கு ஆளாகுகிறார்கள். இது இவர்களுடைய உள்ளத்தைப் பெருமளவில் தாக்கித் தோல்வி மனப்பான்மையை உருவெடுக்கச் செய்கின்றது.

வாழ்க்கையில் வெற்றிம் தோல்வியும் மாறி மாறி வரும் என்பதால், இவ்வுலகத்தில் நினைப்பதெல்லாம் கைகூடும் என்றல்ல. பாதி கைக்கு வரலாம், பாதி எம் கண்களில் படாமலே போய்விடலாம் என்பதைப் பிள்ளைகள் சிறுபராயத்திலேயே விளங்கிக் கொள்ளும் வண்ணம் பெற்றோர்களின் அன்புக் கவனிப்பு இருத்தல் வேண்டும்.

வெற்றி மட்டுமல்ல வாழ்க்கை; வெற்றியை விட அதிகமாகத் தோல்வியே மனிதவாழ்க்கையில் வந்து போகிறது. இதைச் சந்திக்கப் பணமோ உடல்வலிமையோ மட்டுமிருந்தால் போதாது. மனோ பலமிருக்க வேண்டும். இந்த மனோபலத்தைப் பிள்ளைகளுக்கு வளர்க்கவேண்டுமேயானால் ஆரம்பத்திலிருந்தே பெற்றோர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும். பிள்ளைகள் கேட்கும் எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொடுக்காது, அதற்கு வேண்டிய அவசியமான பொருட்களை மட்டும் பெற்றோர் வாங்கி கொடுப்பதிலிருந்து ஆசைப்படுவதில் சிலவற்றை அடையமுடியும், சிலவற்றை அடையமுடியாது என்பது பிள்ளைகளுக்கு விளங்கத் தொடங்கும். இதனால் ஏமாற்றங்களை அப்பிள்ளை சந்திக்கும்போது பேதலித்துப் போகாது தொடர்ந்து முயற்சிக்க முனையும்.

பிள்ளைகளை நாள் பூராவும் தங்கள் கண்ணுக்கு முன்னே இருக்க வைப்பதும், வெளியே போகாதே, அங்கே போகாதே, அதைச் செய்யாதே என்று பிள்ளைகளின் சுதந்திரத்தைக் கட்டிப் போடுவதும் அவர்களின் அறிவு வளர்ச்சியையும், உளவிருத்தியையும் பாதிக்கின்றன. பிள்ளைகள் மீது அதிக அன்பு செலுத்தினாலும் சரி, அதிக கட்டுப்பாட்டை விதித்தாலும் சரி பிள்ளைகளின் மனம் பெரியளவில் பாதிக்கப்படுகின்றது. அதிக கட்டுப்பாட்டுக்குள் சுதந்திரமின்றி வளர்ந்த பிள்ளைகள் எதிர்காலத்தில் பயந்த சுபாவமுள்ளவர்களாக, கோழைத்தன்மை மிக்கவர்களாக எதனையும் சுயமாகச் செய்யும்

**அழிவு**

பழைய வரலாறுகள்
புதிய நிகழ்வுகளாலும்
சில - புதிசுகளாலும்
அழிந்து போகின்றன.

**பணம்**

பத்தாம் வகுப்புப்
பாஸ் பண்ணாவிட்டாலும்
பலர் -
சிலருக்கு ஒதுங்கி
நிற்கிறார்கள்.
நாங்கள் எட்டும்
'சி' எடுத்தும்
எங்களைத் தேடமாட்டார்கள்.
அச் சிலருக்கு
அந்த ஒன்றுதான்
நிரந்தரத் தகுதி.

**வளர்ச்சி**

தனிப்பட்ட
கோபங்கள்
குரோதங்கள்
உருப்பட்ட
ஊரில் சாதித்து
இன்று
பிரிவுகள்
வளருது.

- தி. சி -



படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கையற்றவர்களாக இருப்பார்கள்.

உலகம் பொல்லாதது. இதில் அப்பாவி மக்கள் வாழ்வது என்பது எவ்வளவு சில்லெடுப்பு என்பது உங்களுக்கு தெரியும். எங்கள் பிள்ளைகள் வீரமும், தன்னம்பிக்கையும் மிக்கவர்களாக அறிவு விருட்சங்களாக எதிர்காலத்தில் திகழவேண்டும் என்றால், பெற்றோர்கள் தங்கள் அறிவுக் கண்களைத் திறந்து பிள்ளைகளை வழி நடாத்தவேண்டும்.

விளையாட்டுப் போட்டிகள், அறிவுப் போட்டிகள் போன்றவற்றில் பங்கு பற்ற வைத்து, வெற்றி, தோல்வி என்பவற்றைச் சந்திக்க வைக்க வேண்டும். பரிசு கிடைக்காவிட்டால் பிள்ளைக்கு ஏமாற்றம் வந்துவிடும் என்று சிலர் தங்கள் பிள்ளைகளைப் போட்டிகளில் பங்குபற்ற விடத் தயங்குகின்றார்கள். இது தவறானதாகும். வாழ்க்கை என்பது இயற்கை என்னும் சுழிக்குள் சிக்குண்டு சுழன்று கொண்டிருப்பது இதில் சித்தியின்மையும், சித்தி பெறுவதும், வெற்றியடைவதும், தோல்வியடைவதும் வழக்கமானது என்று பிள்ளைகள் புரிந்து கொள்ளச் சந்தர்ப்பங்களை உருவாக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது படித்த பிள்ளை பாஸ் பண்ணுகிறது. பயிற்சி செய்த பிள்ளை போட்டிகளில் முதலிடத்தைப் பெறுகிறது என்பதைக் கண்டு கொண்டு அந்தப்பிள்ளை தானும் முழுமூச்சாய் இயங்கும் திறனை விருத்தி செய்ய விளைகின்றது.

பிள்ளைக்குப் பணத்தைச் சேர்த்து வைத்தால் போதும் என்று சிலர் நினைக்கிறார்கள். பணம் என்பது தேங்கி நிற்க விரும்பாத தண்ணீர் போன்றது. அது எங்கே கைநழுவி ஓடமுடியுமென்று சந்தர்ப்பம் பார்த்து நிற்பது. இதனால் பணம் என்ற ஒன்று மட்டுமே பிள்ளையின் எதிர்கால வாழ்க்கைக்கு உறுதுணை என்று நம்பியிராமல் என்றென்றும்

# வண்ண வண்ண பூச்சி

வண்ணத் தமிழ் சொல்லெடுத்து
வந்ததிங்கு ஒரு பறவை
தொன்று தொட்டு வந்த தமிழ்
சொல்லெடுத்து வந்த ஒரு பறவை
பல்லவன் பாடிய தமிழ் புகழ்
பாரெங்கும் பரவிட இங்கு
பால் மணம் மாறாது
பாடி வந்ததிங்கு ஒரு பறவை
வண்ணத் தமிழ் ஓசை
வானளாவும் சென்று
வாசகரிடம் சென்றடைந்து
வாசம் வீசி வந்ததிங்கு ஒரு பறவை
கன்னி அவன் தமிழ்
கடல் கடந்து வந்தாலும்
கரை தாண்டாத தமிழ் அதன்
கலாச்சாரம் மாறாது
கலைநயம் கவிநயம் மாறாது
காத்து வந்த திங்கு ஒரு பறவை
காத்து வந்த பறவை
கடந்து வந்த பறவை
ஐந்து வருடம் கடந்தாலும்
அதன் நிலை தழும்பாது என்றும்
வந்த பாதை மாறாமல்
வாசம் என்றும் குன்றாமல்
வருடம் பல மாறி மாறி
ஐந்தாறு கடந்தாலும்
வாசம் கொண்டு வரும் பறவை
வண்ணத்துப் பூச்சி.
பைந்தமிழின் வாசம்
இப்பரந்த உலகினில்
பரப்பிட வந்த பட்டாம் பூச்சியே
நீ வாழ்க இன்னும்
பல நூற்றாண்டு காலம்
வாழ்க வண்ணத்துப் பூச்சி.

- தையூரான்
செ. ஐயம்பிள்ளை




படிப்பகம்

www.padippakam.com

நிரந்தரமானதும், சென்ற இடமெல்லாம் சிறக்க வைக்கும் உற்ற நண்பன் போல் காக்கும் கல்வியைப் பிள்ளைகள் ஆர்வத்துடன் கற்க வழி வகுக்கவேண்டும். அதே வேளை உடற்பலத்தையும், மனோபலத்தையும் விருத்தி செய்யும் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தவேண்டும். 'ஓடி விளையாடு பாப்பா..' என்று சிறுவர்களுக்கு அன்பாகக் கட்டளையிடும் பாரதி ஓய்வு கூடாது என்று சொல்லிவிட்டுத் தனியாக விளையாடாதே அப்படி விளையாடுவதால் பிள்ளையின் உள்ளமோ உடலோ அபிவிருத்தியடையாது என்பதை வலியுறுத்துவதற்காக கூடி விளையாடு அப்போ தான் ஒற்றுமையும், நட்பும் வளரும். சிறுவயதிலேயே இப்படி ஒரு சமுதாய வாழ்வைப் பழகினால் தான் வளர்ந்த பின்னும் ஊரோடு மூத்து எல்லோருடனும் கலந்து பழகி கஷ்டநஷ்டங்களில் பங்கு பற்றும் மனோபக்குவத்தைப் பெறமுடியும் என்பதை 'கூடி விளையாடு பாப்பா..' என்று ஒரு வரியிலேயே திணித்து வைத்திருக்கிறார்.

பிள்ளைகளின் மனதைப் பெற்றோர்கள் பக்குவமாக வளர்க்க வேண்டும். சிறுவயதில் பிள்ளைகளுக்கு ஏற்படும் அனுபவங்களே எதிர்காலத்தில் அவர்களை நல்லவர்களாக்கவும் தீயவர்களாக உருவாக்கவும் காரணிகளாகின்றன.

கட்டிலே சுகம் என்று தூங்கிக் கொண்டிருப்பதனால் வெறும் கனவு மட்டும் தான் காணமுடியும். கஷ்டமோ , நஷ்டமோ பாதையில் இறங்கி நடக்க முற்படுபவனுக்குத் தான் பயணத்தின் தன்மை புரியும். பெற்றோர்கள் முயற்சியின்றிச் சோம்பலுக்கு அடிமையாகும் போது பிள்ளைகளும் அவர்கள் வழியைப் பின்பற்றுகிறார்கள். இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் இலக்கற்றதாய், வெற்றியீட்டாத வாழ்க்கையாய், வறுமை இருள் சூழ்ந்த குடும்பமாய்



பின் தள்ளவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகிறது. இதனால் தான் ஔவையார் "ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு" என்று கூறியிருக்கிறார்.

எமக்கும், எம் பிள்ளைகளுக்கும் இங்கு இருக்கும் வசதிகளிலும் வாய்ப்புக்களிலும் நூற்றில் ஒரு பங்கு கூட எங்கள் தாயகத்தில் இருக்கும் எமது சகோதரங்களுக்கும், அவர் பிள்ளைகளுக்கும் கிடைப்பதரிது. ஷெல்லடிக்கும், குண்டு மழைக்கும் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு பள்ளிக்கூடம் செல்வதும், பஞ்சத்தின் பிடியில் பாதி வயிறு கூட நிரப்ப உணவின்றி ஏங்கித் தவிப்பதும் ஒதுங்குவதும் , ஓடுவதும், பதுங்குவதும், பயப்படுவதும் என்று ஒவ்வொரு நாளையும் உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு அடுத்த கணம் எப்படியிருக்கும் ? யார் உயிர் போகிறதோ ? யார் ஊனமாகின்றார்களோ ? என்று எதிர்பார்த்தவாறு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு எமது பிள்ளைகள் வளர்ந்து அறிஞர்களாக, உள்ளத்துணிவுள்ளவர்களாக எதிர்காலத்தில் தாயகத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் தங்களால் இயன்ற கடமையைச் செய்ய முன்வரத்தக்க வகையில் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். இது ஒவ்வோர் பெற்றோரதும் தலையாய கடமையாகும்.



படிப்பகம்

www.padippakam.com



கண்ணில் தெரியும்
காட்சியை எல்லாம்
நேரே வரைவதில்லை,
இயற்கையைப் பார்த்து
புது இயற்கையை
படைப்பதில் கலைஞனுக்கு
ஈடிணை ஏதும் இல்லை.
மறு பதிப்புக்களால்
எம் கலையின் மதிப்போ
உயர்வதில்லை
நிஜங்கள் நிழலுக்கு
வர்ணத்தைத் தீட்டி - மீண்டும்
அந்த நிஜங்களை மீட்க
உன் விரல் அசையவில்லை
பார்த்ததும் புரிய
ஒன்றும் ஒன்றும்
இரண்டென்பது போன்றா
இன்றைய கலையின் நிலை
சிந்தனையின் பின்பே
விருந்தானால்
அந்த கலைக்கொரு விலை இல்லை
மனிதனை படைத்தவன் பிரமன் என்றால்
அந்த பிரமனை படைத்தவனும் நீயே
நீயே கலைஞன் - படைப்பின் கலைஞன்.

- **கண்ணா**
லூட்டன்செட்

# மனமும் கண்ணும்

பொய்யே பேசாதவர் எனப் போற்றப்படும் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்:
அணிச்சம்பூக் கால்களையாள் பெய்தாள்
நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை.
நலம் புனைந்துரைத்தல்.
இருக்கிற பூக்களில் எடை குறைந்த பூ, மென்மையான பூ அணிச்சம் பூவே. இது மறைந்து போன பூ. நாம் இப்போ ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமேயானால் இந்த டிசம்பர் மாதத்தில் ஒரு வகைப் பூவைப் போல் அணிச்சம் பூ இருக்கின்றது எனலாம்.
அன்று அவருக்கு நிறைய வேலை. அணிச்சம் பூவைத் தொடுத்து தலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இலகுவான வழியைக் கண்டு பிடிக்கிறாள். அந்தப் பூவின் காம்பைக் கிள்ளாமலே அணிச்சம் பூவைத் தலையில் சூடிக் கொள்கிறாள். அந்தப் பூவைத் தலையில் சூடியதும் அதன் எடை தாங்காது இடுப்பு முறிந்து அவள் செத்தாள் எனக் கூறுகிறார் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர்.
ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலே வந்த ஒரு கவிஞன் கம்பன் சொல்கிறான்:
வெய்யோன் ஒளிதன் மேனியின்
விரி சோதியில் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ



படிப்பகம்

www.padippakam.com

மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவென்பதோர்
அழியா அழகுடையான்.
.... (கங்கைப் படலம்)
எனக் கம்பன் பாடினான்
அவனுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வந்த கவிஞர் சொன்னார்:
'இது நடையா இது நடையா ஒரு
நாடகமன்றோ நடக்குது
இடையா இது இடையா அது இல்
லாதது போல் இருக்குது'
இங்கே அந்தக் காட்சியையும் பார்க்கிறீர்கள்.
அப்படிப் போன மனம் எறும்பு முதல் யானை ஈறாக எல்லாவற்றையும் காக்கின்ற இறைவனைப் பற்றி திருநாவுக்கரசு நாயனார் திருப்பாசுரத்தில் எவ்வாறு குறிப்பிடுகின்றார் என்று கவனிப்போம் -

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப் பட்டாள் நங்கை தலைவன் தாளே.
அந்தத் திருப்பாசுரம் இவ்வாறு பெருமானிடத்தில் கண்ணும் மனமும் ஒன்றி விட்டதை எடுத்துக் காட்டுகின்றது. ●

அளவையூர் தி. லம்போ

ஒரு நாள் காலை
குடையிடம் கேட்டேன்:

"நீ விரும்புவது மழையில்

நனைவதையா?
வெய்யிலில் காய்வதையா?

குடை புன்னகைத்தது.
பின் சொன்னது:
"என் கவலை
இதைப்பற்றியல்ல"

நான் மீண்டும் கேட்டேன்:
"பின் எதைப்பற்றி
உன்கவலை...."

குடை சொன்னது:
"என் கவலை எல்லாம்
எப்படிப்பட்ட பேய்
மழையானாலும்
என்மக்களை நனைய
விடக்கூடாது,
எப்படிப்பட்ட வெயிலானாலும்
என்மக்களைக் காயவிடக்
கூடாது"

-அய் குங்
(சீனப்புரட்சிக் கவிஞர்)



படிப்பகம்

www.padippakam.com

# கோக்சவர்லாண்டில் தமிழ்க் கல்வி

ஆன்ஸ்பேர்க் (ARNSBERG) வாழ் இளைஞர்களினால் உருவாக்கப்பட்ட ஈழவாலிபர் விளையாட்டுக்கழகம் கோக்சவர்லண்ட் (HSK) மாநிலத்தில் வாழும் தமிழ் மக்களுடன் இணைந்து 1992ஆம் ஆண்டில் முத்தமிழ் விழாவை நடாத்தியது. இதன் பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்த மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கென்று ஒரு மன்றம் அமைக்கவேண்டுமென்று பலரும் தங்கள் ஆவலை வெளிப்படுத்தியதால் 'கோக்சவர்லண்ட் தமிழர் ஒன்றியம்' என்ற அமைப்பு உருவானது. விளையாட்டுக் குழு, கலைக்குழு, கல்விக்குழு என்ற அமைப்புக்களை உள்ளடக்கியது.

H. S. K தமிழர் ஒன்றியம், H. S. K வாழ் தமிழ்ச்சிறுவர்கள் தமிழ்க்கல்வி கற்பதற்காக வகுப்புகளை அமைத்துக் கொடுத்து அவற்றை வழி நடத்துவது, அதன் உன்னதமான செயற்பாடுகளில் ஒன்றாகும்.

மெசடே, ஆன்ஸ்பேர்க், நிகைம், பிறிலோன், ஒல்ஸ்பேர்க் என்ற ஐந்து இடங்களில் இதுவரை தமிழ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. இவை தொடர்ந்து முன்னேற்றமான முறையில் செயற்படுவதற்கு பெற்றோர்கள் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

எமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் அவசியத்தைப் பெற்றோர்கள் உணர்ந்தால் தான் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியை ஊட்ட ஆர்வம் ஏற்படும். அயல் வீட்டுப்பிள்ளை தமிழ் படிக்கப் போகிறது என்பதற்காக எம்பிள்ளையையும் ஏனோ தானோ என்று படிக்க அனுப்புவது அல்ல ஆர்வம், தமிழின் பெருமையை உணரவேண்டும்; தமிழ்நூல்களிலுள்ள அளப்பரிய தத்துவங்களை அறியவேண்டும்; வாழ்க்கைக்கு வேண்டிய நீதி நெறிகளை எம்முன்னோர் நூற்றுக்கணக்கான புத்தகங்களில் முத்துக்களாகப் பதித்து வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவற்றை எமது சந்ததி படித்துப் பயன்பெறவேண்டுமானால் தமிழில் பூரண அறிவு பெறவேண்டும். இது மட்டுமல்ல ஜெர்மன் மொழி தெரியாத எமது உறவுகளுடன் உரையாட, மனம்விட்டு உறவாட தாய்மொழி தெரிந்திருக்க வேண்டும். இவற்றை நெஞ்சிலிருத்திப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அக்கறையுடன் தமிழ்கற்பிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது ஒற்றுமையைப் பேணவும் கலை, கலாச்சாரம், தமிழறிவு என்பவற்றை வளர்க்க முன்னின்று உழைக்கும் கோக்சவர்லண்ட் தமிழர் ஒன்றிய நிர்வாகத்துக்கும், அதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கும் H. S. K வாழ் தமிழ் மக்களுக்கும் வண்ணத்துப் பூச்சி தலைவணங்குகிறது. ●



படிப்பகம்

www.padippakam.com



# "கடவுள் எப்போதும் உன்னோடு இருக்கின்றார்"

சறோஜினி ஜெயபாலன்

"ஆத்மா" என்பது உண்மையான பொருள். அது இதயத்தினுள் வீற்றிருக்கிறது. ஆசாபாசங்களுக்கும், துக்கங்களுக்கும் இடையில் மறைந்து கிடக்கிறது. இந்த புனிதமான பொருளை தியானத்தினால் தான் அடையமுடியும்.

வேறு ஓரிடத்திலும் தேடவேண்டாம், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இந்த ஆத்மா உள்ளது. அதை எப்படி காண்பது?

ஆடம்பர ஆசைகளை அறவே ஒழித்து புலன்களும், மனமும் அடங்கப் பெற்றும் உள்ளத்தில் தாகம் ஏற்பட்டதும் ஆத்ம தரிசனம் கிடைத்து விடுதலை பெறுவார்.

உடல் ஒரு வண்டி, ஆத்மா வண்டியின் சொந்தக்காரன், அறிவு வண்டியோட்டுபவன். ஐம்புலன்கள் குதிரைகள். மனமே குதிரைகளின் கடிவாளம். ஐம்பொறி (உடம்பு, கண், வாய், செவி, மூக்கு ) களுக்குரிய விஷயங்கள் வண்டி செல்லும் பாதை

ஆத்மாவும் , புலன்களும் , மனமும் ஒன்றாகி நின்று வாழ்க்கை அனுபவம் பெறுகிறது.

நல்லறிவு பெற்றவன் கடிவாளமாகிறது. மனதை சரியாகப் பிடித்து - நல்ல குதிரைகளை சிறந்த ஓட்டி போல புலன்களை அடக்கும் விஷயங்களுக்கு இடையில் உடலை நடத்துவான். நல்லறிவு பெறாதவன், கடிவாளத்தைச் சரியாகப் பிடிக்காதவனின் நிலையை அடைவான்.

விருப்பங்கள் நீங்க பற்றுகள் நீங்கும். பற்று நீங்க விருப்பங்கள் நீங்கும். விடுதலை மார்க்கம் வர வர எளிதாகும். பரம் பொருளை மூடி மறைக்கும் பற்றுக்களே ஒவ்வொன்றாகக் கழற்றித் தள்ளி, பரம் பொருளை தன் உள்ளத்தில் காண வேண்டும்.

மாசற்றதும் - இறவாததுமான மெய்ப்பொருள் மனிதனைப் படைத்த கடவுள் அவனுடைய சக்திக்கேற்ப சத்வ, ராஜச, தாமஸ என்ற மூன்று விதப் பண்புகளையும் அவனுக்குக் கொடுத்திருக்கிறார்.

சத்வகுணம் - தூய்மை, அமைதி, சமநிலையான கண்ணோட்டம்

ராஜசகுணம் - வேகம், துடிப்பு, கொதித்து எழுதல், அடித்து வீழ்த்தல்

தாமரகுணம் - இறுக்கம், அசைவற்ற தன்மை என்ற பண்புகளையும் குறிக்கின்றது.

தெள்ளிய நீரோடை தூய்மையைக் காட்டுகிறது.

புயல் வேகத்தையும் துடிப்பையும்

புழுக்கம் நிறைந்த வானில் இறுக்கத்தையும் அசைவற்றதையும் காட்டுகிறது.

பரம் பொருள் எல்லாவற்றிலும் பரவியுள்ளது என்பதற்கு இது ஒரு உதாரணம்.



படிப்பகம்

பிறந்த அனைத்துமே சர்வ குணத்தை ஏதும் ஓர் பிறவியில் அடைந்திட வேண்டும். இது ஒரு நியதி.
நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் நமது 'பூர்வ ஜென்ம கர்மவினை' அடிப்படையை அமைக்கிறது. என்பது இந்து மதம் கூறும் தத்துவம். அதுவே ஆராய்ந்து பார்த்தால் உண்மையுமாகிறது. இதன்படியே நமது முயற்சிகளும் முன்னேற்றமும் அமைகின்றது.
கடந்த பிறவி, இந்தப் பிறவியின் செயல்களையும், இப்பிறவியில் செய்வது அடுத்த பிறவியில் நடப்பதையும் தீர்மானிக்கின்றன.
இறப்போ பிறப்போ இச்சூழற்சியை மாற்றுவதில்லை இதைப்புரிந்து கொண்டு விட்டால் நம்முடைய இன்றைய வாழ்க்கைக்கு நாமே பொறுப்பாளி என்பதை உணர்ந்து கொள்வோம். நாம் இன்று எப்படி இருக்கின்றோம் என்பதையும் நாம் அடுத்த பிறவியில் எப்படி இருக்கப் போகிறோம் என்பதையும் நாமே தீர்மானிக்கிறோம், என்று தெரிந்து கொள்ள வேண்டும்.
நம்முடைய நோக்கமும், முயற்சியும் நல்லதாக இருந்தால் வெற்றி கிடைக்காவிட்டாலும் , நாம் கலங்க வேண்டியதில்லை. கிடைக்காததைக் கர்மவினை அடிப்படையிலும் கிடைத்ததை மேலும் முன்னேறுவதற்குரிய அடிப்படையாகவும் கொள்ளுவதற்கு அது உதவும். வெளியே கிடைப்பது எதுவானாலும் உள்ளூர முன்னேற்றம் கிடைப்பதற்கு இது பெரிதும் உதவுகிறது. உலகத்தில் நம்மைப் படைத்த போதே கடவுள் ஆசாபாசங்களையும் உருவாக்கி விட்டு விட்டார். இவற்றை அறவே வெறுத்து ஒதுக்கி நம்மால் வாழமுடியாது. நமக்கு நாமே பிடிவாதமாக தடைகளை விதித்துக் கொண்டு, கண்ணை மூடி வாழமுயன்றால், அது நமக்கு விடுதலையை அளிக்க முடியாது. நம்மைச் சுற்றி எது நடந்தாலும் நமது பார்வையில் எது பட்டாலும் , அது கடவுள் உண்டாக்கியதே என்று பழகக் கற்றுக் கொள்ளவேண்டும்.
குழந்தைப் பருவத்தில் இருக்கும் ஆசைகள் வளர்ந்த பையனுக்கு இருப்பதில்லை. வளர்ந்த பையனின் ஆசைகள் வாலிபனுக்கு இருப்பதில்லை. வாலிபனின் ஆசைகள் வயதான பிறகு தெளிந்து போய் விடுகின்றன.
இந்த மாறுதலை நாம் வளர வளர அளித்து நம்மைப் பக்குவப்படுத்துபவன் யார். இறைவன் தானே!
அந்த இறைவனிடம் பற்று வைத்து பூரண சரணாகதி அடையக் கற்றுக் கொண்டால் மனம் தன்னாலேயே பக்குவப்பட்டு விடும். கடவுள் எப்போதும் உன்னோடு இருக்கின்றார். நீ சிறிதளவு முயற்சி செய்தால் அவர் உனக்குக் கை கொடுத்து உதவி செய்வார். துன்பதுயரங்கள் எல்லாவற்றிலும் இருந்து நம்மைக் காப்பாற்றுபவர் அவரே.
தியானத்திற்கு உனக்கு அதிகம் பிடித்த கடவுள் வடிவத்தை எடுத்துக் கொள். முதலில் தெய்வத்தின் திருவடித்தாமரைகளில் உனது தியானத்தை தொடங்கு. ஆரம்பத்தில் வெற்றி பெறாவிடினும், விடாது அதனை தொடர்ந்து செய் வெற்றி பெறும் வரையில் நீ ஏன் நிறுத்தவேண்டும்? இறைவனிடத்தில் உன்னை முற்றிலும் அர்ப்பணம் செய்துவிடு. நாளாந்த சாதனையின் மூலமாக உனது ஆன்ம ஈடேற்றத்திற்கு உனது பங்களிப்பைச் செய்வதுடன், சமுதாயத்திலும் நீ புனிதமானவனாய்க் கொள்ளப்படுகின்றாய். சமுதாயம் சுத்திகரிக்கப்பட்டதாகப் புனிதத் தன்மையடையும். ●

www.padippakam.com

# தமிழ்மொழிக் கல்வி



உலகில் உள்ள செல்வங்களுள் கல்விச்செல்வமே சிறந்த செல்வமாகும். ஒருவர் பூரண மனிதனாக செல்வச்சிறப்புடன் வாழ் வாங்குவாழ வேண்டுமானால் கல்விச் செல்வம் அவசியமாகும். எனவே நாம் இன்பம் பயப்பதாய, எப்பிறப்பிலும் அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை எமது குழந்தைகளுக்கு ஊட்டவேண்டும்.

குழந்தைகள் ஆரம்ப கல்வி தாய்மொழியில் அமைதல் வேண்டும். அவ்வாறு அமைந்தாற் தான் குழந்தைகள் பிற்காலத்தில் புரிந்துணர்வு உடையவர்களாக விவேகம் நிறைந்தவர்களாகி பூரண மனிதர்களாக மிளிர முடியும் என்பது அறிஞர்களின் முடிவாகும்.

இன்று ஈழத்தை விட்டு புலம் பெயர்ந்து ஜெர்மனியில் வாழும் தமிழ்க்குழந்தைகள் வசதியீனம் காரணமாக இந்நாட்டு மொழியையே ஆரம்ப மொழியாகக் கற்று வருகின்றார்கள். இதனால் தாய்மொழியாகிய தமிழ்மொழியில் எழுதவோ, வாசிக்கவோ, ஏன் தமிழைச் சரியாகப் பேசவோ முடியாத ஓர் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை யாவரும் அறிவீர்கள்.

எனவே எம் தமிழ்ச் சிறார்களின் எதிர்காலம் பாழடைவதை தவிர்க்கும் நோக்குடனும் ஏனையோரின் தமிழ் மொழித் திறனை விருத்தி செய்யவும் உலகத் தமிழர் இயக்கத்தின் கல்விச்சேவை முன் வந்துள்ளது.

**நோக்கங்கள்:**

இலங்கைப் பாட நூல்களைத் துணையாகக் கொண்டு ஜெர்மனியை ஒன்றிணைத்த பாடவிதானத்தை நடைமுறைப்படுத்தல்.

ஜெர்மனியில் பரவலாகப் பாடசாலைகளை அமைத்தல்.

தற்பொழுது இயங்கும் கல்விநிலையங்களுடன் இணைந்து கல்வி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்குதல். மொழியாற்றலை விருத்தி செய்யும் நோக்குடன் பேச்சு, எழுத்து, கவிதை, நாடகம், நடனம், சங்கீதம் ஆகியவற்றுள் போட்டிப் பரீட்சைகள், கலைவிழாக்கள் ஆகியவற்றை நடாத்துதல், பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்குதல்.

தமிழ் மாணவர்களின் கல்வி சம்பந்தப்பட்ட ஏனைய முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஈழப்பாடநூல்களைத் துணையாகக் கொண்டு அந்நூல்களிற் காணப்படும் விடயங்களில் இன்றைய வாழ்க்கைக்குப் பொருத்தமானவற்றை கால அவகாசத்திற்கேற்ப தமிழ்மொழி, சமூகவியல், சமயநெறி, கலை, கலாச்சாரம் என்பவற்றைப் பேணி வளர்க்க வல்லதும், மாணவரிடையே ஏற்றதாழ்வற்ற



படிப்பகம்

www.padippakam.com

நற்பண்புகளையும் விவேகத்தையும் விருத்தி செய்யக்கூடியதுமான கல்வியே கற்பிக்கப்படல் வேண்டும். அதற்கு உதவியாக சில விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**பொதுவிதிகள்**

1. தமிழ்மொழி, சமூகக்கல்வி, ஆகிய பாடங்கள் கட்டாயமாகவும் சமயநெறி, ஆங்கிலம், ஜெர்மன் மொழி, இசை நடனம் வசதி போலவும் கற்பிக்கலாம்.
2. மாணவர்களை இயன்றவரை தரம் பிரித்து கற்பிப்பது பயனுடையது
3. ஜெர்மனி முழுவதும் ஒரே பாடநூலையே உபயோகித்தல் வேண்டும்.
4. மாணவர் வரவுப்பதிவு (வரவு இடாப்பு) எல்லாக் கல்வி நிலையங்களிலும் வைத்திருத்தல் வேண்டும்.
5. வருடத்தில் இரண்டு முறையோ, மூன்று முறையோ மதிப்பீட்டுப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு அதற்கான புள்ளிகள் பதிவேட்டிற் பதியப்படுவதுடன் மாணவர் தேர்ச்சி அறிக்கைகள் (றிப்போர்ட்) வழங்கப்படல் வேண்டும்.
6. வருடந்தோறும் ஆண்டிறுதிப் பரீட்சை மேற்படி கல்விச் சேவையினால் கார்த்திகை கடைசி வாரத்தில் நடாத்தப்படும். இது வகுப்பேற்றப் பரீட்சையாகும்.
7. தை மாதம் முதல் மார்கழி மாதம் வரை கற்பித்தல் ஆண்டாகும்.
8. சமூக சேவை நிறுவனங்களின் உதவியுடனோ தனியாரினாலோ நடாத்தப்படும் கல்வி நிலையங்கள் இச்சேவையுடன் இணைந்து செயற்படவோ, ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவோ முடியும்.
9. இச்சேவையினால் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகள் 'தமிழாலயம்' எனப் பெயர் பெறும்.

**பரீட்சைகள்**

1. இக்கல்விச்சேவையின் பாடவிதானத்துக்கு அமைய கற்பிப்பது பொதுப்பரீட்சை நடாத்துவதற்கு உதவியாக அமையும்.
2. இலங்கைப் பாடநூல்களைத் துணையாகக் கொண்டே வினாத் தாள்கள் தயாரிக்கப்படும். இச்சேவையின் ஆலோசனையுடன் கற்பிப்பது பயனுடையது.
3. ஆண்டிறுதிப் பரீட்சையில் தோற்ற முடியாத கல்வி நிலையங்களில் கல்வி கற்ற மாணவர்கள் தகுந்த காரணம் காட்டுமிடத்து மதிப்பீட்டு பரீட்சையின் பெறுபேறுகளைக் கொண்டு வகுப்பேற்றப்படலாம்.
5. கல்வி நிலையங்களிற் கல்வி கற்க வசதியற்ற தனிப்பட்ட மாணவர்கள் மேற்குறிப்பிட்ட பாடநூல்களைப் பயின்று மேற்படி சேவையினால் நடாத்தப்படும் பொதுப்பரீட்சையில் பங்கு பற்றலாம். விபரங்களுக்கு மேற்படி கல்விச் சேவையுடன் தொடர்பு கொள்ளவும்.
6. மாணவர் விடுகைப் பத்திரங்கள் பரீட்சைச் சான்றிதழ்கள் அமைப்பின் முத்திரை இடப்பட்டு உறுதி செய்து வழங்கப்படும்.

தமிழ்மொழி சிறப்புடன் வளரவும், தமிழ்க்குழந்தைகளின் எதிர்காலம் ஒளிபெறவும், சகல பெற்றோர்கள் , கல்விமான்கள் , ஆசிரியர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**உலகத் தமிழர் இயக்க**
**கல்விச் சேவை**



படிப்பகம்

www.padippakam.com

# மெல்ல தமிழ் இனிச் சாகும்

சின்ன. இராஜேஸ்வரன்
ஆசிரியர், "சிறுவர் அமுதம்"

வானவெளியில் உலாவிக் கொண்டிருந்தேன். அங்கே பற்பல காட்சிகள் ! ஆனந்தமயமான காட்சிகள் ! ஓ... எத்தனை வண்ணங்கள் ! காட்சிகளிலே எனை மறந்து லயித்து விட்டேன். என்னைத் தட்டி எழுப்புவது போல அங்கே இரு பெரும் புலவர்கள் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் வேறு யாருமல்ல ; உலகினுக்கோர் ஒப்பற்ற புலவனைத் தமிழ் நாடு தந்ததாகப் பாரதி பெருமிதங் கொண்டு சொல்லிப் பாடினானே ! அந்த வள்ளுவனும், ஆங்கில மகா கவி சேக்ஸ்பியருந்தான். இவர்கள் இருவரினதும் உரையாடலைக் காட்சி இன்பத்தை விட்டுக் காதைக் கொடுத்துக் கேட்டேன்.

'தமிழை உலகிலுள்ளவர்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக உலகினுக்கோர் திருக்குறளைத் தந்த வள்ளுவரே ! இன்று வள்ளுவர் என்றால் யார் என்று கேட்கின்ற நிலையில் அல்லவா? உங்கள் நாடும் மக்களும் இருக்கின்றார்கள். ஒருவேளை திருவள்ளுவர் என்றால் பஸ் வண்டி என்று உங்கள் தமிழர்கள் சொல்லி விடுவார்கள் போலிருக்கின்றது' என்று சேக்ஸ்பியர் சொன்னார். வள்ளுவருக்கு இதைக் கேட்கச் சிரிப்பு வந்தது 'சேக்ஸ்பியரே, நீங்கள் என்ன தான் பெருங்காப்பியங்களை எழுதியிருந்தாலும் உங்கள் ஆங்கிலேயே மக்கள் இன்று அவற்றை மாற்றிவிட்டார்கள். இன்றைக்கு நாங்கள் இருவரும் பூலோகம் சென்று ஒரு நூல் நிலையத்தில் எங்களுடைய நூல்களைத் தேடி எடுத்தாலும் உங்களால் நீங்கள் எழுதிய நாடகங்களைப் படிக்க முடியாமலிருக்கும். எனக்கந்த நிலை இல்லை. நான் எழுதியபடியே இன்றைக்கும் திருக்குறள் இருக்கின்றது. இது தான் தமிழரின் தனிச்சிறப்பு என்று வள்



படிப்பகம்

www.padippakam.com

ளுவரும் சிறப்புப் பற்றிச் சொன்னார்.
தமிழர்கள் இப்படிப் பழைய சிறப்புக்களைப் பாடியே காலத்தைக் கடத்திக் கொள்கின்றார்கள். ஆங்கிலேயர் போலப் பழமைவாதிகள் உலகில் யாருமில்லை. அதே வேளையில் காலமாற்றத்திற்கேற்ப மொழியைத் திருத்திக் கொள்ளும் திறனாலேயே இன்று ஆங்கிலத்தை அகிலமெங்கும் ஏற்றி வைத்திருக்கின்றார்கள். நீங்கள் தமிழர்கள் உலகெங்கும் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்திருந்தாலும் இன்று உங்கள் மொழி எந்தளவிற்கு கீழே இறங்கிவிட்டது என்பதைப் பாருங்கள். மொழி என்பது காலவோட்டத்திற்கேற்ப மாறி ஓடவேண்டும் இதைத் தமிழர்கள் யாருமே சிந்திப்பதில்லை. இவை எல்லாம் ஏன் ? என்றார் சேக்ஸ்பியர்.
சேக்ஸ்பியரின் கூற்றில் பல உண்மைகள் இருந்தன. உண்மையை உளமார ஏற்றுக்கொள்ளும் பண்பு வாய்க்கப் பெற்ற வள்ளுவர் அவரது கூற்றுக்களை ஏற்றுக்கொள்வதாக ஆமாம் என்று சொல்லிக் கொண்டார். உண்மை தான் ஆங்கிலக் கவியே, தமிழர்கள் தமிழை வெறும் அரசியல் கோசங்களுக்காகப் பயன்படுத்துகின்றார்கள். தமிழின் சிறப்பைத் தமிழன் இன்னும் அறியவில்லை. ஒவ்வொரு தமிழனும் தனது பிள்ளை பிற மொழி ஒன்றில் பேசுவதைப் பெருமையாக நினைக்கின்றான். ஏதோ தமிழுக்காக உயிரை விடுகின்றேன் என்று தொண்டை கிழியக் கத்துகின்றான். ஆனால் தனது பிள்ளைக்குத் தமிழைக் காட்டப்பின்னிற்கின்றான். தமிழின் இனிமையை அதன் சிறப்பைப் பிறமொழியாளர் அறிந்த வரை தமிழன் இன்னும் அறியவில்லையே ! என்று வள்ளுவர் தனது மனவருத்தத்தை தெரியப்படுத்தினார்.


ஐரோப்பிய தமிழ் வாசகர் வட்டத்தின்

"சோலை"
"சோலை"
"சோலை"

எதிர்பாருங்கள்
மிக விரைவில்
வெளிவர இருக்கிறது
"சோலை"
(ஓடியோ ஒலிப்பதிவு சஞ்சிகை)

அறிமுகம், அரசியல், விளையாட்டு, கலை, கல்வி, சிறுவர் உலகம், தாயக நடப்பு, வீட்டுக்கு வீடு
போன்ற பல்வேறு அம்சங்களுடன் வெளிவர இருக்கிறது.
ஆக்கங்கள் வரவேற்கப் படுகின்றன.

E. T. R. C.,
NIKOLAI STR. 11,
5790 BRILON,
GERMANY.

E. T. R. C.,
SETTMECKER STR. 90,
5768 SUNDERN,
GERMANY.




படிப்பகம்

www.padippakam.com

நானும் கேள்விப்பட்டேன் உலகி லுள்ள மொழிகளிலே தமிழுக்குத் தான் பிற மொழியாளர் வந்து இலக் கணம் எழுதவேண்டிய நிலையில் தமிழர் இருந்திருக்கின்றனர். இருக் கின்றார்கள். தொல்காப்பியருக்குப் பின்னர் இரண்டாயிரம் ஆண்டுகள் தமிழன் யாருமே தமிழுக்கு இலக்க ணம் எழுதவில்லை என்றால்...? தமிழர்களும் தமிழும் பெரும் வேடிக் கையான கதை என்று தான் சொல் லலாம். நன்னூல் எழுதிய பவணந்தி முனிவர் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் எழுதிய வீரமாமுனிவர், உலக வழக்குத் தமிழ், இலக்கிய வழக்குத் தமிழ் எழுதிய கால்டுவெல் எல்லோருமே பிற மொழியாளராகவே இருக்கின் றார்கள். உங்கள் தமிழர் யாரும் இலக்கணம் எழுதும் அளவிற்கு இல் லையா ? என்று சேக்ஸ்பியர் கேட் டார்.

சேக்ஸ்பியரின் கேள்விக்குப் பதில் தேடவேண்டிய நிலையில் வள்ளுவர் இல்லை. இருவருமே பெரும் புலமை வாய்ந்தவர்கள், புகழ் பெற்றவர்கள். சேக்ஸ்பியர் அவருடைய காலத்தில் மதிக்கப்பட்டவர் அல்ல ! பல ஆண் டுகளின் பின்னரே அவர் புகழ் பர வத் தொடங்கியது. ஆனால் வள் ளுவர் அவருடைய காலத்திலே புல வர்களாலும் புரவலர்களாலும் மதிக் கப்பட்டவர். திருவள்ளுவரின் நூலான திருக்குறள் பெரும் ஆர வாரத்துடன் அரங்கேற்றப்பட்டது. சேக்ஸ்பியரின் நூல்கள் எதுவுமே இந்தளவு ஆரவாரம் பெற்றதில்லை. ஆனால் இன்று அறுநூறு வருடங்க ளாகத் தொடர்ந்து அவரது நாடகங் கள் நடிக்கப்பட்டு வருகின்றன. சேக்ஸ்பியர் என்றால் அறியாதவர் யாருமில்லை. இவற்றிலிருந்து வள் ளுவர் விடையைத் தேடிக்கொண் டார்.

ஆம் ! தமிழன் வெறும் வாய்ச்சவாட லில் காலத்தை ஓட்டிக்கொண்டிருக் கின்றான். திருக்குறளை எத்த னையோ பேர் மேற்கோள் காட்டிப் பேசுகின்றான் ! சேக்ஸ்பியரின் நாட கத்தை யாராவது மேற்கோள் காட்டு கின்றார்களா ? ஆனால் திருக்கு றள்... ஏன் உலகெங்கும் வியாபிக் கவில்லை? சரி உலகத்திற்குப் பிறகு வருவோம். தமிழர்கள் மத்தியில் அது இன்னும் பரவலாக வில்லையே ! எத்தனையோ பிரச்னைகளுக்குத் தீர்வு சொன்ன வள்ளுவரால் இதற் குத் தீர்வு காண்பது கடினமானதல் லவே! அவரே கண்டு கொண்டார். ஆம் ! சாதாரண நாடகங்களை எழு திய சேக்ஸ்பியர் உலகப்புகழ் பெற்ற தற்கும், அரிய பெரிய கருத்துக்க ளைச் சொன்ன திருக்குறள் அதன் மொழியைப் பேசும் தமிழர்களி டையே இன்னும் பரவலாகவில்லை என்றால் ? தமிழர்களுக்கு மொழி என்றால் என்ன என்பதே தெரிய வில்லை என்பது தான் உண்மை !

## வாழ்க பல்லாண்டு

எண்ணத்தைப் பேச்சாக்கி
ஏற்றத்தை எழுத்தாக்கும்
வண்ணத்துப்பூச்சியே - நீ
வாழ்க பல்லாண்டு

-சின்ன. இராஜேஸ்வரன்



படிப்பகம்

www.padippakam.com

இந்த நிலையை உடனே மாற்ற வேண்டும். நான் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட தமிழை அதுவும் அதே தமிழை இந்த நூற்றாண்டிலும் தமிழ் வளர்த்து விட்ட இதே நாளிலும் தமிழன் அப்படி ஒப்புவிக்கின்றான் என்றான் யாராலே விளங்கிக் கொள்ள முடியும் ? சும்மா ஒப்புவிக் கவா நான் இதை எழுதினேன் ? வள் ளுவரின் பேச்சிலே நெருப்புத் தெறித் தது.

இனியும் ஒழிந்திருப்பதை விடுத்து நான் வள்ளுவரின் முன் வந்து எனது மரியாதைகளைத் தெரிவித்துக் கொண்டேன். ' தெய்வப் புலவரே உங்களுடைய எண்ணத்தைத் தெரிந்து கொண்டேன். இதே கருத் துக்களைக் கடந்த கால்நூற்றாண் டாய் நானும் கொண்டுள்ளேன். ஆனால் எம்மவர்கள் இன்னும் பழங் காலத்திலே இருக்கின்றார்கள். திருக் குறளையே சிறு வகுப்பில் நீக்கவேண் டும் என்ற கருத்தைக் கூட நான் வைத்திருந்தேன். இதன் நோக்கம் திருக்குறளில் எனக்கு எந்தவித வெறுப்புமில்லை. ஆனால் அது எத் தனையோ நூற்றாண்டுகளுக்கு முந் திய தமிழ் நடையைக் கொண்டது. அதன் இன்றைய உரைநடையை மட் டுமே சிறுவகுப்புக்களுக்கு வைத்தல் வேண்டும். துப்பார்க்கு துப்பாய என்ற குறளிலும் கற்க கசடறக் கற் பவை என்ற குறள்களையும் பாட மாக்க வீணடித்த நீண்ட காலத்தை யும் கண்டே இத்தகைய எண்ணம் என்னுள் எழுந்தது.

தமிழ் என்றால் ஏதோ கசப்பானதாக எண்ணும் அளவிலேயே தமிழை நாம் கற்பித்துக் கொண்டிருக்கின்றோம். - எமது தாய் மொழியைக் கூட இல குவாகக் கற்பிக்க முடியாமல் நாம் இருக்கின்றோம். தமிழை ஆரம்ப காலத்திலிருந்து கற்பிப்பதை விடுத்து இந்த நூற்றாண்டிலிருந்து கீழ் நோக் கிச் செல்வதாகக் கற்பிக்க வேண் டும். சங்ககாலப் பாட்டை விடப் பாரதியின் பாரதிதாசனின் பாட்டுக் களை இன்னும் தற்காலக் கவிஞர்கள் எழுத்தாளரிலிருந்து தொடங்கவேண் டும். தற்காலத்தில் ஒருவகையான தமிழில் எழுதிக்கொண்டு பழங்காலத் தமிழைக் கற்கும்போது மனதில் குழப்பமும் அதனால் வெறுப்பும் ஏற் படுகின்றது. இவற்றை நீங்கள் வந்து சீர்செய்யவேண்டும் ஐயா என்றேன்.

இதே நேரம் பாரதியாரும் அங்கே வந்தார். பாண்டியன் சொல்வதில் எத்தனையோ உண்மையுண்டு. தமி ழைச் சிறப்புப் பாடமாகக் கற்பவனுக் குத் தேவையான பாடத்திட்டங்க ளைச் சாதாரண படிப்புக்கும் போட் டுத் தமிழர்கள் காலத்தை வீணாக்கு கின்றார்கள். கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்தவனால் ஒரு காணிக் கச்சேரிக்கு விண்ணப்பம் நிரப்ப முடியாமல் இருக்கின்றது. இந்த நிலையே தமிழின் தமிழரின் பின்னடைவுக்குக் காரணம் என்று பாரதியார் தலையில் அடித்துக் கொண்டார்.

இந்த மேலைநாடுகளில் வந்து வாழு கின்ற தமிழர்களாலே இந்த நாட்டில் தத்தம் மொழியை இந்த நாட்டவர் கள் கற்பிக்கின்ற இலகுவான வழிக ளைக் கூட இன்னும் தெரியாமல் கொஞ்சமேனும் அறியாமல் தமிழைப் பழங்காலத்திற்கு இழுத்துச் செல்லு கின்ற 'கெட்ட பாமரர்' இருக்கும் வரை தமிழ் மெல்ல இனிச்சாகும் என்றான் பாரதி. குரல் தான் கேட் டது ஆளைக் காணவில்லை. வள் ளுவரைக் காணவில்லை. எங்கே ஐயா போய் விட்டீர்கள் ? என்று கத் தத் தொடங்கினேன்.

' என்னப்பா நடந்தது என்று கேட்டுக் கொண்டு ஓடிவந்தாள் எனது மகள். அப்போது தான் எனக்குப் புரிந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com



வாழ்த்துகிறார்கள்

வாழ்த்துகிறார்கள்

வாழ்த்துகிறார்கள்

வாழ்த்துகிறார்கள்



வாள்முனையை விட வலிமையுடையது பேனா முனை. எத்தனையோ நாடுகளின் சரித்திரத்தையே எழுதுவதன் மூலம் மாற்றி அமைத்திருக்கிறார்கள் பத்திரிகை ஆசிரியர்கள். எத்தனையோ பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், தொடர் நவீனங்கள், சமயநூல்கள் வெளி வருகின்றன. வெவ்வேறு நாடுகளில் -வெவ்வேறு மொழிகளில் -பல்வேறு சூழ்நிலைகளிலும் வெளி வருகின்றன. மக்களை கவர்ந்து சிந்திக்க வைக்கின்ற கருத்தாழம் மிக்க நல்ல வசன நடையுள்ள சிலவே பல பிரதிகளாக வெளிவந்து மக்களிடையே நன்மதிப்பை பெறுகின்றன. எழுதுகின்ற ஆற்றல் எல்லோர்க்கும் வருவதொன்றல்ல. ஆனால் வண்ணத்துப்பூச்சி சஞ்சிகை ஆசிரியர் திரு. காசி வி. நாகலிங்கம் நல்ல எழுத்தாளர். அது மட்டுமன்றி நல்ல பொது சேவையாளரும் கூட. வேற்று நாட்டில் தமிழ் அச்சுப்பதிவு செய்வதிலும், குறைந்த பிரதிகளைத் தயாரிக்கும்போது தவிர்க்கமுடியாது ஏற்படும் விலையேற்றத்தின் மத்தியிலும் கடந்த 5 வருடங்களாக ஒரு சஞ்சிகையை வெளியிட்டு வருவதை அறியும் போது அவர்களது தமிழ்த்தொண்டை பாராட்டாமல் இருக்கமுடியாது. வண்ணத்துப்பூச்சி சஞ்சிகை மென்மேலும் வளர்ச்சி பெறவேண்டும். பல வர்ணங்களையும் (பல விஷயங்களையும்) உள்ளடக்கி வெளிவரவேண்டும் என வாழ்த்துவதோடு, அதன் ஆசிரியர்களும் நீடூழி வாழ்ந்து தமிழுக்கும், சைவத்திற்கும், நாட்டுக்கும் சேவைசெய்யவேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி

சுபம்

சோ. ஸ்ரீகரக்குருக்கள்

-SIVASRI - SREEKARAKURUKAL . S,
BLUMEN STR 25,
4600 DORTMUND 1
T. P: 0231/829136



படிப்பகம்

www.padippakam.com

## வாழ்த்துக்கள்

# வாழ்த்துகிறார்கள்

நாம் கடந்து வந்த பாதைகள் கரடுமுரடானதோ ! மேடு பள்ளமோ, நேரானதோ, சகதிகள் நிறைந்ததோ, பாதித்தூரம் வந்த பின்பு திரும்பி நோக்கும்போது எம்மை அறியாமலே பெருமூச்சொன்று வெளிப்படும். பட்ட கஷ்டங்கள் கூட நிகழ்காலத்தில் இன்பமாகத் தோன்றும். இறந்த கால நிகழ்வுகள் அனைத்தும் அனுபவத்தின் சுவடுகள். இந்த ஐந்து வருடத்தில் ஆசிரியரின் அனுபவங்கள் புதிய முயற்சியின் படிக்கட்டுகள்.

ஐரோப்பிய நாடுகளில் பரந்துபட்டு வாழும் எம்மக்கள் மத்தியில் சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்து, அதனைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திவருதென்றால் சாதாரணமான நிகழ்வல்ல. எத்தனையோ சஞ்சிகைகள் தோன்றி மறைந்தும் இருக்கின்றன. ஐந்து வருடங்கள் தொடர்ந்து ஆசிரியர் மேற்கொண்டுள்ள இலக்கியப் பணிக்கு எமது பாராட்டுக்கள்.

பெரும் மனச்சுமையோடு , பிறந்த மண்ணில் இருந்து இடம் பெயர்ந்து அகதியென்கின்ற அந்தஸ்துடன் பல விதமான அச்சுறுத்தல்களோடு பயந்து வாழ்ந்து போலி நாகரீகம் வரட்டுக் கௌரவம் என்கின்ற மாயைகளில் சிக்குண்டு மனித நேயத்தை மறந்து வாழுகின்ற நம் மக்களுக்கு பிறந்த மண்ணின் அவசியம், மொழி, கலை, கலாச்சார பண்பாடுகளை ; தன்னால் முடிந்தளவு உணர்த்தி எழுத்துலகிற்கு புதிய பல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி சஞ்சிகையில் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வரும் ஆசிரியர் திரு. காசி அவர்களுக்கும் அவருக்கு உதவியாகப் பணியாற்றும் திருமதி. காசி மஞ்சுளா அவர்களுக்கும் மீண்டும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்முயற்சி தொடரவேண்டும் அவலங்கள், கலாச்சாரப்பண்பாட்டு முரண்பாடுகள், சமுதாயச்சீர்கேடுகள், சாதி, சீதனக்கொடுமைகள், ஆதிக்கவெறியுணர்வு அனைத்தையும் அழித்து புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் ஆயுதமாக நடுநிலைமை மாறாது வண்ணத்துப்பூச்சி வெளிவரவேண்டும். எழுத்துலகில் புதிய சாதனையோடு சஞ்சிகை மெருகு பெறவேண்டும். தவறுகளை துணிச்சலோடு எடுத்துக்காட்டி சமுதாய வளர்ச்சிக்கு உதவவேண்டும். எமது பகுதியில் இருந்து வெளிவரும் தரமான பத்திரிகை என்கின்ற பெருமையை எமக்குச் சேர்ப்பிக்கவேண்டும். விமர்சனங்கள், அதனால் வரும் தாக்கங்கள் வளர்ச்சியின் உந்தல்கள்.

எழுதிய ஆக்கங்களை பல ஆண்டுகள் கழித்துப் படித்துச் சுவைக்கும் போது சிலவற்றை மாற்றி எழுதியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என எண்ணத் தோன்றும் இது அறிவு வளர்ச்சியின் வெளிப்பாடு. எழுத்துலகில் பெரு வளர்ச்சி கண்டு வரும் இக்காலத்தில் புதிய மறுமலர்ச்சியோடு இலக்கியப் பணி தொடர பல இலட்சக்கணக்கான வாசகர்கள் வாசித்துச் சுவைத்து, பாராட்டி மகிழ வண்ணத்துப்பூச்சி தொடர்ந்து வெளிவரவேண்டும். ஆசிரியர் காசி அவர்களின் ஆத்மதிருப்திக்கு, வெற்றிகரமான எழுத்துலகப் பயணத்திற்கு கொக்சவலாண்ட் தமிழர் ஒன்றியம் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

நன்றி

கொக்சவர்லாண்ட்
தமிழர் ஒன்றியம்



படிப்பகம்

www.padippakam.com



# வாழ்த்துகிறார்கள்

## வாழ்த்துகிறார்கள்

### வாழ்த்துகிறார்கள்

வாழ்த்துகிறார்கள்

வண்ணத்துப்பூச்சி தன் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்றது என்ற சேதி கேட்டு பூரித்துப் போனவர்களில் நானும் ஒருத்தி. "வண்ணத்துப்பூச்சி" வாசகர் பூங்காக்களின் வண்ணாத்திப் பூச்சியாக சிறகடித்து வட்டமிட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் , அதை அழகுறப் பறக்கவிட்டு அமைதியாக பெருமித சிரிப்புடன் அமர்ந்திருக்கும் ஆக்கதாரர்கள் காசி. விசுவநாதன் நாகலிங்கம் என்னும் அன்பன் காசியையும், அவர் துணைவி மஞ்சுளாவையும் எண்ணிப் பெருமைப்படாமல் இருக்கமுடியவில்லை.
வண்ண வண்ண பூக்களாக கோர்த்து வாசமிகு மாலையாக்கித் தொடுப்பதற்கு இவர்களிடம் எவ்வளவு திறமை வேண்டும். அதை நெறிப்படுத்த பொறுமை வேண்டும். இரு மாதங்களுக்கு ஒரு முறை சத்துள்ள விடயங்களை சங்கடமில்லாமல் கொடுக்க வேண்டும் என்றால் அதற்கு ஓயாத உழைப்பு வேண்டும். சொந்த வேலைகளையும் கவனித்துக் கொண்டு பொதுசேவைகளுக்காக தங்களை அர்ப்பணிப்பவர்கள் ஒரு சிலரே . வண்ணத்துப்பூச்சி தம்பதிகள் தங்கள் நேரத்தின் பெரும்பகுதியை மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதற்காக செலவழிக்கின்றார்கள் என்றால் அவர்கள் இதயத்தில் மனிதநேயம் எவ்வளவுக்கு ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கின்றது என்பது நன்கு புரியும்.
கலை இலக்கியம் என்ற ஊற்றால் அவர்கள் இலக்கிய தாகங்களை தீர்க்கவில்லை அதை விட தம் எழுத்துக்களை அர்ப்பணித்து அதன் வருவாயில் பசி, பட்டினியிலிருந்தும் மீட்கிறார்கள் என்பதற்கு "இலட்சிய நெஞ்சம்" என்ற புத்தகத்தை வெளியிட்டு அந்தப் பணத்தை எம்மவர்களுக்கு அர்ப்பணிக்கும் சேவையே சான்று.
மலையைப் பார்த்து பிரமித்து நிற்கும் குன்று போல் கலைவளம் கொண்ட வண்ணத்துப்பூச்சியை பார்த்து வான் புகழ் எட்ட வாழ்த்தி நிற்கின்றேன்.
வளர்க !!

**கிருஷ்ணவேணி ஸ்ரீகந்தவேள்**
இலங்கைத் தமிழ் மகளிர் மன்றத் தலைவி (எசன்)

## வாழ்வேன்!

காலனுக் கென்றன்
  காயம் பலியானால்
காலத்துக் கென்றன்
  கவிதை பலியாமோ?
காலனுக் கென்றன்
  காயம் பலிப்படினும்
காலத்துக் கென்றன்
  கவிதை பலிஆகாது!

**-தான்தோன்றிக் கவிராயர்**



படிப்பகம்

www.padippakam.com

## வாழ்த்துக்கள்

வாழ்த்துகிறார்கள்

பயன் உள்ள கல்வி பழகாத பள்ளி
பயிர் இட்ட களஞ்சியம் விளைந்திட்டால்
பசி என்னும் பகைவன் பறந்து போய் விடுவான்.
பயன் உள்ள எதையும் கற்றல் நன்று
வண்ணம் எனும் பூச்சி இதுவரை தாங்கிவந்த
பயன் உள்ள பொக்கிஷங்கள் உள்ளம்
எனும் ஊமையனை உயிர் பெற வைத்தது
அது போல் இன்னும் இன்னும்
கருத்துக் கொண்ட களஞ்சியங்களை
என் போன்ற வாசகர் மனம் கவர்ந்து
தமிழர் இதயம் எனும் வனத்தில்
வண்ணத்துப் பூச்சி வானளாவி வலம் வர
என் மனம் கனிந்த வாழ்த்துக்கள்

பைந்த தமிழை காயாகப் பெற்ற நம் தாய் திரு·
நாட்டில் மட்டும் அல்லாது பிற நாடுகளிலும்
தமிழ் என்னும் அன்னை சிறகு விரித்துப் பறக்கின்றாள்
தமிழ் எழுத்துக்கள் கொண்ட சுரமாய் நின்று
எத்தனையோ நூல்கள் தமிழர் பண்பாடுகளை மருவிப் புகழ்பாடுவது
அந்த நூல்களில் ஒன்றான வண்ணத்துப்பூச்சி
இன்றுவரை ஐந்து வருடங்களை இன்புற கழித்துக்கொண்டது
அதுபோல் இன்னும் எண்ணற்ற வருடங்கள் வாழ்ந்து
தாய்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்புக்கூட்ட
வாழ்வாங்கு வாழ்க ! வாழ்க!

தாலாட்டுப் பாடி தன் மடியினில்
சேயைத் துயில் கொள்ள வைக்கும் தாயைப் போல்
நீர் விட்டு பயிர் வளர்க்கும் உழவனைப் போல்
வண்ணத்துப் பூச்சி தாங்கி வந்த காவிய
சிந்துக்களை தேன் மொழியாம் தமிழ்மொழியில் சுவையூட்டி
மனம் மகிழ்ந்து புசிக்கும் என் போன்ற வாசகர்க்கு
சுவைமாறா அமுதாக வழங்கிய வண்ணத்துப் பூச்சி
ஆசிரியர்க்கு என் மனம் கனிந்த வாழ்த்துக்கள்

கடந்த ஐந்து வருடங்கள் பறந்து திரிந்த
கருத்தாழும் கொண்ட வண்ணத்துப் பூச்சிகளைப் போல்
இனி வரும் வண்ணத்துப் பூச்சிகளும்
சிறப்பான சிந்திக்க வைக்கும் கருத்துள்ள
களஞ்சியங்களை சுமந்து கொண்டு பாரெங்கும்
தாய் மொழி தமிழ் மொழியை
சுவை கமழப் பறை சாற்றி வாழ்வாங்கு வாழ்க வாழ்க

- எஸ். கற்பகன்



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துக்கள்



## வண்ணத்துப் பூச்சிக்கு ஒரு வாழ்த்துச் செய்தி

பத்திரிகை உலகில் வெகு பக்குவமாய் உன்
பக்கங்கள் புரட்டப்படுகின்றன
வாசகர் நெஞ்சங்களில் உன்
கருத்துக்கள் திரட்டப்படுகின்றன
ஆக்கங்களிற்கு அதிக பஞ்சம் ஏற்பட்டுள்ள
இந்த நாட்டில் புத்தகமாய் புத்தம் புது
கருத்துக்களே நித்தம் தாங்கி வரும்
வண்ணத்துப் பூச்சியே நீ வாழ்க
எத்தனையோ ஏடுகள் ஒன்றிரெண்டு
மாதத்தில் ஒய்ந்து உறங்கிவிட - நீ
மட்டும் ஐந்து வருடங்கள் வெகு
அடக்கமாய் கடந்து வந்துவிட்டாய்
கண்ணைக் கவரும் வர்ணங்கள் கொண்டவை
வானத்தை வட்டமிடும் வண்ணத்துப் பூச்சிகள்
மனித கருத்தைக் கவரும் அம்சங்கள் நிறைந்தவை
வாசகர் கையில் தவழும் இந்த வண்ணத்துப் பூச்சி
ஐரோப்பிய தமிழ் சமுதாயத்திற்கு
ஆணித்தரமான கருத்துக்களை அள்ளி வீசி
சீர்கேடுகளைச் சின்னா பின்னமாக்கி
தரமான சமுதாயத்தை உருவாக்கும்
திடமான உன்பணி போற்றுதற்குரியது.
கலை இலக்கிய சமுதாய கருத்துக்கள்
அலைஅலையாய் நிறைந்த பூச்சியே
வாசகர் நெஞ்சவானில் நீ வட்டமிட
தேசமெங்கும் நீ பரவி வர
கலைத்தாகம் நிறைந்த இரு நெஞ்சம்
காரணமாய் உண்டு
காசியும் போசிபோல்
அவரைப் பற்றிப் பிடித்திருக்கும்ட
நேசம் நிறை இல்லாளும்
ஐந்து வருடங்கள் உன்னை
வளர்த்திட்ட அன்புப் பெற்றோர்கள்
இன்னும் பல ஆண்டுகள்
இவ்வுலகில் நீ வளர்ந்துத
தமிழ் சமுதாயத்திற்கு
தரமான கருத்துக்களைத் தந்து
தலைநிமிர்ந்து பவனி வர என்
இதயம் நிறைந்த இனிய நல்வாழ்த்துக்கள்.

. ஆர். பாலா
எசன்



படிப்பகம்

www.padippakam.com

வானவெளியில் - நீ
பறந்து திரிந்தபோது
உன் அழகை ரசித்திருக்கிறேன்.
என் கைகளில் உன்னை இருத்தி
உன்மென் அழகை
ரசிக்க நினைத்தேன் - முடியவில்லை.
ஆனால் இப்போதோ
உன்னை என் கைகளில் இருத்தி
வருடிப்பார்க்கிறேன்!
ஓ!
அது ஒரு தனிச்சுகம்!

- பிரியன்



வண்ண வண்ணப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
சின்னஞ்சிறு பூச்சி
சிறந்த நல்ல பூச்சி

மக்கள் மனங் கொள்ளும் வண்ணத்துப்பூச்சி
அன்போடு அறிவையூட்டும் நல்லபூச்சி
சிறியோரும் பெரியோரும் விரும்பும் நல்ல பூச்சி
உலகெங்கும் பறந்து தமிழ் பரப்பும் பூச்சி

வண்ணநிறம் கொண்டு
கண்கவரும் பூச்சி
நல்ல மலரெங்கும்
நிறைந்திருக்கும் பூச்சி

-பி. ராஜா
பிராங்பேர்ட்




படிப்பகம்

www.padippakam.com



# தேவை ஒரு நிருபணம்!



கீழ்கரவை பொன்னையன்

"என்னை விடுங்கோ... என்னைத் திருப்பி அனுப்பாதையுங்கோ.. நான் அங்கை போனால் என்னைக் கொன்று போடுவாங்கள்.."

அவன் தமிழில் கத்திய வார்த்தைகள் அந்த விமான நிலையத்தை அதிர வைத்தது.

அவன் கத்திய - பதறிக் கதிகலங்கிக் கத்திய வார்த்தைகள் அங்குள்ளவர்களுக்குப் புரியாமல் இருந்தாலும் அங்கிருந்த பயணிகள் பலருக்கு 'ஏதோ ஒரு பிரச்னை அவனுக்கு இருக்கிறது.. எங்கேயோ ஏதோ ஒரு தவறு நடந்துவிட்டது இல்லையேல் இப்போது ஒரு தவறு நடந்து கொண்டிருக்கிறது' என்பதை உணர்த்தியது. அவர்களால் அவனைப் பரிதாபமாகத் தான் பார்க்க முடிந்தது. ஆனால் அவர்களால் பரிகாரம் செய்யமுடியவில்லை.

அவன் கதறியும் ஓலமிட்டு அழுதும்...

அவன் என்ன சொல்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளாத அதிகாரிகள் அவன் 'திரும்பித் தன் நாட்டிற்கு போக மறுக்கின்றான்' என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

ஆனால் பாலனை இந்நாட்டில் இருக்க அதிகாரிகளும் சட்டமும் அனுமதிக்கவில்லை. எப்படியும் அவனை இந்த நாட்டில் இருந்து அவனது நாட்டிற்கு அனுப்பி விடுவது என்று தீர்மானித்து விட்டார்கள். வரமறுத்த பாலனை கொற கொற என்று இழுத்துக்கொண்டு போனார்கள். அவனது கால்கள் தரையில் இழுபட்டுக் கொண்டே வந்தது. அவனது அழுகுரல் அதிகாரிகளை கலங்க வைக்கவில்லை.

கடவுளே என் உயிரைக் காப்பாத்து. என் உடல் மீண்டும் சித்திரவதைப் படவேண்டுமா.. அதை என் உயிர் தாங்குமா என்று வெளிப்படையாகப் புலம்பினான் பாலன்.

பாலனை விமான நிலையத்தில் ஏற்றும்போது எப்படிக் கள்ளமாக இரகசியமாக தன் நாட்டில் இருந்து புறப்



படிப்பகம்

www.padippakam.com


பட்டு இங்கு வந்தேனோ.. எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பன் இங்கு வர.. எனக்கு இங்கு புகலிடம் இல்லை. இப்போ பகிரங்கமாக என்னைத் திருப்பி அனுப்புகிறார்களே.. என் உயிர் இனி என்னிடம் இல்லை என்று தீர்மானித்துவிட்டான் பாலன். என் தங்கைகள்... வயது போன அம்மா... அவர்கள் கதி என்ன? என்பதை எண்ண அவன் உள்ளம் படபடத்தது.

பாலன், தன் உயிர் போவதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. ஆனால் அந்த உயிர் இப்போ போகவேண்டும் என்றும் விரும்பவில்லை. தன் தங்கைகள், தாய் இவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் இருக்கின்றன. தன் தாய் மண்ணுக்காகச் செய்ய வேண்டிய கடமைகளும் உண்டு. தன் தாய் மண்ணுக்காகத் தன்னை அவர் அர்ப்பணித்த வேளையில்... அவன் பட்ட துன்பங்கள் ஏராளம். அவைகளைத் தாங்கிக் கொண்டு தான் அகதியாக... இங்கு வந்தான். அவனுக்கு உண்மையாக தாயகத்தில் பிரச்னைகள். இருந்தும் அவனைத் திருப்பி அனுப்புவதில் அதிகாரிகள் அக்கறை காட்டினர்.

பாலனுக்கு வயது முப்பது தான். பட்டதாரிப் பட்டத்தைச்சுமந்து கொண்டாலும் வேலை விடயத்தில் விண்ணப்பம் போட்டிருப்பான். ஆனால் ஒரு வேலையும் கொத்தாமல் செய்தது இந்தப் பாழும் அரசியல் கொள்கைகள்.

தான் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்று நினைக்கின்ற வேளையில் தன் வயது போன தந்தை அதுவும் பக்க வாதக் கால் முடக்கு நோயினால் படுக்கையில் இருக்கும் தந்தை. ஒன்றுமே இயங்கமுடியாத நிலையில் தாய்.. பழமையில் ஊறிப்போனதால் ஒன்றுக்கு ஐந்து தங்கைகளை வீட்டுக்குள் வைத்து விலை போகாதா என்ற நிலையில் இருக்கும் குடும்பம் அவன் குடும்பம்.

இவர்களுக்கு வாழ்வும் இல்லை...



சில இடத்தில் தானாகப் போய் தன் தங்கைகளுக்கு திருமணம் பேசிப் பார்த்தான்.

பெண் ஓரளவு அப்பிடி இப்பிடி வடிவாகத் தான் இருக்கிறாள். ஆனால் வீடு குடுப்பாயா.. பணம் எவ்வளவு குடுப்பாய்..'

இவைகளைத் தான் அவனால் அறிய முடிந்தது.

இந்த நிலை மாற என்ன வழி என்று தேடினான். பைத்தியக்காரன் மாதிரி அலைந்தான்.

ஏற்றத் தாழ்வு கொண்ட சமுதாயத்தில் சீதனக் கொடுமை இருக்கவே செய்யும். நம் பொருளாதரப் பின்னடைவுக் காரணத்தைத் தேடினான். நம்மிடையே இருக்கும் சாதி முறை அடக்கு முறை.. ஒருவனை ஒருவன் சுரண்டல் இவைகள் தான் மனித வாழ்வின் மனதில் பலவிதமான எண்ணங்களை விதைத்து விடுகின்றன. எம் இனமே ஒரு இனத்திற்கு அடிமையாக இருக்கு மட்டும் எம் இடையில் உள்ள பொருளாதார விரிவாக்கத்தைச் செய்ய முடியாது. எம்மைப் போன்ற ஏழைகள் தலைநிமிர்ந்து வாழமுடியாது என்ற தீர்மானத்துக்குத் தான் அவனால் வரமுடிந்தது.

அவன் மனம் இரவு பகலாகக் கேள்விகளைத் தான் கேட்டுக் கொண்டிருந்தன. சரியான பதிலைத் தேடினாலும் அது அவன் மனதிற்கு எட்டவில்லை. அப்படி எட்ட புறக்காரணிகள் விடவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஓர் இரவு முன்விறாந்தையில் வெறும் தரையில் படுத்திருக்கும் போது சிலர் அவனைத் தட்டி எழுப்பினர்.
துடித்துக்கொண்டு எழும்பிய பாலன் கண்ணைக் கசக்கியபடி அவர்களைப் பார்க்க முயலும்போது அவன் கன்னத்தை ஒருவனின் கை பதம் பார்த்தது. வந்தவர்களின் உடை, பேச்சு மொழி, அவர்களது செயல் அவர்களது தோற்றத்தை உணர்த்தியது.
கொச்சைத் தமிழில் கேட்ட கேள்விகளுக்கு அவனும் 'ஓம்.. இல்லை' என்று கூட பதில் கூறமுடியவில்லை. ஓம் என்றாலும் அடிவிழும். இல்லை என்றாலும் அடி விழும். அப்படியான கேள்விகளே கேட்கப்பட்டன.
தான் ஓர் அப்பாவி என்றும் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று எத்தனையோ முறை சொன்னான் பாலன். ஆனால் இராணுவத்தினர் அவன் கூறுவதைக் கேட்கத் தயாராக இருக்கவில்லை. தாங்கள் சொல்வது தான் சரியான செயல் என்று பாலனைப் பதம் பார்த்துவிட்டு சென்றனர்.
வீடே அல்லோலகல்லப்பட்டது.
'ஐயோ' என்று தலையில் கைவைத்தபடி திண்ணையில் இருந்துவிட்டான் பாலன். எல்லை கடந்த நிகழ்ச்சி அவன் குடும்பத்தில் நடைபெற்று விட்டது. அவனுக்கு எல்லாம் இழந்த கவலை. நிலை கெட்ட சூழ் நிலையில் அவன் இருந்தான்.
'இங்கை என்ன நடந்தது' என்றபடி தமிழ்பொடியன்கள் வந்தனர்.
'இது அவனுக்கு ஓர் ஆறுதலாக இருந்தது.
'அவன் கண்ணில் வடிந்த நீரைத்துடைத்துவிட்டபடி ' வீட்டுக்கொரு வீரன் மானஸ்தன் இருந்தால்; வீழ்த்தலாம் எதிரியின் பலத்தை ' என்றுவிட்டு எழும்பியவர்களின் கையை பாலன் பிடித்தான்.
அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட தமிழ்ப்பொடியன்கள்.. - பொறுமையா இரு.. உனக்கென்று சில கடமைகள் இருக்கு.. அதேநேரம் இனத்துக்காக செய்யவேண்டிய கடமையும் இருக்கு உனக்கு.. என்றுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.
சில மாதங்கள் ஓடினாலும் பாலன் மனதில் தன் வீட்டில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் இந்த எம் இனமாகயி தமிழ் இனத்தின எல்லா வீடுகளிலும் நடக்காது என்பதற்கு என்ன நிச்சயம். அங்கும் எத்தனையோ தங்கைகள் மானத்தை இழந்து இருப்பர்.. அவனால் நினைத்துக் கூடப் பார்க்கமுடியவில்லை.
திடீரென ஓர் அமைதி.. இருள் சூழ்ந்த அமைதி.. பயம் கலந்த அமைதி.. எது ? என்ன ? எப்ப நடக்கும் என்று தெரியாதிருந்த அந்த அமைதியைக் கலைக்கும் வண்ணமாக திடீர் திடீர் என குண்டுகள்

விழத் தொடங்கின.. கடற்கரையில் இருந்தும் வரத் தொடங்கின.
'ஓ . செல் அடிக்கிறான். குண்டு போடுறான். ' என்ற பயம் கிராமத்தை.. எல்லா வீட்டினரையும் சூழ்ந்தது. வீட்டை விட்டுப் புறப்பட்டு கோயில், பள்ளிக்கூடம் என்று அகதிகளாக ஓடிச்சென்றனர்.
பாலன் வீட்டிலும் அனைவரும் ஓடினர் தான். ஆனால் பாலனின் தந்தையால் நடக்கக்கூட முடியவில்லை. தந்தையைத் தூக்கிக் கொண்டு போகவேண்டும் என்ற நிலையில் தந்தையை.. அந்த கனத்த உடலை தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டும் வந்து திண்ணைக்கப்புடன் சாய்ந்து இருத்திவிட்டு கதவை இழுத்துப் பூட்டி தாளிட்டான்.
'பாலன்..'
'என்ன அப்பு' என்றபடி திரும்பத் தந்தையைப் பார்த்தான் பாலன்.
'நான் என்ர வீட்டைவிட்டு எங்கையும் வரவில்லை. நான் செத்தாலும் இந்த என் வீட்டில் தான் சாகவேணும். நீ உன் தங்கைகள் நிச்சயமாக வாழவேண்டியவர்கள். இந்த நாட்டுக்காக உன் இனத்துக்காகவாவது வாழவேண்டியவர்கள். நான் பழுத்து விழுந்த கட்டை. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

நீங்கள் இப்போது தான் பூத்திருக்கும் இளம் பூக்கள்... இனிமேல் தான் காய்... பழம் உங்கடை வாழ்க்கையிலை கிடைக்கவேணும்.. இதனாலை நீ ஓடிப்போய் கோயிலுக்குள் நுழைந்துவிடு.. ஆண்டவன் துணையால் எதுவும் நடக்காது எனக்கு..'

என்றபடி திட்டவட்டமாக மறுத்து விட்டார் பாலனின் தந்தை.

பாலனுக்கும் என்ன செய்யிறது என்று தெரியவில்லை.. அவன் மனம் தள்ளாடியது. எதிர்காலத்தை நோக்கும் எங்கள் உயிர் பெரிதா.. இது வரை எமக்காக வாழ்ந்து முடங்கிப் போய் இருக்கும் அப்புவின் உயிர் பெரிதா என்ற மனப்போராட்டம் பாலனைத் தள்ளாட வைத்தது தான். பழுத்த அனுபவம் உள்ள அவன் தந்தையால் இதனை உணர முடியாமல் இல்லை.

'மோனை... நீ ஒண்டுக்கும் யோசிக்காதை.. என் கடமை இன்னும் முடியவில்லைத்தான் ஆனால் இனி மேல் நான் செய்யவேண்டிய கடமைகளை நீ தான் செய்யவேணும். உனக்கு முக்கியமாக இரண்டு கடமைகள் உண்டு. ஒன்று உன் தங்கைகள், உன் தாய் மற்றது இது உன் தாய்மண். இதனை நீ மறந்துவிடாதே' என்றபடி நீ உடனடியாக உன் தாய், தங்கைகளிடம் போ என்றார்.

'அப்புவை நான் கொண்டு வாறன்' என்று தன் தாயிடம் சொல்லி இருந்தான் பாலன். இப்போது வெறுங் கையுடன் கோயிலுக்குத் திரும்பினான். தெருக்கதவைத் தொட்டு தாண்டும்போது...

'பொம்' என்று பெரிய சத்தம்.

ஒரு குண்டு நேராகத் திண்ணையில் வந்து விழுந்தது.

குண்டு வெடித்த சத்தம் மட்டுமே பாலன் காதில் விழுந்தது. தந்தையின் அலறல் கேட்கவில்லை. தகப்பனின் அவலச் சத்தத்தைக் கூட வெளியிட கொடுக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கூட அந்தக் குண்டு கொடுக்கவில்லை.

# அந்த வண்ணம்

பல வர்ணம் காட்டி
பலரை மயங்கவைத்து
பாவை யவள் தினமும்
பறந்தே திரிந்திடுவாள்
அவள்தான் அந்த
வண்ணத்துப் பூச்சி.

தன் இறக்கை
இரண்டையுமே - நம்பி
தன்னம்பிக்கையுடன்
இராப்பகலாய் வலம் வருவாள்
அவள்தான் அந்த
வண்ணத்துப் பூச்சி.

வள்ளுவனின் குறள்களை
மறக்காமல் இருக்க
விளக்கமும் தந்து
நாட்டு நடப்புக்களை,
நல்ல நாவல்களை தந்திடுவாள்
அவள்தான் அந்த
வண்ணனணத்துப் பூச்சி.

சுயநலவாதிகள் சூழ்ந்திருக்கும்
இந்நாட்டில், தன்னலம் கருதாது
பொது நலமே பெரிதென்று
பறந்தோடி அலைந்திடுவாள்
அவள்தான் அந்த
வண்ணத்துப் பூச்சி.

தன்நாட்டை தாயினும் மேலாக
மதித்து - தன் இனத்தை
உடன் பிறந்த இரத்தங்களாய்
எண்ணி-ஐந்தாண்டு காலம்
அழகாய் ஒளிவீசி
பூரிப்படைகின்றாள்
அவள்தான் அந்த
வண்ணத்துப் பூச்சி

- சே. கதிர்ச்செல்வன்



படிப்பகம்

www.padippakam.com

'அப்பு' என்று ஓடிவந்து சிதைந்த உடலைத் தான் அவனால் கட்டி அழ முடிந்தது. அந்த நிசப்த நேரம் குண்டுகள் தான் அந்த நிசப்தத்தை முறிடியத்தது. அதைத் தொடர்ந்து பாலனின் அழுகுரலும் நிசப்தத்தை வெற்றி கொண்டது. இந்த அகால மரணத்தில் கலந்து ஒலமிட்டு அழ அந்த நேரம் பாலனைத் தவிர யாரும் இருக்கவும் இல்லை. வரவும் இல்லை.

கோயிலை நோக்கி ஓடினான்.

மரணவீட்டுத் தீட்டு அவனை உள் நுழையவிடவில்லை. வெளியில் நின்று கொண்டு 'அம்மா அப்புவை குண்டு சாகடித்திட்டுது' என்று கதறினானன் பாலன்.

' என்ன மோனை சொல்லுறாய்' என்றபடி அவன் தாயும் 'என்னண்ணா அப்புவுக்கு' என்றபடி தங்கைகளும் ஓடிவந்தனர்.

பாலன் எத்தனையோ கூறினான். ஆனால்'அப்பு குண்டு. . செத்துவிட்டார் ' இந்த மூன்று சொல்களைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு கேட்கவில்லை.

'ஐயோ எங்களை விட்டுட்டுப் போயிட்டீங்களே' என்று அழுதனர்.

அவர்களுக்கு ஆறுதல் சொல்ல பலர் முயன்றனர்.

தாயும் தங்கைகளையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டான் பாலன். அங்கு இருந்தவர்கள் தடுத்தும். . இந்தச் சூழ்நிலையில் போகவேண்டாம். . நாலா பக்கமும் குண்டுமாரி. . எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்று தடுத்தனர். ஆனால் அவைகளைக் காதில் வேண்டிக்கொள்ளாது தாயுடனும் தங்கைகளுடனும் தன் தாய் வீட்டிற்குப் போனான் பாலன்.

தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தனர். வீட்டு முற்றத்திலேயே சிதைக்கு உற்றார் உறவினர் இல்லாத சூழ்நிலையில் கொள்ளி வைத்த பாலன் தன் மனதில் வைராக்கியம் ஒன்றை உருவாக்கினான்.

என் தந்தை போல் எத்தனை தந்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

பாரம்பரியங்களையும் கலாச்சாரங்களையும் கைவிடாது சிறியவர் முதல் பெரியவர் வரை தமிழன் தமிழனாக இருக்கவேண்டும் பண் போடும் பாசத்தோடும் இருக்கவேண்டும் என்று எந்த இதழிலும் கூறத்தவறுவதில்லை வண்ணத்துப்பூச்சி.

இதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டையும் இவ்விடத்திற் கூறவிரும்புகிறேன்.

ஒவ்வொரு வருடமும் H. S. K மக்கள் மத்தியிலே வாணி விழா கொண்டாடப்படுகிறது. அதை முன்நின்று வீடுவீடாகச் சென்று ஒவ்வொரு குடும்பத்தினரையும் அவர்கள் பிள்ளைகளையும் ஊக்குவித்து கடவுள் வணக்கங்கள், நாட்டியம், சிறுவர் பாடல்கள், பேச்சுக்கள், கவிதைகள், நாடகங்கள் என்றெல்லாம் எமது மண்ணை நினைக்க வைத்து கலாச்சாரம், பண்பாடு, கடவுள் வழிபாடு ஆகியவற்றிலும் முன்நின்று வழிகாட்டி நிற்பதுவும் வண்ணத்துப் பூச்சியே.

திரு. திருமதி காசி அவர்கள் பேனா வழியில் மட்டுமன்றி பொதுப்பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்று சொன்னால் அதை மனமுவந்து பாராட்டாமல் எம்மால் இருக்கமுடியாது. இந்த சஞ்சிகையின் ஐந்தாவது விழாவையொட்டி H. S. K மக்களாகிய நாம் ஈழமண்ணின் மைந்தர்கள் சார்பிலும் H. S. K தமிழ் மக்கள் சார்பிலும் எமது அன்பினும் இனிய ஏகோபித்த பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வாழ்க அவர்கள் சேவை
வளர்க வண்ணத்துப்பூச்சி



படிப்பகம்

www.padippakam.com

தைமார்கள் கொடூரமாக இறந்திருப்பர். என் தாயைப்போல் எத்தனை தாய்மார்கள் விதவையாகியிருப்பார்கள்.. என் இனம் இப்படித் துன்புறுவதா?

என்ன செய்யலாம் ! எப்படி இயங்கலாம் என்ற சிந்தனை அவன் மனதில் வலுவூட்டின. அடிக்கடி அவன் சிந்தனை.. தன் இனம்.. தன் இன


விடுதலை என்று சிந்திக்கத்தான் செய்தது.

நாளடைவில் போகப் போக பாலனின் நடவடிக்கைகள் அவனது மென்மையுள்ளத்தில் வலுவான அழுத்தமான முரட்டுத்தன்மை உருவாவதைக் கவனித்த அவனது தாய் பாலன் முன் மண்டியிட்டு 'மோனை உனக்கு இருக்கும் இன எழுச்சி உணர்வை நான் மதிக்காமல் இல்லை. ஆனால், உனக்கு ஐந்து தங்கைகள் வரிசையாக நிற்கிறார்கள். இவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை மறக்கலாமா ' என்றாள்.

'அம்மா தன் முன் மண்டியிடுவதை ' அவனால் பொறுக்க முடியவில்லை. தாயைத் தூக்கித் தன் தாயின் காலைத் தொட்டு வணங்கிய பாலன் 'அம்மா எங்கடை இனப்பிரச்னை தீருமாயின் என் தங்கைகளின் பிரச்னை என்ன எல்லோரது பிரச்னையும் தீரும்' என்று சொல்லும் போதும்பாலனின் கண்கள் கலங்காமல் இல்லை.

'மோனை பாலன்.. எனக்கு.. ஐந்து மகளையும் ஒரு மகனையுந்தான் கடவுள் தந்திருக்கிறார். ஆனால் ஐந்து ஆண்பிள்ளைகளையும் ஒரு பெண்பிள்ளையையும் அந்தக் கடவுள் தந்திருந்தால் அதில் ஒருவனையல்ல நால்வரையும் எம் இன எழுச்சிப் போராட்டத்துக்குக் கொடுத்திருப்பன். ஆனால் நீ ஒருவன் மட்டுந் தானே ஆண்பிள்ளை எப்படி மோனை நான் உன்னை இழக்கமுடியும்.

தாயின் கண்கள் கலங்கினாலும் அவள் வார்த்தைகள் உறுதி வாய்ந்ததாக இருந்தது. பாலனின் மனம்



## வாழும் யுகத்தின் மனச்சாட்சி!

பெரியோர்கள் யாரெனக்
கேட்பின் எவர்என்பதைப்
பேசுவேன் ! கேளும்உலகீர்!
பேராளருக் குரிய
மேலாங் குணங்களும்,
பெருமை தருபண்பு நலமும்,

பரிகாரமாய்க் கண்ட
னங்களைக் கருதி, எதிர்
பாராமலே முகமனை
பாராட்டையும் கண்ட
னத்தையும் ஒன்றுபோற்
பாவிக்கும் சமசித்தமும்,

அரிதான வெற்றியோ
அல்லாது தோல்வியோ
அடையினும் நிதானமின்மைக்
காளாகிடா மனமும்,
ஆபத்தை வஞ்சனையை
அலட்சியம் செய்வன்மையும்,

உரியோர்கள் உண்மையிற்
பெரியோர்கள் ; அவர்களே
உலகினுயர் வரலாற்றினை
உருவாக்க வல்லவர்கள்;
தாம் உயிர் வாழ்கின்ற
யுக மனச்சாட்சி அவரே !

**- சில்லையூர் செல்வராசன்**



படிப்பகம்

www.padippakam.com

நெகிழத் தொடங்கியது. தன் தங்கைகளை ஒருமுறை திரும்பிப் பார்த்தான். ஐந்து பேரும் வரிசையாக தலையைக்குனிந்தபடி நின்றிருந்தனர்.

கட்டுப்பாடாக வாழத் தங்கைகளை எண்ணிப் பெருமைப்பட்ட பாலன் தன் தங்கைகளுக்காகச் சில காலம் வாழவேண்டும் என்று தீர்மானித்தான்.

இரவு பகலாக உழைத்தான். ஆனால்.. கடந்த கால சில பல நடவடிக்கைகள் அவனை அங்கு இருக்கமுடியாத நிலையை உருவாக்கின.

எத்தனை காலம் பயந்து வாழ்வது.. ஒழிந்து இருக்கும் வரை தங்கைகளின் வாழ்வு.. கேள்விக்குறியாகலாம்.


பாலனின் சூழ்நிலைகளைக் கண்ட தாய் ' நீ வெளிநாட்டில் போய் உன் உயிரை முதலில் காப்பாற்று. பின் தங்கைகளுக்காக வாழலாம் என்று வழிவகுத்துவிட்டாள். தாயின் வார்த்தை சரியாகப் பட்டதால் வெளிநாடு போகக் கொழும்பு வரும் போது தாண்டிக்குளத்தில் அவன் பட்ட துன்பம் வேதனை .சோதனை...

வேண்டாத கேள்விகளைக் கேட்டுத் துன்புறுத்தினர் இராணுவத்தினர் அடி.. உதை.. கைகால் எல்லாம் நோ...

சில காயங்கள் அவனுக்கு உடல் பலவீனத்தை ஏற்படுத்தியது.

இருந்தும் அவனை இரண்டு மாதங்கள் சிறையில் அடைத்து சித்திரவதை செய்தது அவன் மனஉறுதியை தளரவைத்தது. உடலில் எங்கு பார்த்தாலும் காயம்.

காயங்களுடன் தான் கொழும்பு வந்து இரகசியமாக மருத்துவம் செய்துவிட்டுக் களவாக நாட்டைவிட்டு புறப்பட்டு அரசியல் தஞ்சம்கோரி வந்த பாலனுக்கு விமான நிலையத்தில் வைத்து வைத்தியம் செய்யும் கருணை கிடைத்துதான். ஆனால்.. அவனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.



கடந்த காலப் பிரச்னைகள் நிகழ்வுகள்... உனக்குத் தெரியாது.. உன் உடலில் இருக்கும் காயங்களுக்கு தக்க காரணம் காட்டி நிரூபிக்கத் தவறிவிட்டீர்கள்.. போதுமான ஆதாரம் இல்லை...

எனவே இங்கு இருக்கமுடியாது என்று தான பாலனைத் திருப்பி அனுப்ப முயன்றனர் அதிகாரிகள். பாலனும் இயன்றமட்டும் போராடினான்.

' நான் என் நாட்டுக்குப் போனால் என் உயிருக்கு ஆபத்து. என்னை விட்டு விடுங்கள். என் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்று உரத்த குரலில் கத்தியும் பலனில்லை. பலவந்தமாக விமானத்தில் ஏற்றிவிட்டார்கள்.

அவன் தலை குனிந்தது. வெட்கத்தால் அல்ல..

எப்படியும் தன் உயிர் பறிக்கப்படப் போவது உறுதி என்று எண்ணினான்.

இந்த விமானம் வேறு நாட்டில் தங்கிப் போகாதா என்றும் எண்ணினான்.

தங்கினால்... அங்காவது தப்பிவிடுவோம் என்று அவன் மனம் அங்கலாய்த்தது.

தன் ஐந்து தங்கைகளின் எதிர்கால வாழ்வு..

அவன் இப்போது அழவில்லை.. அவனால் அழமுடியவில்லை. ஆனால் அவன் மனம் அவனையும் அறியாமல் அழத்தான் செய்தது.



படிப்பகம்

www.padippakam.com

## யன்னல் திராட்சை

என் வீட்டு யன்னலில் - அழகான
திராட்சைக்குலையொன்றைக்
கட்டி வைத்தேன்.
பச்சை வண்ணத்தில் பார்ப்பதற்கு
இயற்கைபோல்
பனிக்காலம் மறைந்து
வசந்தளிர்க்காலம் வர
பகலவன் ராச்சியம் ஆரம்பம்
முழுநிலவும் தனது வயதைக் குறைத்துக்
கொண்டது.
ஆனந்தம் எல்லோர்க்கும்
வண்ண வண்ண பூக்கள்
வண்டுகள் தேனீக்கள் படையெடுப்பு
கண்ணாடி யன்னலின் கவர்ச்சித்
தோற்றத்தில்
கொழுத்த கனிக்குலை கூவி அழைத்திடும்
முட்டின, மோதின முனகிச் செத்தன.
விளக்கொளியில் விழுந்து சாகும்
விட்டில் பூச்சிகள் போல் ஒருநாள்
காற்றைச் சுவைத்திட கதவைத் திறந்து
வைத்தேன்.
வண்டுகள் தேனீக்கள் வரிசையாய்
வந்தன.
இறப்பர் பழத்தினில் ரசமேது வரும்.
வெட்கமும் வேதனையும் எப்படியும்
வந்திருக்கும்
மாய வலையில் மனிதர் மட்டும் விழவில்லை

- பொன் புத்திசிகாமணி



படிப்பகம்

www.padippakam.com

## எம் வீட்டு முற்றத்து வேம்பு

வான் பயிராய் வளர்ந்துவிட்ட அவ்வேம்பதனை
என் பேரன் வளர்த்துவிட்டான் விருச்சம் என
வயதாலே முத்த அம் மரமதனை
முதல் நிழலாய் நான் கண்டேன் முற்றத்திலே
வசந்தமதே வந்துவிட்டால் துளிர்த்திடும் அதன் துளிரால்
துளிரதை என் பேத்தி பறித்தெடுத்து கொடுப்பினிலே
வெற்றிலையாய் வைத்திடுவாள்
கேட்பதற்கு ஔடதம் என்றே கூறிடுவாள்
கொக்கை தடி யெடுத்து முறித்திடுவான் என் அண்ணன்
அதன் தடியை துலக்கிடுவான் தன் பல்லை துல்லியமாய்
வசந்தம் என்றதுமே காலையிலே கூவிவிடுமே குயிலதுவும் அதிலிருந்து
என் தங்கையவள் எதிரொலியாய் கூவிடுவாள்
தன் குரலால் அதன் குரலை
மாலையிலே அதிலிருக்கும் ஆந்தை காட்டித் தம்பியர்க்குத்
தீத்திடுவாள் சோறும் சொதியும் என் அன்னை
சுற்றத்து நங்கை பொருத்தி வசந்தத்து இரவினிலே
விரித்திடுவாள் தன் பாயை அதன் கீழே
விடியலிலே எடுத்திடுவாள் அதன் உலர் பூவை
பாங்காகவே தட்டிடுவாள் வடகமாக அதை
பிஞ்செடுத்து வாயினுள்ளே தீண்டிடுவாள் தம்பியர்க்கு தங்கையவள்
சொண்டு சுழித்து அழுதவண்ணம் துரத்திடுவர் தம்பியரும்
சுற்றிடுவாள் வீடதனை தங்கையவள்
கொம்பு தனில் ஊஞ்சல் கட்டி ஆடிடுவோம்
தந்தையுமே சாய்ந்திடுவார் அதன் நிழலில்
மார்கழி என்றதுமே மாமனவன் ஏற்றிடுவான்
தன் வானொலியை அதன் மேலே விழா இசை கேட்பதற்கு
சுற்றமே கேட்டுவிடும் அவ்விசையை



படிப்பகம்

www.padippakam.com

பிஞ்சு பிடித்ததுமே கூடிவிடும் கிளிக் கூட்டம்
பத்தம்மா சொல்லிக் கூப்பிடுவோம் நாமதனை
அந்தி பட்டாலே வேலி தாவி ஏறிவிடும் கோழிகளும் அதன் மேலே
பூனையிடம் காப்பதற்காய் கப்பி போட்டு ஏற்றிடுவோம்
குஞ்சுகளின் கூடதனை
தூக்கணாங் குருவிக் கூடாத் தொங்கிடுமே கோழிக்கூடும்
தம்பியரின் கையில் உள்ள உணவதனைக் கொத்தியே
பறித்து விடும் அதில் உள்ள காக்கைகளும்
வேரதனில் கட்டி வைத்த நாய் அதுவும்
எட்டியே கலைத்து விடும் காகமதை
சவரப் பார்வையின் தொங்கு கண்ணாடிக்காய்
அறைந்து விட்டார் என் தந்தை ஆணியொன்றை
பொங்கல் என்று வந்தாலே கொழுவி விடுவேன்
கோர்வை வெடி அதன் மேலே
பிள்ளையது பிறந்து விட்டால் வந்திடுவர் பட்டையதனை உரிப்பதற்கு
புகையிலை நடுகை யென்றால் வந்திடுவர் அலக்குகளை ஒடிப்பதற்கு
கடுமையான சட்டமது எம் வீட்டில் இருந்ததினால்
உரிப்பதற்கும், ஒடிப்பதற்கும் உரிமையங்கு இருக்கவில்லை
தேடிடுவர் கோயில் வேம்பு
பக்கத்து வீட்டு ஆத்தாள் அவள். தாயம் என்று சொன்னதுமே
காயாக எடுத்திடுவாள் இலை ஒடிந்த காம்பதனை
அது அவளுக்கு அதிர்ஷ்டமாம்
என் பேத்தி சேர்த்திடுவாள் அதன் கொட்டை
புகைத்திடுவாள் மாரியிலே நுளம்பதற்கு
பிசினுக்காய் வெட்டி விட்டால் ஏசிடுவாள் என் அம்மா
ஏறிடுவேன் அதன் மேலே
விழுவானே இறங்கடா என்றிடுவாள்
என் அடாவடித்தனத்தாலே என் அம்மா துரத்திடுவாள்
ஓடிடுவேன் அதைச் சுற்றி
வேரதுவும் தடக்கிடவே விழுந்திடுவேன் நிலமதிலே



படிப்பகம்

www.padippakam.com

பிடித்திடுவாள் என் கையை
இன்றது பட்டதுவோ
வேருடன் போர்த்தனரோ
வீடதுவின் நிலைத் தூணாய் நின்றிடுமோ
பலகையாய்ப் போர்க்குழி தான் மூடிடுமோ
என்று காணும் என் பிள்ளை என் பார்வையில்
அவ் வேம்பை .

- வ. ந. ஜெயபாலன்

# உத்தரவாதம்



கே. பி. ராஜா

நேரம் இரண்டு மணியை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. சத்தியாவின் மனம் அவனது கைக்கடிகாரத்தையும் விமானநிலையத்தின் மணியையும் ஒப்பிட்டபடியே விநாடிக்கொரு தடவை அலை மோதிக் கொண்டிருந் தது. அருகில் இருந்த அவனது நண் பன் சுரேசையே அவன் மறந்துவிட்ட நிலையில் பதட்டப்பட்டுக் கொண் டிருந்தான். இதுவரை வேகமாக ஓடியநேரம் ஏன் இப்போது இவ்வ ளவு மெதுவாக ஓடுகின்றது என்று அவன் தனக்குள்ளே ஆத்திரமடைந் தபடியே விமானப் பயணிகள் வெளி யேறும் வாசலை நோக்கியபடி நின் றான். அவனது அமைதியின்மைக்குக் காரணம் அவனுக்காக ஒரு வாழ்க் கைத் துணையொன்று இலங்கையில் இருந்து வருவது தான். பயணிகள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தாரிணியை மட்டும் காண வில்லை. அமைதியிழந்தான் சத் தியா திடீரென நீல நிறச்சட்டையுடன் கையில் தூக்க முடியாத பாரத்துடன் ஒரு பெண் வெளியேறிக் கொண்டிருக் கிறாள். அவளைக் கண்டதும் அது தான் தாரிணி என்று அடையாளம் கண்டுவிட்டான். எப்படி அழைப்பது ஹலோ எனலாமா அல்லது தாரிணி



படிப்பகம்

www.padippakam.com

என்றே அழைக்கலாமா என்று மனம் போராடிக் கொண்டிருந்தபோது மனிதன் போராட்ட முடிவைக் காத்திராமல் "ஹலோ தாரிணி" என்று அவனது நாக்கு முந்திக் கொண்டது. குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினால் தாரிணி அங்கே சத்தியாவைக் கண்டதும் நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள். தாரிணியின் சூட்கேசை சத்தியா வாங்கிக் கொண்டான். பாரமான சூட்கேஸ் ஆனால் அவன் சமாளித்தவாறே தூக்கிச் சென்றான். குடும்ப பாரம் சுமக்கப் போகும் சத்தியாவுக்கு இது ஆரம்பச் சுமையல்லவா.

சத்தியா எட்டு வருடங்களாக ஜெர்மனியில் இருக்கிறான். வயது முப்பத்திரெண்டைத் தாண்டி விட்டது. ஆனால் இப்போது தான் அவனுக்கு திருமண அனுமதி பெற்றோரிடம் இருந்து கிடைத்துள்ளது. தன் குடும்பத்தின் சிறப்புக்காக இரவு பகலாக உழைத்துக் கொண்டிருந்தான். சத்தியாவின் நல்ல குணங்களை அறிந்திருந்த தாரிணியின் பெற்றோர் பெண் கொடுக்க முன் வந்தனர். சத்தியாவை விமான நிலையத்தில் கண்டதுமே அவனது அமைதியான குணங்களைக் கண்டு மனதுக்குள் ஓரளவு சந்தோசப்பட்டாள்.

சுரேஸ் சத்தியாவுடன் வேடிக்கையாகப் பேசியபடியே காரை வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தான். என்ன பேசுவது எப்படிப் பேசுவது என்பதைப் புரியாமல் கண்களை மூடியபடியே பின் சீற்றில் தாரிணி அமர்ந்திருந்தாள். குடும்பத்தில் ஒரேயொரு பெண் பிள்ளையாகப் பிறந்திருந்தும் பெற்றோருடன் சேர்ந்திருக்காமல் கல்யாணம் என்ற பந்தம் தேடிப் பறந்து வந்திருந்தாலும் அவளது மனம் இலங்கையை நோக்கி ஓடிச் சென்றது.

"தம்பி நாங்களாக ஒன்றும் பெண் கேட்டு வரவில்லை. நீங்கள் தான் என்ர பிள்ளையின்ரை சிறப்பைக் கண்டு வந்திருக்கிறியள் நான் பேசினபடி சீதனம் தருவதாயிருந்தால் தான் இந்தக் கல்யாணம் இல்லையேல் வேறு இடத்திலை பார்க்கவேண்டியது தான்" என்று சத்தியாவின் தாய் தாரிணியின் தந்தையிடம் தன் மகனை விலைபேசிக் கொண்டிருந்ததும் எவ்வளவோ நிபந்தனைகளுடன் சீதனப் பேச்சுவார்த்தைகள் நடந்ததும் தாரிணியை மனம் நோக வைத்தன. ஏதோ தமது பிள்ளை வெளிநாடு சென்றால் தான் நிம்மதியாக வாழமுடியும் என்ற அவளது பெற்றோரின் விருப்பத்தை அவளால் மறுக்கவும் முடியவில்லை. தாரிணியின் சிறப்பான வாழ்வுக்காக எதையும் இழக்கத் தயாராக நின்றனர் அவளின் பெற்றோர். அவர்களின்

## நீ என்ன சொல்வாய்?

வா நண்ப!
எம் ஆண்டவர்
ஆலயம் செல்வோம்
அவர் முன்னே
நாம் நிற்கையில்
நான் சொல்வேன்-
'மீட்பரே,
நான் யாரையும்
வெறுக்கவில்லை - ஆனால்
வெறுக்கப்படுகின்றேன்
நான் யாரையும்
ஹிம்சிக்கவில்லை - ஆனால்
ஹிம்சிக்கப்படுகின்றேன்
நான் யார் மண்ணையும்
அபகரிக்கவில்லை - ஆனால்
எனது நிலம்
அபகரிக்கப்படுகிறது
நான் யாரையும்
ஏளனம் செய்யவில்லை -ஆனால்
ஏளனம் செய்யப்படுகிறேன்'
ஆம் நண்ப!
நீ என்ன
சொல்வாய்?

**-ஜோசப் எல். கொட்டர்**
(கறுப்பின அமெரிக்க கவிஞர்)



படிப்பகம்

www.padippakam.com

பலவீனத்தைப் பலமாக்கிக் கொண்ட சத்தியாவின் தாயின் கொடுமைகள் தாரிணியின் நெஞ்சத்திரையில் நீங்காமல் இடம் பிடித்துவிட்டது.

" நீ ஒன்றையும் எண்ணிக் கவலைப் படத் தேவையில்லைப் பிள்ளை என்ர மகன் உன்னை ராணி மாதிரி வைத்திருப்பான்"

இது சத்தியாவின் தாய் வாங்கிய சீதனத்துக்காக கூறிய உத்தரவாத மொழிகள்.

எது எப்படியிருப்பினும் சத்தியாவின் குணம் மாறுபட்டது என்பதை நண்பர்களின் பேச்சுக்களின் மூலம் ஓரளவு புரிந்து கொண்டதில் சிறு சந்தோசம் கொண்டாள் தாரிணி. திருமணத்துக்கு முன்னர் பிள்ளைகளின் சுகங்களை எலலாம் சுரண்டி உல்லாச வாழ்க்கை வாழும் பெற்றோர். திருமணம் நிச்சயம் பண்ணும்போது பெண் வீட்டாரையும் சுரண்டுவதில் பின் நிற்பதில்லை.

நினைவுகள் நீந்தி வர நித்திரை போல் இருந்தவள் "தாரிணி" என்ற சத்தியாவின் குரல் கேட்டு விழித்த போது தான் கார் சத்தியாவின் வீட்டு வாசலில் நிற்பதை உணர்ந்து கொண்டாள்.

வருடங்கள் இரண்டு ஓடிச் சென்றது சத்தியா, தாரிணி இருவருக்கும் புதிய பந்தமாக ஒரு மகளும் வந்து விட்டாள். அன்று காலை வழமை போன்று தனது கடமைகளை முடித்துவிட்டு மகளுடன் மழலை பேசிக் கொண்டிருந்தாள் தாரிணி.

வெளியே கார் வந்து நிற்பது யன்னலூடாகத் தெரியவே பார்வையை வெளியே விடுகின்றாள். காரில் இருந்து சத்தியாவின் நண்பன் சுரேஸ் வந்து கொண்டிருந்தான் வேலையில் நின்ற சத்தியாவுக்கு உடல் நிலை சரியின்மையால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதை சுரேஸ் பக்குவமாகக் கூறினான். ஆனால் தாரிணி தடுமாறி விட்டாள். அவளது இன்பமான வாழ்க்கையில் ஏன் இந்த வேதனை என்று எண்ணியவள் ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள்.

அங்கே பரிசோதனை முடித்த டாக்டரின் தகவல் அவளை அமைதியிழக்க வைத்தது. சத்தியாவினால் இனிமேல் கடினமான வேலைகள் செய்யமுடியாது என்றும் அவன் சில வருடங்கள் ஓய்வாக இருக்கவேண்டும் என்றும் டாக்டர் பல அறிவுரைகள் கூறினார். ஆட் அவனது கடந்தகால உழைப்புக்கள் அவனது உடலின் சுகத்தை உறிஞ்சிக் கொண்டன. சத்தியாவின் நிலையை அவளால் ஜீரணிக்கமுடியவில்லை. கண்ணீரால் தன் கன்னங்களைக் கழுவிக் கொண்டாள். மயக்க நிலையில் இருக்கும் சத்தியாவிடம் கண்ணீரால் விடைபெற்று வீடுசென்றாள்..

நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகியதும் சத்தியா வீடு திரும்பினான். ராஜ நடைபோட்ட அவன் இன்று அடங்கி ஒடுங்கி அமைதியாகிவிட்ட கடல் அலை போல் இருக்கும்போதெல்லாம் தனக்குள் விம்மிக் கொள்வாள் தாரிணி. அவனது இந்த நிலைக்கு அவனது குடும்பத்தினர் தான் காரணம். அவர்களின் வாழ்க்கை தான் அவளின் மனத்திரையில் படமாகியது.

சாதாரண வாழ்க்கை வாழ்ந்தவர்கள் சத்தியாவின் வெளிநாட்டுப் பயணத்தின் பின்னர் மற்றவர்களுக்குப் போட்டியாக வாழத் தொடங்கினார்கள். தமது தேவைக்கு ஏற்றவாறு வெளிநாட்டில் இருக்கும் சத்தியாவைப் பயன்படுத்தினர். தேவைக்கு மீறிய தேவைகளுக்காகவெல்லாம் பணத்துக்கு அழைப்பு விட்டார்கள். அவனோ சக்திக்கு மீறி உழைத்ததின் பயன் இன்று சக்தியிழந்து நிற்கின்றான். உடலின் வலுக்களையெல்லாம் உறிஞ்சி எடுத்த பின்னர் உருக்குலைந்த உடலுக்கு ஒரு திருமண ஏற்பாடு, அதுவும் போதாமைக்கு பெண் வீட்டாரை உறிஞ்சியெடுக்க



படிப்பகம்

www.padippakam.com



சீதனம் என்றொரு சீர்கேடு இவையெல்லாம் தமிழருக்கான சிறப்புகள் என்றவாறே மனதில் கோபம் பொங்க வீட்டு வேலைகளை அமைதியாகக் கவனித்தபடியே நின்றவள் வெளியே தபால்காரனைக் கண்டதும் ஓடிச் சென்றாள். அவள் நினைத்தபடியே இலங்கையில் இருந்து தபால் ஆனால் சத்தியாவின் தாயின் தபால் என்றதும் கடிதம் அவனது கைக்கு மாறியது. கடிதத்தை வாசித்த சத்தியா அசட்டுச் சிரிப்புடன் தாரிணியிடம் நீட்டினான். அதில் சத்தியாவின் தங்கையின் திருமணம் இன்னும் நான்கு மாதத்தில் நடப்பதற்கு பணம் கேட்டு எழுதியிருந்தார்கள். கடிதத்தைப் படித்த தாரிணி ரெலிபோன் புத்தகத்தில் தன் சினேகிதியின் நம்பரைத் தேடிக் கொண்டிருந்தாள் ஆம் ! இனிமேல் அவள் தான் குடும்பத்தின் சுமையைச் சுமக்கவேண்டும். வேலை தேடும் படலத்தில் குதித்துவிட்டாள்.

சிறுதொகைப் பணம் கொடுத்து வாங்கும் பொருளுக்கே கம்பனிகள் குறிப்பிட்டகால உத்தரவாதம் கொடுக்கின்றார்கள். ஆனால் இத்தனை இலட்சம் கொடுத்து வாங்கும் மாப்பிள்ளைகளுக்கு மட்டும் ஏனோ உத்தரவாதம் கொடுப்பதில்லை

(முற்றும்)

# அப்பா ஒரு தெய்வம்



ஜெர்மன் பாஸ்போட்காரன் சிவசுப்பிரமணியம் தன் பெற்றோரைப் பார்க்க சென்றவன் வீட்டுக்குள் நுழையும்போது தனது சப்பாத்துக்களை கழற்றிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தபோது, பிரம்பு நாற்காலியில் சாய்ந்திருந்த அப்பா வழக்கம் போல் பேப்பரில் மூழ்கியிருக்க " அப்பா" என்று குரல் கொடுத்தான்.

பேப்பரைத் தாழ்த்தி தலையை உயர்த்திப் பார்த்த அப்பா, " ஏன்ரா வந்தாய்" என்றார். இக்கேள்வியை எதிர்பாராதவனாய் , கொண்டு வந்த பெட்டியை உள்ளே வைத்தபோது " உன்னுடைய உறவு வேண்டாம் என்று தானே கைகழுவி விட்டோம் ஏன் வந்தாய் நீ " என்றார்.

சுப்பிரமணியம் வாயே திறக்கவில்லை. அம்மா எட்டிப் பார்த்தாள். ஓடிவந்து கண்கலங்க கட்டி அணைப்பாள் என்று நினைத்தவன் ஏமாந்துபோனான். " என்ன காப்பி கொண்டு வரட்டா " என்று வேற்று மனிதனைக் கேட்பது போல் கேட்

(55ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com



# இரவு வேலையா..




இயற்கையாகவே இருந்த அழகை அவள் தனக்குத் தானே அலங்கோலம் செய்திருந்தாள். சோமாலியாவிலிருந்து இப்போதுதான் காப்பாற்றிக் கொண்டு வந்தார்களோ என்று சிந்திக்க வைக்கும் அளவு மெலிந்த தேகம். அதனை இறுக்கியபடி கறுப்பு நிறப் "புல் ஓவர்". முழங்காலில் கிழிந்து(அல்லது கிழிக்கப்பட்டதோ?) காணப்பட்ட வெளிறிய ஜீன்ஸ். கரிய நீண்ட தலை மயிரை அள்ளி உச்சியில் முடிந்திருந்த தோற்றம் ரவிவர்மாவின் 'சாகுந்தலா ஓவியத்தை நினைவூட்டியது.

உலகத்தையே அலட்சியம் செய்தது அவள் நடை. நேரே சென்று 'பார்' ஸ்டூலில் அமர்ந்து கொண்டாள்.

'பார்' டாமாவிடம் ஏதோ கூற அவளும் ஒரு கிளாஸ் பியரை அவள் முன் வைத்து விட்டு மற்றவர்களை நோக்கி நகர்ந்தாள்.

பியர் கிளாஸைக் கையில் எடுத்து ஒரு உறிஞ்சல்.... இடைநிறுத்திய அவள் தன் கண்களைச் சுற்றிலும் மேய விட்டாள். 40 வயதான என் கண்கள் தன் மீது மொய்த்திருப்பதைஉணராமல் சுற்றிலும் பார்த்தவளின் பார்வை இப்போது என் மீது தங்கியது. இதழ்கள் மெல்லப் பிரிந்து சிரித்தனவா? அல்லது வெறுப்பை உதிர்த்தனவா?.... எனக்கென்ன அவளை அளக்கலானேன். இது சுத்த ஆரிய ரத்தமல்ல, கலப்புத் தான்.

'பாரை' விட்டு விலகி என்னை நோக்கி அவள் நடந்து வந்தாள். 18-19 தான் இருக்கும். அறமிஞ்சினால் ஒன்று கூட. என் முன்னால் இருந்த 'ஸ்கொச்'சை உள்ளே தள்ளிவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தேன். சுற்றி இருந்தவர்களின் கண்கள் (அட, ஆண்களின் தான்) ஈக்கள் ஆகின. அவளுடைய இறுகிய உடையின் மேற் பகுதி அந்த ஈக்கள் மொய்க்கும் தின் பண்டங்கள் ஆகின.



படிப்பகம்

www.padippakam.com

"டார்வ் இஷ்" என்றவள் என் பதி லுக்குக் காத்திராமலே என் அருகில் அமர்ந்து கொண்டாள். அவளை ஈக் களாக மொய்த்த எல்லாக் கண்க ளுமே இப்போது ஈட்டிகளாகி என் னைக் குத்தின.

"இந்த வயதில் இந்த முஞ்சிக்கு இன்னுமொரு பொம்பிளை தேவைப் பட்டதோ" என்று கத்திக் குளறிய என் மனைவி அல்லவோ இதைப் பார்க்க வேண்டும்.

அவளுக்கு இன்றிலிருந்து இரவு வேலை.... ஏழு நாட்களுக்கு. அவள் வேலைக்குப் போக, சும்மா பொழுது போகவென்று 'பாருக்கு' வந்த எனக்கு அப்படி ஒரு யோகமா?

சபலம் யாரைத்தான் விட்டது? நான் மகாத்மா அல்லவே? (என்ன இப்படி பச்சையாகவே உண்மையை ஒத்துக் கொள்கிறேன் என்கிறீர்களா? இப்ப தான் இரண்டு கிளாஸ் 'ஸ்கொச்' உள்ளே போயிருக்கிறது! இன்னமும் போனால் உண்மைகள் மட்டும் தானா..... தத்துவங்களே... வெளி யில் வருமே!)

நான் எலி...... அவள் தன்னை அறிமுகப் படுத்தினாள். "எலியா" எனக்குச் சிரிப்பு வெடிக்குமுன்னரே அவளாகச் சொன்னாள்

''எலனோராவின் சுருக்கம் எலி." அவள் தனது வலது கையை நீட்டி னாள். "பாலா." என்னை என் வாய் அறிமுகப்படுத்த என் வலது கையோ என்னையுமறியாமல் நீண்டு அவள் நீட்டிய கரத்தைப் பற்றியது. சில் லென்று குளிர்ந்த அந்தக் கரங்களால் என்னுடலை எப்படித்தான் 100 °c க்குச் சூடேற்ற முடிந்ததோ! என் உடல் கொதித்தது. அவளின் ஏதோ ஓர் விரலின் நீண்ட நகம் என் கைரேகைகளை மெதுவாகத் தடவி ஆராய்ச்சி செய்தது. என் கையை விடுவிக்க மனமில்லை. அவளும் விடவில்லை. முதலில் அலங்கோல மாகத் தெரிந்த அவள் இப் போது...... திடீரென்று அழகாகத் தென்பட்டாள். (ஆச்சரியமாக இருக் கிறதா? ) அப்போது என் அறிவு ஆராய்ந்தது. இப்போதோ என் உணர்வு அடிமையாகிக் கொண்டிருக் கிறது. என் முன்னாலிருந்த

**வண்ணத்துப்பூச்சி**



தமிழ் வளர்க்க
வண்ணத்துப் பூச்சியாகி
சத்தமின்றி
அதனை செய்யும் நீ
அடுத்தவரை வாழ்த்தி
அன்பை நிலைநாட்டுகிறாய்
இலை மறைவாய் இருப்போரை
வெளியே தூக்கி வந்து
உலகறிய வைக்கின்றாய
உன் ஐந்தாண்டு நிறைவு கண்டு
உள்ளம் மகிழும் நாம் - நீ
நீடூழி வாழ நெஞ்சார வாழ்த்துகின்றோம்
வாழ்க ! நீ வாழ்க !

**- அபூர்வ சகோதரர் விளையாட்டுக் கழகம்**
**சோஸ்ற்**



படிப்பகம்

www.padippakam.com

ஸ்கொச்சை விழுங்கிவிட்டு மீண்டும் ஒன்றுக்கு உத்தரவிட்டேன். அவளுக்கும் ஒரு பியர் ..... அதற்கென்ன என்று ஒய்யாரமாகத் தலையைச் சாய்த்து அவள் ஆட்டிய விதத்தில் என் மனமும் ஆடிவிட்டது. நான் பக்கத்தில் தானா வசிக்கிறேன் என்று கேட்டாள். "ஆம்" என்று என் தலை அசைய என் மனமோ உடனே படுக்கையறைக்குள் ஓடிவிட்டது. "வீட்டில் பியர் இருக்கா?" -"இல்லாத பி(F)ரிட்ஜ் ஜேர்மனியில் இருக்கா?" என்ற என் எதிர்க் கேள்வி அவளைச் சிணுங்க வைத்தது. "அப்படியானால் அங்கே போனால் வீண் செலவாகாதே" என்றாள் "குடிக்க மட்டுந்தானா" என்றேன். இன்று வெள்ளிக்கிழமை -சனி அதிகாலை வரையில் எனக்கு வேறு எந்த வேலையுமில்லை. என்று அவள் சொன்னது தான் ....
எனக்குள் ஒரு துச்சாதனன் பிறந்து வளர்ந்து கொண்டிருந்தான்.

மனைவிக்கோ இரவு வேலை. அதிகாலை ஏழரைக்குத்தான் வருவாள். இப்போது நேரம் 12ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. இரவின் தனிமையை இழுத்தெறிந்துவிட்டுத் தன் இளமையை எனக்கு விருந்தளிக்க அவள் தயாரென்று கோடுபோட்டுக் காட்டி விட்டாள். இனி என்ன? ஏழு இரவுகளின் தனிமையை இந்த ஒரு இரவு போக்கி விடாதா? திருமணமாகியும் இப்படி ஒரு சபலமா? இது முறையா?.... என்று
கத்தாதீர்கள். நான்தான் முதலிலேயே சொல்லி விட்டேனே. நான் மகாத்மா அல்ல. ஆசைகளும் சபலமும் நிறைந்த ஒரு சாதாரண மனிதன். "ஷிப்ட் வேலை வேண்டாம் .... விட்டுவிடடி" என்று எத்தனை தடவை என் மனைவியிடம் கூறியிருப்பேன். "விடுதலைப் பெண்கள் நாங்களடி" என்ற தோரணையில் "நான் வேலை செய்வது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? -நான் என்ன, கேவலம் உங்களுக்குக் கட்டுப்பட்ட அடிமையா? அல்லது உங்களுக்குச் சரிசமமான உங்களில் பாதியா?" என்று என் வாயைக் கட்டிப் போட்டாள். என்ன செய்வது? என்னில் ஒரு பாதி இரவு வேளைகளில் இயந்திரமாக இயங்கி பாங்கில் பணம் சேர்க்க நினைக்கிறது. மறு பாதியோ ... டீ.வி, வீடியோ, புத்தகம், புதினத்தாள் என்று பொழுதைப்போக்கப் பார்த்தும் தனிமை தாளாமல் "பார்"களில் அலைந்து மதுவை அருந்தி .. இதோ இன்று ஒரு வேற்றுமையான இளமையில் ஒற்றுமையாகித் தனிமையைத் துறந்து இனிமை காணத் துடிக்கிறது. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்கிறீர்கள்.....
அப்படித்தானே, ஐ டோன்ற் கெயர்... கோ டு கெல்.

முன்னால் வைக்கப்பட்டிருந்த பியரை அருந்தியபடி அவள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண் இமைகள் படபடத்தன. என் இதயப் படபடப்பை அடக்க மீண்டும் கொண்டுவந்து வைக்கப்பட்ட ஸ்கொச்சை விழுங்கிவிட்டு .. பில்லுக்கான பணத்துடன் அளவுக்கதிகமாகவே டிப்ஸை வைத்து விட்டு எழுந்தேன். அவளுக்கு ஷோ காட்டுவதற்காக அல்ல. இப்படி ஒரு இனிய இரவை ஏற்படுத்தித் தந்த பாருக்கு நன்றி செலுத்துவதற்காகத் தான்.

அவள் என்னுடன் ஒட்டிக் கொண்டாள். வெளியே டிசம்பர் குளிர்... காதுகளில் ஜிவ்வென்று மோதியது. -அவளுடைய உடல் கணகணப்பு எனக்கு கதகதப்பாக இருந்தது. தன் இடது கையால் என் இடுப்பைச் சுற்றி வளைத்தாள். என் வலது கை அவள் தோள்மீது சுழன்று அவளை இறுக என்னுடன் இழுத்துக் கொண்



படிப்பகம்

www.padippakam.com

டது.

"தூரமா"என்றாள். " இந்த அணைப்பில் எத்துணை தூரமென்றாலும் நடப்பேனே...... அவளுக்கு நான் சொல்லவில்லை. இரண்டு கட்டிடங்களைத் தாண்டி வீட்டின் வெளி வாசல் அடைந்து திறப்பைத் தேடி எடுத்தேன். அவள் கைகள் அதை என்னிடருந்து எடுத்து க் கதவைத் திறந்தன. "எத்தனையாவது மாடி?" " ஏழாவது " என்றபடியே லிப்டை அணுகினோம். ஏழை அமுத்தி விட்டு அவளை இழுத்து என்னுடன் அமுத்திக் கொண்டேன். நானா அமுத்தினேன்... இல்லை அவளாக வந்து .. சரி தான்.. எப்படி என்றாலும் விளைவு ஒன்றே.. அப்பார்ட்மென்டைத் திறந்து உள்ளே நுழைந்தோம். என் மனைவியின் மனதுக்குப் பிடித்த குக்கூக் குளொக் 1மணி ... கூவியது. இன்னும் ஐந்து மணித்தியாலங்கள் அவள் என் விளையாட்டுப் பொருள்... நான் அவளுக்கு ... ஆகா... என் மனம் எல்லாம் இன்பக் கிளுகிளுப்பு பியர்?.
"நான் கேட்டேன்." ம் ஹூம்... அவள் தலையாட்டினாள்.

ஜாக்கட்டுகளும் தாவணிகளும் கழன்று ஒதுங்கின. ஜீன்ஸுக்குள் செருகி விடப்பட்டிருந்த புல் ஓவரை வெளியே இழுத்து விட்டபடியே அவள் வீட்டை வலம் வந்தாள். மைக்ரோ வேவ் அவுண், டிஷ்வோஸர், வோஷிங் மெஷின், . . இப்படி ஜன்பெள குச்ச... அவள் கண்களில் பொறாமையா?
என் கண்களில் பெருமை.. கொடியாகி அவள் என்மீது படர மெதுவாக வோண் சிம்மர் வந்தோம். என் கரங்கள் அவள் இடையில் மட்டும் நின்றுவிடவில்லை.... மெதுவாக ஊர்ந்தன. கொம்பியூட்டரைப் பார்த்தாள் ... ஐ. பீ. எம் கிட்டத்தட்ட ஐயாயிரம் மார்க் என் குரல் என் வளமையைக் காட்டியது. (தேவையா?) டி. வி,

## அப்பா ஒரு...

(51ம் பக்கத் தொடர்ச்சி)

டாள். " ஏன்ரா இப்படிச் செய்தாய்?" என்று கேட்டாள். " ஏன்ரி அவனைக் கேட்கிறாய் அவன் பதில் சொல்லமாட்டான். நான் அப்பன் கேட்டுக்கொண்டிருக்கிறன் அவன் பதில் சொல்லாமலே இருக்கிறான். இந்தக் காலத்துப் பொடியளட்டை மரியாதையை எதிர்பார்ப்பது என்ர முட்டாள்தனம் தானே" என்று முணுமுணுத்தார்.
" ஏன்ரா கேட்டுக்கொண்டே இருக்கிறன் பதில் சொல்லுறது -தானே " - அப்பா மீண்டும் கத்த ஆரம்பித்தார்.
"இங்கே பெண் கிடைக்காமல் ஒரு வெள்ளைக்காரியைச் செய்துபோட்டு வந்திருக்கிறானே " என்றார்.
சுப்பிரமணியம் புயலாய் அப்பா முன் வந்து நின்று, "அப்பா என்னை ஜெர்மனியை விட்டுத் துரத்த அரசு தீர்மானித்தபோது நான் திரும்பி வந்திருந்தால் நமது நிலை என்னவாகியிருக்கும். அக்காமாரின் சீதனத்துக்குப் பட்டகடனையும் முடித்து வைத்து மாதாமாதம் உங்களுக்கும் ஐநூறு மார்க் அனுப்ப முடிகிறது" என்றான்.
" செய்யுறதையும் செய்து போட்டு நியாயம் வேற சொல்லுறான். ஊரிலை எத்தினை பொடியள் இண்டைக்கு ஜெர்மனியில் இருந்து உழைச்சு உழைச்சு அனுப்புதுகள். அதுகள் எல்லாம் ஜெர்மன்காரியளையே கட்டியிருக்குதுகள். முடிஞ்சது முடிஞ்சது தான். இனி நம்மட அப்பன் மகன் என்ற உறவு முடிஞ்சு போன ஒன்று. நீ இனியும் இங்க நிண்டால் கொலைதான் விழும்" என்று கத்தினார் அப்பா.
வேறு வழியின்றி மீண்டும் ஜெர்மனிக்கு திரும்புவதற்காக கொழும்புக்கு புறப்படத் திரும்பிய சுப்பிரமணியம் வீட்டிலிருந்து வெளியே வந்தான்.

(59ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு ரேடியோ, தனித்தனிப் பார்ட்ஸ் ஆக வாங்கி நானே பொருத்திய என் பெருமைக்குரிய "டெக் செற்". விடுவேனா நான்?. சூவாண் சிம்மர் ஷ்ஹாஸ்க்கிலிருந்து என் வீடியோ கமராவை எடுத்துக் காட்டினேன். "இவ்வளவுமே கிட்டத்தட்ட பத்தாயிரம் முடியும்" என்றாள். "சீ.. பதினைந்துக்கு மேலயே இன்றைய பெறுமதி இருக்கும்." நான் உண்மையைத்தான் ஆனால் பெருமையுடன் கூறினேன்.

அவள் கண்கள் ஜொலிக்க மெதுவாக அருகில் வந்தாள். எனக்குப் பொறுக்கவில்லை......எனக்குள் வளர்ந்து கொண்டிருந்த துச்சாதனனோ என்னைத் தள்ளி விழுத்தி விட்டு துயிலுரியத் தொடங்கினான். என்ன அவசரம்?, ஸலாப்சிம்மர். அவள் குரலா அல்லது வீணையா? பின்னிப் பிணைந்து மெல்ல நடந்து கட்டிலறைக்கு வந்தோம். நான் கட்டிலில் அமர ...அவள் கண்ணோட்டம் அறையை மேய்ந்து என்னில் நிலைத்தது. மெதுவாக அருகில் வந்து என் வலது மடியில் அமர்ந்தாள். என் கைகள் அவள் புல் ஓவரைக் கழற்ற முயன்றன.

எட்டித் தன் ஹான்ட் பாக்குக்குள் இருந்து ஒரு ஸ்பிறேயை எடுத்தாள். அவள் உதடுகளைத் தேடிய என் உதடுகளை ஒதுக்கி என் நா "என்ன" என்றது. "வாசனைத் திரவியம்..." அவள் தன் உதடுகளை என் உதடுகளுக்கருகில் கொண்டுவந்து அந்த ஸ்பிறேயை என் மூக்கருகில் கொண்டு வந்தாள். அவள் விலகி என் மூக்கருகில்.... ஸ்பிறே....ஆகா...என்ன வாசனை.

திடுக்கிட்டு விழித்தேன். எத்தனை மணி? அவள் எங்கே?

என்ன நடந்தது..?

என்னப்பா ...உங்களுக்கு ஒண்டுமில்லையே.. பறாளாயான் காத்திப் போட்டான்.... வீட்டுக்கை புகுந்தவங்கள்.... நல்லகாலம் உங்களை மயக்கிப்போட்டாங்கள் உங்களை ஒண்டும் செய்யேல்லை. T.V, வீடியோ, கமெரா, மைக்ரோ, குக்கூக்குளொக் ஒண்டும் மிச்சமில்லை. இப்ப பகல் ஒரு மணி.. பொலிஸ் எல்லாம் வந்து றிப்போட் எடுத்துக் கொண்டு போட்டாங்கள். அம்புலன்ஸும் வந்தது . பயப்பிட ஒண்டுமில்லையெண்டு சொன்னவை. தெய்வமே.. தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போட்டுது. எளிய கள்ளங்கள்.. எனக்குத் தலை சுற்றியது.

"நாற்பது வயதில் சபலம் வந்து ...."இப்படிப் பழிவாங்கிப் போட்டாளே...."

என்னப்பா யோசினை ஒண்டுக்கும் யோசியாதீங்கள் நான் தொடந்து இரவு ஷிப்ட் வேலை செய்தனெண்டால் ஒரு அறு மாதத்திலை எல்லாம் வாங்கிப் போடலாம். என் மனைவி எனக்கு ஆறுதல் கூறினாள்.

"இரவு ஷிப்ட்டா? தொடர்ந்து ஆறு மாதமா? ..ஆண்டவனே ஒரு இரவில் இப்படியெண்டால்.... ஆறுமாதம்.. ஐயைய்யோ வேண்டாம். டீ. வி, வீடியோ, கொம்பியூட்டர் ஒன்றுமே வேண்டாம். நீ மட்டும் போதும் ஆத்தை." நான் அலறினேன்.

"நல்லாப் பயந்திட்டார்...ஒரு பெருகிகுங் ( Beruhigung ) டப்லெட்டைக் குடுத்துப் படுக்க விடுங்கோ.." நண்பன் சின்னையாவின் குரல் கேட்டது.

---

கண்ணீர்,
வியர்வை,
வான் - நிலவு
தென்றல்,
அழகெலாம்
குருதியில் நனைந்தே...
இப்போதைக்கு,
எங்கள் எழுதுகோலும்
அப்படியே!

**- அநேகன்**



படிப்பகம்

www.padippakam.com

அன்பர்களே



வணக்கம்



உங்களுக்குத் தேவையான தமிழ் ஆக்கங்கள் அனைத்தையும் அழகுமிகு தமிழ் எழுத்துக்களுடன் நீங்கள் விரும்பும் முறைகளில் கணனி (COMPUTER) மூலம் செய்து கொள்வதற்கும் மற்றும் உங்களுக்குத் தேவையான கணனியை (COMPUTER) எம்மிடம் வாங்குவதற்கும், ஆலோசனைகளுக்கும் தரமான PROGRAM ஆங்கிலம், ஜேர்மன் அல்லது அழகுமிகு தமிழ் எழுத்துக்கள் (வேதா Fonts) Windows ஊடாக அனைத்துத் தொடர்புகளுக்கும்

வேதநாயகம் கபிரியேல்

Vethanayagam GABRIEL
Danneckerstr. 94
7470 Albstadt. 1
Germany

TEL:. 07431 / 72326 or 3592
Fax:. 07431 / 74059



படிப்பகம்

www.padippakam.com



# ஆசிரியத் தலையங்கங்கள் அருமை!

பத்திரிகை வெளியிடுவது என்பது கத்தி முனையில் நடப்பது போன்ற செயல். ஒவ்வொரு செய்திகளையும் எழுத்துக்களையும் நிதானமானதாக வும் ஆரோக்கியமானதாகவும் எழுத வேண்டும். அப்படி எழுதினால் தான் மக்களிடம் சென்றடையும். அதே வேளை பத்திரிகையின் தரமும் உயரும். வெறும் வெள்ளைத் தாள்க ளில் அச்சிடப்பட்ட கரியகோடுகளாய் இல்லாமல் கூரிய வேல்களாய் புத் தியில் குத்திட்டு நிற்கும் சொற்களாய் எழுதவும் வேண்டும். அந்த வகை யில் " வண்ணத்துப் பூச்சி" சளைத் ததல்ல என்று அது ஒவ்வொரு முறையும் தன் சிறகுகளை விரிக்கும் போது கண்கூடாகப் பார்க்கின்றோம்.

வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதுவதென் றால் நமக்கெல்லாம் ஒரு கடினமான காரியம். அறுபத்தியெட்டுப் பேப்பரில் எழுதி எழுதி மனதுக்கு திருப்தி ஏற் படவில்லையென்று கிழித்துக் கிழித்து இறுதியில் " பேனா "வுடன் ஒரு உடன்படிக்கைக்கு வந்து , இனி எப் படியாவது இருக்கட்டும் என்று ஏனோ தானோ என்று எழுதி முடிக் கும்போது அப்பாடா .... ஒரு தலைவலி தீர்ந்தது என்று திருப்தி அடைகின்றோம். ஆனால் ஒரு சஞ் சிகையை கையெழுத்துப் பிரதியாக வெளியிட முனைந்ததற்கு !

வெளியிட்டதற்கு !

என்ன கொடுக்கவேண்டும். அதே கையெழுத்துப் பிரதி இன்று கம்பியூட் டர் பதிப்பாக வரும்போது அவர்க ளுடைய தளராத முயற்சிக்கு அவர் களுடைய நம்பிக்கைக்கு என்ன கொடுக்கவேண்டும்.

ஒரு குழந்தைக்குத் தாய் எவ்வளவு முக்கியமோ !

ஒரு குடும்பத்திற்கு தகப்பன் எவ்வ ளவு முக்கியமோ !

ஒரு நாட்டுக்குத் தலைவன் எவ்வ ளவு முக்கியமோ !

அவ்வளவு முக்கியம் ஒரு சஞ்சி கைக்கு "ஆசிரியத் தலையங்கம்" அந்த வகையில் வண்ணத்துப்பூச்சி யின் ஆசிரியர் திரு காசி அவர்க ளைப் பாராட்டாமல் இருக்கமுடி யாது. 'ஈழநாடு', 'வீரகேசரி' ஆகிய இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்கள் என்னை மிகவும் பாதித்தவை. அந்த வரிசையில் என் னைத் திரும்பிப் பார்க்க வைத்தது வண்ணத்துப்பூச்சியின் ஆசிரியத் தலையங்கம்.

வெய்யிலில் அவர்கள் வெந்து துடிக் கிறார்கள்.

நிழலில் நாங்கள் குடை பிடித்துக் கொண்டிருக்கிறோம்.

நிழலில் அவர்களுக்கு பங்கு கொடுக் காவிட்டாலும்

வெய்யில் அடங்குமட்டும்

எங்கள் கையிலுள்ள குடையையா வது

அவர்களுக்குக் கொடுக்கக்கூடாதா -?

என்று எவ்வளவு பெரிய விசயத்தை எட்டு வரியில் தந்த எங்கள் ஆசிரி யர்கள் வேறோர் இதழில் "தாய் நாட்டு வாழ்க்கை" என்ற தலைப்பில் நாம் பிறந்து தடுக்கிலே உடம்பு பிரட் டும்போது நாக்கினால் நக்கிச் சுவைத்த எம் தாய்மண்ணின் இனி மையை நாம் வெளிநாட்டுக்கு வந் தாற்போல மறந்துவிடமுடியாது என்று தாய்மண்ணின் வாசனையை எங்கள் முகத்திற்கு அருகே ஒரு முறை நீட்டி எடுத்த ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து ....
நாங்கள் பிறந்து, வளர்ந்து, தவழ்ந்து, ஓடி விளையாடியது, நடக்க ஆரம்பிக்கும்போது தடுக்கி விழுந்து எழுந்தது அந்த மண்ணில், நண்பரோடு சேர்ந்து கிட்டி அடித்ததும் பள்ளங்களில் கிடந்த வெள்ளங்களில் விளையாடியதும், அம்மா, அப்பாவிடம் அடி வாங்கியதும் அந்த மண்ணில் .
சேற்று வயல்களில் நாற்றுநட்ட இன்பம் , தென்னை மரங்களிலே நண்பர்களுடன் கூடி இளநீர் பறித்துக் குடித்தபோது இருந்த இன்பம், எல்லோரும் கூடி இருந்து பழஞ்சோறு உழைத்து உருண்டையாக திரட்டி உண்டபோது இருந்த இன்பம், இப்படி எம் மண்ணில் இன்பங்களை வரிசைப்படுத்திக் கொண்டே போன ஆசிரியர் எங்கள் நினைவுகளையும் ஒருமுறை தாய்மண்ணுக்குக் கொண்டு சென்று புதைத்தெடுத்து கண்களைக் கலங்கவைத்துவிட்டார்.
நம் மத்தியில் இன்னும் தமிழ்வாணர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்.
அது மட்டுமா , திருமதி வி. பாக்கியநாதனின் (B. A) இலக்கணம் கற்போம் பகுதி கூட வண்ணத்துப்பூச்சிக்கு ஒரு சிறப்பம்சமாகும்.
இதைவிட குமுதம், கற்கண்டு பத்திரிகைக்கு இணையான அறிவியல் துணுக்குகள் பாராட்டக்கூடியவை. மணி அண்ணையும் சுப்புறுவும் பகுதி கூட சுவைபடவும், சீர்திருத்தக் கருத்துக்கள் உடையதாகவும் இருக்கின்றது.

வண்ணத்துப்பூச்சியின் ஐந்தாவது ஆண்டு நிறைவைப் பாராட்டி இன்னும் பல வண்ணங்களுடன் ஆறாவது ஆண்டை நோக்கி சிறகை விரிக்க வேண்டும்.

- இரா. மோகனராஜா
SPOHR STR 59,
6000 FRANKFURT.

# அப்பா ஒரு...

(55ம் பக்கத் தொடர்ச்சி)

மனதில் கவலை பெரிய சுமையாக இருந்தது. கண்களில் கண்ணீர் முட்டியது. வெளியே படலைவரை வந்தவன் கையில் வைத்திருந்த சிறிய கைப்பையை தவறுதலாக விட்டு விட்டு வந்தது நினைவுக்கு வந்ததும், மீண்டும் வீட்டுக்குள் சென்றபோது அம்மாவும் அப்பாவும் கதைத்துக் கொண்டிருந்தனர்.
"எடியே அவன் வெள்ளைக்காரியோட சந்தோஷமாக இருக்கட்டும். பணம் சேர்க்கிறதுக்காக மட்டும் வெள்ளைக்காரியை கட்டின அவன் பார்க்க தன்ர மனைவியைத் தான் கூடுதலாக நேசிக்கவேணும் எண்டுதானடி நான் அப்பிடி பேசி அனுப்பினனான். அவன்ர தலையெழுத்து வெள்ளைக்காரிக்கு வாழ்க்கைப்பட வேண்டிப் போச்சுது. அதுக்காக அந்த வெள்ளைக்காரியை அவன் மறக்கக்கூடாது. அவனுக்கு இனி வாழ்க்கை பூரா துணையா இருக்கப் போறது அவள் தானே. அவனுக்கு நம்மட நினைவு இல்லாட்டித்தான் அவளை கூடுதலாக நேசிப்பான் எண்டு தானடி நான் இப்பிடிப் பேசி அனுப்பினனான்." என்றார் அப்பா.
" உங்களுக்கு அவனிலை எவ்வளவு பாசம் எண்டது எனக்குத் தெரியும் தானே. நானும் அவனை கண்டவுடன துடிச்சுப்போனன். என்ர கையால ஒருவேளை சாப்பாடு கூடக் குடுக்காம அனுப்பிப் போட்டியள் எண்டுதான் வருத்தமா இருக்கு" என்றாள் அம்மா.
அவர்களின் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த சுப்பிரமணியம் ஓடிச் சென்று தாயைக் கட்டி அணைத்தான்.
"அப்பா, என்ர சந்தோஷத்துக்காக உங்கட பாசத்தைக் கூட மறைச்சு வைச்ச நீங்கள் தெய்வம் அப்பா " என்றான்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு சந்திப்பு

## "வளரும் எழுத்தாளருக்கு எப்போதும் முதலிடம்"

இலங்கையில் வடபகுதி செய்திகளை உடனுக்குடன் தாங்கி வந்ததுடன் தலைநகரில் அச்சிடப்படாத ஒரே யொரு செய்திப் பத்திரிகை என்ற பெருமையையும் தாங்கி வந்தது "யாழ்ப்பாணம் ஈழநாடு". அதில் கடமைபுரிந்த சிலர் "பாரிஸ் ஈழ நாடு" என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்திருந்தார்கள். அது இன்று ஜெர்மன், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் தனித்தனிப் பதிப்புக்களாக வெளியிடும் அள விற்கு பெயரையும் புகழையும் பெற்று வளர்ந்து நிற்கின்றது. இதன் பிரதம ஆசிரியர் எஸ். எஸ். குகநாதன் அவர்கள் வயதில் சிறியவராயினும்



அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந் தவரென்பதை அவரைச் சந்தித்து உரையாடியபோது கண்டு கொள்ள முடிந்தது. தன்னடக்கமும், அன்பும், பொறுமையும், ஆழ்ந்த சிந்தனையும் கொண்ட இவர் , எழுத்தாளர்கள, கலைஞர்கள் யாவரையும் மதித்து போற்றப்படுதல் மட்டுமல்லாது இவர் களுக்கு உதவி செய்யவும் தயங்கா தவர். இத்தகைய திறமையும் நல்ல உள்ளமும் கொண்ட திரு. குகநாதன் அவர்களை பேட்டி காண்பதில் "வ ண்ணத்துப்பூச்சி" பெருமடையகின் றது.

**வண்ணத்துப்பூச்சி:** வணக்கம் திரு. குகநாதன் அவர்கள்,

**பிரதம ஆசிரியர்:** வணக்கம்

**வண்ணத்துப்பூச்சி:** மிகக் குறுகிய காலத்திலேயே உங்கள் பாரிஸ் ஈழ நாடு பாரெங்கும் பறந்து எமது தமிழ் மக்களுக்கு அறிவொளி ஊட்டுகிறது என்பதை அறிகின்றோம். இத்தகைய உன்னதமான பத்திரிகைத்துறையில் நீங்கள் ஈடுபடுவதற்குரிய காரணத் தைத் தெரிந்து கொள்ளலாமா ?

**பிரதம ஆசிரியர்:** நிச்சயமாய், படித்து முடிந்ததும் அப்போது எனக்கு ஒரு வேலை தேவையாயி ருந்தது. ஈழநாட்டில் வேலையும் கிடைத்தது. எழுதுவதில் எனக்கு இருந்த ஆர்வம் மிகுதில் மிகச் சந் தோஷத்துடன் பத்திரிகைத்துறையை காதலிக்கத் தொடங்கினேன்.

**வண்ணத்துப்பூச்சி:** ஈழநாட்டில் எவ் வளவு காலம் கடமை புரிந்தீர்கள் ?

**பிரதம ஆசிரியர்:** 1977 இலிருந்து 1990 வரை .

**வண்ணத்துப்பூச்சி:** இத்தனை காலமும் தொடர்ந்து ஈழநாட்டில் கடமையாற்றினீர்களா அல்லது இடையில் வேறு வேலைகள் ஏதா வது செய்தீர்களா?

**பிரதம ஆசிரியர்:** 1985 ஆம் ஆண் டிலிருந்து 88 வரை லண்டன் சென் றிருந்தேன்.

**வண்ணத்துப்பூச்சி:** லண்டனில் உங்



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு எழுதவேண்டும் பத்திரிகை ஏதாவது ஆரம்பிக்கவேண்டும் என்று ஆர்வம் எழவில்லையா ?

**பிரதம ஆசிரியர்:** 1988 இல் நண்பர் ராஜகோபாலுடன் "தமிழன்" என்ற பெயரில் பத்திரிகையை ஆரம்பித்தோம். அதன் ஆசிரியராக ராஜகோபாலும் நிர்வாக ஆசிரியராக நானும் கடமையாற்றினோம். பின் இலங்கை இந்திய அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டதும் தாயகம் திரும்பிவிட்டேன். நான் நாடு திரும்பியதும் "தமிழன்" பத்திரிகையும் தொடர்ந்து வெளிவராது நின்றுவிட்டது. நான் நாடு திரும்பியதும் மீண்டும் ஈழநாடு பத்திரிகையில் இரவு நேர ஆசிரியராகக் கடமையாற்றிவிட்டு 1990 ஆம் ஆண்டு பிரான்சுக்கு வந்தேன். 1991 இல் "பாரிஸ் ஈழநாடு" பத்திரிகையை திரு. பாலச்சந்திரன், திரு. காசிலிங்கம், திரு. கந்தசாமி இவர்களுடன் ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராக கடமையாற்றி வருகின்றேன்.

**வண்ணத்துப்பூச்சி:** " பாரிஸ் ஈழநாடு" என்று ஆரம்பமாகி கனடா ஈழநாடு, ஜெர்மன் ஈழநாடு, அவுஸ்திரேலிய ஈழநாடு என்று முன்னேறித் தமிழ் மக்களுக்குப் பாரிய சேவை ஆற்றும் நீங்கள் மேலும் ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கின்றீர்களா?

**பிரதம ஆசிரியர் :** மலேசியாவிலோ அல்லது சிங்கப்பூரிலோ ஈழநாடு வெளியிடுவது பற்றி யோசித்து வருகிறோம்.

**வண்ணத்துப்பூச்சி:** ஜெர்மன் ஈழநாடு நிர்வாகி திரு. சிவனடியான் ஸ்ரீபதி அவர்களைப் பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா ?

**பிரதம ஆசிரியர்:** ஜெர்மனியில் சகல வளங்களையும் பெற்று ஒரு ஜெர்மனியராக வாழ்ந்தபோதிலும் தனது தாய்மண்ணையும் மக்களையும் நேசிப்பவர். புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்ப்பணி புரியும் முன்னணியாளர்களில் ஒருவர்.



**வண்ணத்துப்பூச்சி:** உங்கள் முயற்சிகளுக்கு மனைவி ஆதரவாக இருக்கிறாரா ?

**பிரதம ஆசிரியர்:** எந்த ஒரு மனிதனின் வளர்ச்சிக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்று அனுபவசாலிகள் சொல்லுவார்கள். இது போல் என் முயற்சிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருப்பதுடன் கம்பியூட்டரில் தமிழ் எழுத்துக்களை எழுதித் தந்தும் உதவு புரிகின்றாள் என் மனைவி.

**வண்ணத்துப்பூச்சி:** 'தவறுகள்'- என்ற ஒரு நாவலை வாசித்தேன். யாதார்த்தமாகவும் நெஞ்சைத் தொடும் வகையிலும் அமைந்திருந்தது. இதைவிட வேறு நாவல்கள் ஏதாவது எழுதிஇருக்கிறீர்களா ?

**பிரதம ஆசிரியர்:** தினகரனில் மூன்று குறுநாவல்களும், ஈழநாட்டில் ஒரு குறுநாவலும் தொடர்கதையாக எழுதியிருந்தேன். இப்பொழுது நேரப் பற்றாக்குறை காரணமாக எழுதுவதை தள்ளிப்போட்டிருக்கின்றேன்.

**வண்ணத்துப்பூச்சி:** பாரிஸ் ஈழநாட்டில் உங்கள் கதைகள் ஏன் இடம் பெறுவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

**பிரதம ஆசியர்:** வளரும் எழுத்தாளர்களை ஊக்குவிக்க முதலில் இடம் கொடுக்கவேண்டும் என்பதே ஈழநாட்டின் முக்கிய நோக்கம்.

நானும் ஒரு வளரும் எழுத்தாளன் தான் என்றாலும் எமது பத்திரிகையை நாமே ஆக்கிரமிக்கக்கூடாது என்று விரும்புபவன் நான்.

**வண்ணத்துப்பூச்சி:** ஈழநாடு துணை ஆசியர் பற்றி ஏதாவது சொல்லவிரும்புகின்றீர்களா ?

**பிரதம ஆசிரியர்:** "ஈழநாடு" இன்று இவ்வளவு சிறப்புடன் வெளிவருவதற்கு எனக்கு உறுதுணையாக இருப்பவர் என் இனிய நண்பன் இ. கந்தசாமி அவர்கள்.

**வண்ணத்துப்பூச்சி:** ஜெர்மன் வாழ் தமிழ் மக்களைப் பற்றி உங்கள் கருத்தைத் தெரிந்து கொள்ளலாமா ?

**பிரதம ஆசிரியர்:** தமிழ்ப் பண்பாடு , கலாச்சாரம் என்பவற்றை வளர்ப்பதிலும், தமிழ்க்கல்வியை தமது பிள்ளைகளுக்குக் கற்பிப்பதிலும் முன்னின்று உழைக்கின்றார்கள். இவர்கள் ஐரோப்பா வாழ் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் தகுதி உடையவர்கள் என்பதை பல சந்தர்ப்பங்களில் மேடைகளிலேயே கூறியிருக்கின்றேன்.

**வண்ணத்துப்பூச்சி:** ஜேர்மனில் பல சஞ்சிகைகள் வெளி வருகின்றன. இவை பற்றி ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?

**பிரதம ஆசிரியர்:** கம்பியூட்டரும், பொதுநிறுவனங்களின் உதவியும் கிடைக்கப் பெற்றால் சஞ்சிகை ஒன்றை இலகுவாக வெளியிடமுடியுமாயினும் இவற்றை வெளியிடுபவர்களுக்கு ஒரு இலட்சியமும் மனித நேயமும் இருக்காவிடின் அவர்களின் ஆக்கங்கள் நிலைத்து இருக்கமாட்டாது. பல சஞ்சிகைகள் ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு வழி வகுக்குமாயினும் அதில் வருவன மக்களை குழப்பமடைய செய்யாமல் இருந்தால் மட்டுமே முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

**வண்ணத்துப்பூச்சி:** உங்கள் இன்னோர் செயற்பாடான " ரஜனி பதிப்பம்" பற்றி ஒரு சில வார்த்தைகள்.

**பிரதம ஆசிரியர்:** இதுவரை ஐரோப்பாவில் எட்டுப் புத்தகங்களை வெளியீடு செய்திருக்கிறோம். தொடர்ந்து ஐரோப்பிய தமிழர்களின் நல்ல படைப்புக்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபடுவோம்.

**வண்ணத்துப்பூச்சி:** இறுதியாக வண்ணத்துப்பூச்சிக்கு நீங்கள் ஏதாவது ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்களா?

**பிரதம ஆசிரியர்:** ஆரம்பத்தில் பார்ப்பதற்கும் இன்று பார்ப்பதற்கும் நிறைந்த முன்னேற்றத்தை காணமுடிகின்றது. இனிவரும் காலங்களில் ஆக்கங்களில் கவனம் செலுத்தி தரமான ஆக்கங்களுக்கு முதலிடம் கொடுத்தால் ஐரோப்பிய தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு இடத்தைப் பெறும். ●



"என் வளர்ச்சிக்கு மனைவியும் காரணம்"



படிப்பகம்

www.padippakam.com

# மிழ்தமிழ்தமிழ்தமி
# மிழ்தமிழ்தமிழ்தமிழ்த
# மிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்
## மிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்த
## மிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்த
### ழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்த
### ழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்
### தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ்

தமிழ் தமிழ் தமிழ்.......!

எண்ண நெஞ்சினித்திடும் எங்கள் இனிய தமிழை எமது முன்னோர்களும் சான்றோர்களும் அரும்பாடு பட்டு வளர்த்து வந்தார்கள். அவர்கள் தமிழில் அரும்பெரும் உண்மைகளை, வாழ்க்கைநெறிகளை , அறவழிகளை எங்களுக்கும் எங்கள் வருங்கால சந்ததியினர்க்கும் எழுதிவைத்துவிட்டு மறைந்தும் மறையாது எங்களுடன் வாழ்கின்றார்கள். இந்நூல்கள் எம்மினத்தின் அறிவுப் பொக்கிஷங்கள். தேடுதற்கரியவையே. இவற்றை நாம் பாதுகாக்கவேண்டும். இதிலுள்ள தத்துவங்களையும் அறிவுக் குவியல்களையும் நாங்கள் தேடிக் கற்று அவற்றை எமது சிறார்களுக்கு படிப்படியாக ஊட்டவேண்டும்.

நாங்கள் இந்த நூல்களைப் புறக்கணிப்போமேயானால் அதற்குக் காரணம் இவற்றிலுள்ள அரும்பெரும் அறிவுத்திரவியங்களை நாம் அறியாமலிருப்பதேயாகும். இவ் அறிவுப் பொக்கிஷங்களை கருத்திற் கொள்ளாமல் அநாவசியமானவை என்று அசட்டை செய்வோமேயானால் பெலயீனப்படப் போவது நாமும் நம் சந்ததியினரும் தான்.

ஆங்கிலேயர் எங்கள் நாடுகளுக்கு வியாபாரம் செய்ய வந்த பின் தங்கள் அதிகாரத்தால் எம்மீது தங்களுடைய மொழியைத் திணித்திருந்தார்கள்.

ஆங்கிலம் இலகுவான மொழியென்று சிலர் சொல்லுவர். ஆனால் எந்த மொழியையும் ஆர்வத்துடனும் . அக்கறையுடனும் கற்போமேயானால் அந்த மொழியை இலகுவில் கற்றுத் தேறமுடியும். அத்தோடு அம் மொழியின் அவசியம் எமக்கிருந்தால் அல்லது அதைக் கற்பதால் வாய்ப்புக்களும் வசதிகளும் பெருகும் என்று தெரிய வந்தால் நாமும் அம்மொ



படிப்பகம்

www.padippakam.com

ழியை எச்சிரமப்பட்டாவது கற்றிடத் துடிக்கிறோம்

அன்று ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலத்தை கற்றால் அரசாங்க உத்தியோகங்களைப் பெற்றிடலாம். உயர் பதவிகளை வகிக்கலாம் என்ற அவாவினால் தான் எம்மவரில் பலர் ஆங்கிலத்தை தேடிக் கற்றார்களே தவிர இது ஒரு இலகுவான மொழியென்ற காரணத்தால் அல்ல.

மொழிகளைக் கற்பதால் மனிதன் உயர்கிறான். நாம் கற்கும் ஒவ்வொரு மொழியும் எமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு அறிவுக்கண்கள். கண்களால் உலகத்தைப் பார்க்கிறோம். வாயினால் உலகத்தவர்களோடு பேசுகிறோம். பேசுவதற்கும், எமது உள்ளத்து அலையோட்டங்களை மற்ற மனிதருக்குப் புரிய வைப்பதற்கும் மொழிதேவை. ஒரு நாட்டவர் வேறொரு நாட்டிற்கோ அல்லது அதே நாட்டின் வேறு மொழி பேசும் பிரதேசத்திலோ வாழமுற்படும்போது

அவ்விடத்தில் வழக்கத்திலுள்ள மொழியைக் கற்றுத் தெளிந்துவிட்டால் வாழ்க்கை மிக இலகுவாகிவிடுகிறது. இல்லாவிடின் பக்கத்து வீட்டிலோ நாட்டிலோ என்ன நடக்கிறதென்று தெரியாத குருட்டு வாழ்க்கை வாழநேரிடும்.

எல்லா மொழிகளுமே மனித நலன் கருதி உள்ளத்துக் கருத்துக்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்த உருவாக்கப்பட்டவை. இதனால் எந்த மொழியையும் நாம் இகழ்வது ஆகாது. அதைவிட தமிழர்களாக இருந்துகொண்டு தாய் மொழியாம் தமிழை இகழ்வது தவறிலும் தவறாகும்.

எமக்குத் தமிழ்இலக்கியத்தில் இராமாயணம், மகாபாரதம், கண்ணகி கோவலன் கதை, அரிச்சந்திரன் கதை, சகுந்தலை துஷ்யந்தன் கதை என்று எத்தனை கதைகள் பாடமாக்கப்பட்டன. இவை ஏன் எமக்குக் கற்பிக்கட்டன. மூளையை குழப்பியடிக்க அல்ல. இவற்றிலுள்ள வாழ்க்கைத் தத்துவங்களை நாம் கற்று எமது வாழ்க்கையையும் நேரான வழியில் இட்டுச் செல்வதற்கேயாகும்.

அடுத்தவன் மனைவி மீது ஆசை கொள்ளாதே. இது அழிவுக்கு வழி கோலும் என்பதை இரண்டு வரிகளில் சொன்னால் அது எம் மனதில் பதியாது. இந்தத் தத்துவத்தைப் போதிப்பதே இராமாயணம். ஒரு தத்துவத்தைக் கூற வந்து எண்ணற்கரிய நன்னெறிகளை அடக்கி வைத்திருக்கின்றது இந்த இதிகாசம். ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் இதுவே மனித பண்பாடாக இருக்க வேண்டுமென்று நம் முன்னோர்கள் விதிமுறை வகுத்தார்கள். இந்தப் புனிதத் தன்மை தெரியாத சிலர் இது கண்மூடிக் கொள்கை என்கிறார்கள்.

மனிதவாழ்க்கையை துன்பங்கள் ஆளுகின்றன. துன்பத்திலிருந்து தப்புவிப்பதற்கு சரியான வழிவகைகளை எமது நூல்கள் கூறுகின்றன. ஆசை வளர அனர்த்தங்கள் தான் வளரும். ஆசைகளை வளரவிடாது தடுக்க பிரார்த்தனைகள், விரதங்கள் எம் முன்னோரினால் கண்டுபிடிக்கப்பட்டன. களவெடுக்காதே, பொய்சொல்லதே, மாமிசம் உண்ணாதே, பிறன் மனைவியை நாடாதே என்று ஐம்பெரும் பாதங்கள் என்றார்கள் எம் முன்னோர்கள். இதனை பாதகங்களாக நோக்காது சாதகங்களாக மாற்றிவிட்டது புதிய நாகரீகம்.

மாமிசம் உண்டால் மனித நேயம் குறைய வாய்ப்பு உண்டு, உடல் ஆரோக்கியத்தை வீழ்த்தும் என்றும் நம் முன்னோர் தெரிந்தே மரக்கறி உணவு உண்க, பாவம் இல்லாது, சொர்க்கம் செல்லலாம். சொர்க்கம்



படிப்பகம்

www.padippakam.com

என்பது மறுபிறவியல்ல. இப்பிறவியிலேயே நோய் இன்றி வாழ்வதே சொர்க்கம் என்பதைக் கருதியே அவர்கள் அப்படிக் கூறிவைத்தார்கள்.

கீதையிலே கண்ணன், கடமையை செய் பலனை எதிர்பாராதே என்று அர்ச்சுனனுக்குச் சொன்னான். உண்மையிலேயே மகாபாரதம் நடந்து அதில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசித்தானா அல்லது எம்மை நெறிப்படுத்த எம் முன்னோர் கீதையை படைத்தாரோ எது எப்படியிருந்தாலும் இதன் உள்நோக்கம் உலகில் மனிதன் தர்மத்தின் வழியில் தன் கடமையைச் செய்யவேண்டும் என்பதே. அப்படிச் செய்யும் போது விளைகின்ற நன்மை தீமைகள் யாவும் கடவுள் செயலே என்று ஏற்றுக்கொண்டால் கவலைகளிலிருந்து தப்ப முடியும். உதாரணமாக ஒரு கதையை எழுதும்படி என் மனம் தூண்டுகின்றது. அதனை நான் எழுதுகிறேன். அது பத்திரிகையில் வந்து எனக்கு பாராட்டுக்கள் பல கிடைக்கலாம். அல்லது அந்தக் கதையை பலர் வாசித்துவிட்டு என்னைத் தூற்றலாம். இக்கதையை நான் எழுதுகிறேன் என்றால் என்னைத் தூண்டுவது இறைவன் என்பதை நான் உணரவேண்டும். இந்தக் கதை நன்மை கருதி எழுதப்படுகின்றது. எவர் மனத்தையும் துன்பப்படுத்துவதற்காக எழுதப்படவில்லை என்றால் இதன் விளைவுகளுக்குப் பொறுப்பாளி நானல்ல, இறைவனே ஆகும். இந்த உண்மையை உணராவிடின் கதையை வாசித்த ஒருவர் மனதுக்குள் எதையோ வைத்துக் கொண்டு என்னப்பா எப்படியெல்லாம் எழுதியிருக்கிறாய் ? இப்படி நீ எழுதியிருக்கக்கூடாது என்று விமர்சிக்க, இதனால் மனம் நொந்து நான் அழுவதும், மேலே எனது கடமைகளைச் செய்யாமல் விடவும் வேண்டிய நிலை உருவாகும். இதனால் எல்லாம் கடவுளின் செயலே என்று இருக்கவேண்டும் என்பதே கீதையின் உபதேசம்.

எமது தமிழ்நூல்களில் வாழ்க்கை வழிகளை ஆரம்பத்திலிருந்து இறுதி வரை கூறும் நூலான திருக்குறள் உலகில் மனிதனாக வாழும் ஒவ்வொருவன் வீட்டிலும் இருக்கவேண்டியதொன்றாகும்.

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி
குறுகத்தறித்த குறள் ' என்றார் ஔவையார்

திருக்குறள் அறத்தின் உணரத் தலைப்படுவோருக்கு ஒரு பேரறிவு நூல்; அரசியலையறிய விரும்புவோருக்கு அரசியல் நூல் ; ஞானத்தை விரும்புவோருக்கு ஒரு ஞானநூல் கவிச்சுவை விரும்புவோர்க்கு காவியம்; காமசுவை விரும்புவோர்க்கு காமநூல்; பேரின்பம் விரும்புவோர்க்கு பேரின்பநூல்; வாழ்க்கை நெறி அறிய விரும்புவோர்க்கு வாழ்க்கை வழிகாட்டும் நூல். அந்நூலைப் பயில்வோர் பெரும்புலமையும் , வல்லமையும் பெறுவர். அதன் நெறியின் வழியில் வாழ்பவர்களுக்கு இவ்வுலகில் ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்த திருப்தியும் , மறுபிறவியில் சொர்க்கமும் கிடைக்குமென்று திருக்குறளை ஆராய்ந்த சாத்தூர் கந்தசாமி முதலியார் (M. A) அவர்கள் கூறியிருக்கின்றார். திருக்குறள் ஒரு நாட்டவருக்கோ, ஒரு இனத்தவருக்கோ, ஒரு மதத்தவருக்கோ, ஒரு குறிப்பிட்ட வயதெல்லையுடையவருக்கோ அல்லது ஒரு தொழிலுக்குரியவருக்கோ என்று எழுதப்பட்டதல்ல. எல்லோருக்குமென்று எழுதப்பட்டது. ஆண், பெண் இருபாலாருக்கும் எழுதப்பட்டது: அரசன் , ஆண்டி, சிறுவர்,



படிப்பகம்

www.padippakam.com

பெரியோர் என்று எல்லோரையும் கருத்திற்கொண்டு எழுதப்பட்டது. அறத்தையும், அன்பையும் திருவள்ளுவர் அடித்துக் கூறியிருக்கின்றார். மனிதவாழ்வில் அறம் இல்லையெனில், சுயநல மரங்கள் சடைத்து நிற்கும் காடாகிவிடும் இவ்வுலகம் என்கிறார்.

திருக்குறளின் உன்னதத்தையும், அது மக்களின் அறியாமைக் கதவுகளைத் திறக்கவல்ல திறவுகோல் என்பதையும் கண்ட பாரதி, வள்ளுவனை உலகினிற்குத் தந்ததால் வானளவு புகழை எய்திவிட்டது தமிழ்நாடு என்று புகழ்ந்து பாடியுள்ளார். வள்ளுவரைப் போல் ஒளவையாரும் மனித குலம் உயர்வதற்கு தமிழ்ப்பாத்திரத்தில் சமைத்து வைத்துவிட்டுப் போன அறிவுச்சோறு இன்னும் அருந்தக் கூடியளவுக்குச் சுவையுடன் இருக்கிறது.

இவ்வாறு எமது முன்னோர்கள் எமக்கு வழிகாட்டடவென்று எண்ணற்ற நூல்களைப் படைத்து வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவற்றைப் படித்து, நாமும் எம் சந்ததியும் பயனடைவதுடன், அவற்றின் பயன்களை அந்நியமொழி பேசுபவர்களும் பயனடையுமாறு மொழி பெயர்த்து எமது பெருமைகளை எல்லோரும் அறியச் செய்யவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் உலகம் மனிதப்பண்புகளிலிருந்து விலகி நடைபோடுகிறது. புகையிரதத்தின் சக்கரங்கள் தண்டவாளத்திலிருந்து இடம் பெயருமானால் தடம்புரண்டு சிதைந்து உடையுமே தவிர, உரிய இடம் போய்ச் சேராது. எமது முன்னோர் எம் மொழியில் எழுதிவைத்த அறிவுப்பாதைகளை, அறநெறிகளை, வாழ்க்கைவழிகளை நாமும் மற்றோரும் பின்பற்றுவோமேயானால் அத்தகைய தடம்புரளலைத் தடுத்து, மனிதகுலத்துக்கு அமைதியும், சமாதானமும் நிறைந்த நிம்மதியான எதிர்காலத்தை உருவாக்கமுடியும்.


**திருமண வைபவங்களா?**
**பிறந்த நாள் கொண்டாட்டமா ?**
**பூப்புனித நீராட்டு விழாக்களா?**
**மற்றும் கலை நிகழ்ச்சிகளா?**

எதுவானாலும் சிறந்த தொழில்நுட்ப முறையில் வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து கொள்ள நாடவேண்டிய இடம்

**V. NEASAN**

**WERK STR - 10,**
**4770 SOEST,**
**GERMANY.**

**02921 / 82990    02384 / 3194**




படிப்பகம்

www.padippakam.com

# எங்கே பறக்கிறது



ஒரு நாட்டின் சரித்திரத்தை தலைமையை மாற்றிவிடக்கூடியவைகள் பத்திரிகைகள் , சஞ்சிகைகள் ஆகும். ஒரு கலைஞனை, எழுத்தாளனை தூக்கி விடவோ இருட்டடிப்புச் செய்து ஒதுக்கிவிடவோ இவை வல்லமை படைத்தவை. ஒரு பத்திரிகையின் விமர்சனங்களிலிருந்து அப்பத்திரிகையின் தரத்தை அளந்துவிடலாம். சில பத்திரிகையின் விமர்சனங்கள் கோவில் கோபுரமாகும். சில விமர்சனங்கள் கல்லறைக்குள் கட்டப்படவேண்டியதாகும். ஒரு விமர்சனம் செய்பவர் நீதிபதியின் ஸ்தானத்திலிருந்து, சாதனைகளைச் சறுக்காமல், தவறுகளை வழுக்காமல், மனிதப் பண்போடு விமர்சிப்பது தான் விமர்சனம். ஆனால் ஈழத்துக் கலைஞர்கள் விடயத்தில் தற்போதைய காலகட்டத்தில் சூழலையும் தமிழுலக அரங்கில் எமது ஸ்தானத்தையும் முன்வைத்து விமர்சனங்கள் ஆக்கப்படுவது நல்லது. இன்று உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களை இந்திய தமிழ்க்கலைஞர்கள் கலைத்துறையின் எந்தப் பாகத்திலும் ஆக்கிரமித்துவிட்டார்கள் என்றால் தவறல்ல. எமக்குக் கலைகள் பொழுதுபோக்கு மட்டுமே ! அவர்களுக்கு பொழுது போக்குடன் தேசிய வருமானம் . எமது தாய் நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாக , கலைஞர்கள் ஆதரிக்கப்படவேண்டிய சூழ்நிலையும் , கலைநிகழ்ச்சிகள் யாவும் பாதிக்கப்பட்டன. கலைஞர்கள், உலகின் பல பாகங்களிலும் சிதறிப் போனார்கள். சிதறிப் போன இடங்களிலும் தங்கள் கலைப்பயணத்தைத் தொடர பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாடகங்கள், நடனங்கள் என்று ஆரம்பித்து கலையை வளர்ப்பதிலும் அந்நிய தேசத்தில் எமது கலைகளைக் காட்டுவதிலும் லாபகரமற்ற தொழிலாக தமது பொன்னான நேரங்களையும் விட்டு எத்தனையோ சிரமங்களின் மத்தியில் நடத்தி வரும் இந்தக் கலைஞர்களை, எழுத்தாளர்களை விமர்சனம் என்ற பெயரில் வசை பாடாமல் , அதே வேளை துதி பாடாமல் அவர்களது ஆக்கத்துக்கும், ஊக்கத்துக்கும் ஊறுவிளைவிக்காமல் அடுத்த அத்தியாயத்தைப் புரட்ட முதலே முற்றுப்புள்ளி போட்டுவிடாமல் நாசூக்காக, தவறுகளைச் சுட்டிக்காட்டி நல்லதுகளை நன்றாக எடுத்துக்காட்டி ஈழத்துக் கலைஞனை அடுத்த படிக்கட்டில் ஏற்றி , ஈழத்துக் கலைஞனை உலகத் தமிழ் அரங்கில் ஒரு ஸ்தானத்துக்குக் கொண்டு வருவது ஒரு விமர்சகனின் தலையாய கடமையாகும்.

இந்தப் பணியில் "வண்ணத்துப் பூச்சி" கடந்த ஐந்தாண்டுகளில் ஈழத்துக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், வளர்க்கவும் கலைஞர்களுக்கு நண்பனாக வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கின்றது. இன்னும் பல காலம் சென்றாலும் இந்த இலட்சிய வட்டத்திற்குள்ளேயே "வண்ணத்துப்பூச்சி" வட்டமிடவேண்டும். என்று கூறி ஈழத்துத்தமிழ்க் கலைஞர்களுக்கும் கலைகளுக்கும் முதல் தாலி கட்டித் தாரமாக்குவோம். என்று வண்ணத்துப்பூச்சியின் ஐந்தாவது ஆண்டுவிழாவில் வாழ்த்துக் கூறும்-

**- லூஸ் மாஸ்டர்**



படிப்பகம்

www.padippakam.com



# மஞ்சள் நிற அழகி



வானம் கார் மேகத்தால் இழுத்து மூடிக் கொண்டிருந்தது. குளிர் காற்று "ஜில்" என்று அடித்துக் கொண்டிருக்க பனித் துளியும் விழ ஆரம்பித்தது.

சுதா பெட்டியும் கையுமாக மேலைத் தேச நாடு ஒன்றின் தலைநகர் விமான நிலையத்தில் வந்து இறங்கினான்.

விமான நிலையத்தில் காத்திருந்த நண்பன் ஜெயாவின் காரில் அவனது வீட்டுக்குச் சென்ற சுதாவிடம் மூன்று நாள் பயணக் களைப்பு அப்படியே தெரிந்தது.

"இந்தா பாரு சுதா, உடுப்பை மாத்திவிட்டு குளிச்சு விட்டு வா சாப்பிடுவம். பாத் றூமுக்க சுடுதண்ணியும் வரும் -கடும் குளிர் தண்ணியும் வரும் சமப்படுத்திக் குளி. சோப் ரவல் எல்லாம் பாத் றூமுக்க கிடக்கு. எதற்கும் ரீ போடப்போறன் ரீயைக் குடிச்சுவிட்டுக் குளி" என்றவாறு ஜெயா தேநீர் தயாரிப்பில் ஈடுபட்டான்.

நண்பன் ஜெயா கூறியபடி தேநீரைக் குடித்துவிட்டுப் போய் குளித்து முடிந்தவுடன் நண்பனுடன் சேர்ந்து உணவருந்திவிட்டு அறையில் இருந்த மெத்தையில் சாய்ந்தான் சுதா. பிரயாணக் களைப்பினால் தூக்கம் அவனை சில நிமிடங்களில் அரவணைத்துவிட்டது.

மறுநாள் காலையில்தான் கண் விழித்த சுதா, ஹோலில் இருந்த கதிரையில் அமர்ந்திருந்த வேளையில்,


"எப்படி நல்ல நித்திரை போல ராத்திரி; நேற்றைக்கு பிரயாணக் களைப்பு, அதனால நான் ஒண்டும் கேட்கவில்லை, ஊர்ப் புதினங்கள் எல்லாம் எப்படி? எங்கட அம்மா, அப்பா எல்லாரும் சுகமா இருக்கினையோ?" எனப் பேச்சைத் தொடங்கினான் ஜெயா.

"ஓ எல்லாரும் கடவுளின் அருளால்



படிப்பகம்

www.padippakam.com



சுகமாக இருக்கினம்" என்ற சுதா, ஊர்ப் புதினங்களை சுருக்கமாகச் சொன்னான்.
"சரி சரி, வேற இடத்திலதான் நீ இருக்க வேணும் சுதா; ஏனெண்டால் இங்கை எல்லாமாப் பத்து பெடியள் இருக்கிறம்; இங்க இடமில்லை; எனக்குத் தெரிந்த பெடியளோட கொண்டு போய் விடுறன்-அங்கதான் இருக்கவேணும்; அங்க இருக்க சம் மதம்தானே?"
"ஓ கே" என்றவாறு தலையாட்டி னான் சுதா.

"அப்பிடியெண்டா பார்க்க வேண்டிய அலுவலப் பார்த்துவிட்டு வெளிக்கிடு மச்சான் போவம்" என ஜெயா கூறிய சிறிது நேரத்தில் தயாரானான் சுதா.
காரில் புகையிரத நிலையத்துக்குச் சென்ற இருவரும் தாம் செல்ல வேண்டிய புகையிரதத்துக்காகக் காத்திருந்த வேளையில் சுதாவின் கண்கள் அங்கு நின்ற மக்களையும் புகையிரத நிலையத்தின் அமைப் பையும் பார்த்து அதிசயித்தன.
புகையிரத நிலைய ஒலிபெருக்கி, "இன்னும் சில நிமிடங்களில் வண்டி வந்துவிடும்" என அறிவித்தது.
"என்ன சொல்லுகிறாங்கள்" என ஜெயாவிடம் சுதா வினவினான்.
"இன்னும் கொஞ்ச நேரத்தால ரெயின் வரப்போகுது, அதைத்தான் அவங்கள் சொல்லுறாங்கள்" என் றான் ஜெயா.
"எங்கட ஊர் மாதிரித்தானே உவங் களும் சொல்லுறது" என சுதா கூறிக் கொள்ள ---
"ச்சீச்சீ... அப்படிச் சொல்லாதே, உவங்கள் அந்தந்த நேரத்துக்கு அதை அதைச் சரியாச் செய்வாங் கள். அங்க பார் அவன் சொன்னபடி ரெயில் வருகுது, எங்கட ஊர் மாதிரி அவசரப்பட்டு ஏறுகிறதில்லை, ரயில் நிண்ட பிற்பாடுதான் ஏறவேணும்" என ஜெயா கூறினான்.
"ஓ எங்கட ஊரில யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்பு போறத்துக்கு ஒரு காலத்தில ரெயில் ஓட ஓட ஏறிய சில பேர், தனிய தலையணியும் கையுமாகக் காங்கேசன்துறைக்குப் போய் மூலை சீற் பிடித்துக் கொண்டு மற்ற சீற்றில் யாழ்ப்பாணம் வரைக் கும் தலையணியை வைச்சுக் கொண் டுவந்து யாழ்ப்பாணத்தில தலைய ணியை எடுத்துப் போட்டு தங்கட சொந்தக்காரரை இருத்துவின, இடையில ஆராவது ஏறி இருக்கப் போக ஆள் இருக்கு என்பினை" என சுதா கூற ---
"உதெல்லாம் அனுராதபுரம் வரைக் கும்தான், அங்கால உந்தச் சேட்டை விட ஏலாது. சரி, ரெயின் கிட்ட வருகுது வா ஏறுவம்" என்றான் ஜெயா.
விரைந்து சென்ற புகை வண்டி பல தரிப்பிடங்களில் நின்று அவர்கள் இறங்க வேண்டிய இடம் வந்ததும் இருவரும் இறங்கிக் கொண்டனர். அங்கிருந்த தொலைபேசி மூலம் ஜெயா தமது நண்பனுடன் தொடர்பு கொண்டு கதைத்த வேளையில், சுதாவுக்கு சுற்றுப்புறங்களைப் பார்த்து ரசிப்பதிலேயே மனம் போய்க் கொண் டிருந்தது.
தொலைபேசி பெட்டியை விட்டு வெளியே வந்த ஜெயா, "சரி பார்த்து ரசித்தது போதும், வா பெடியள் வெளியில வந்து நிற்கிறமெண்டு

சொன்னவங்கள், வெளியில போய் நிற்பம்" எனக் கூறியவாறு சுதாவின் தோளைத் தட்டிக் கூட்டிக்கொண்டு சென்றான்.
இருவரும் புகையிரத நிலையத்தை விட்டு வெளியே வரவும் ஜெயாவின் நண்பன் அங்கு வரவும் சரியாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

நண்பனைக் கண்ட ஜெயா அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டான்.
"எப்பிடிச் சுகம்" என ஜெயா வினவ, நண்பனும் பதிலுக்கு "ஏதோ உன்னுடைய புண்ணியத்தில சுகமாய் இருக்கிறன்" என்றான்.
"என்ன என்னுடைய புண்ணியத்தில எண்டு இழுக்கிறாய்..."
"அது சரி, இவர்தான் நான் ரெலிபோனில சொன்ன நண்பர் -சுதா" என சுதாவைத் தமது நண்பனுக்கு அறிமுகம் செய்து வைத்த ஜெயா, சுதாவுக்கும் நண்பன் அரிகரனை அறிமுகம் செய்து வைத்தான்.
அரிகரன் மெதுவாகத் தனது உதட்டை விரித்துப் புன்முறுவல் செய்துகொண்டே, சுதாவை நோக்கித் தனது வலது கரத்தை நீட்டினான். சுதா அசையாமல் நிற்பதை அவதானித்த ஜெயா ---
"சுதா உம்மடை கையைக் கொடும், இந்த நாட்டுப் பண்பாடு ஒருவரை ஒருவர் சந்தித்தால் கை குலுக்குவது வழமை" எனக் கூறியதும் சுதாவும் சிறிது வெட்கத்துடன் தனது வலது கையை அரிகரனின் கையில் கொடுத்துக் குலுக்கினான்.
"சரி, சரி வீட்டில போய்க் கதைப்பம்" என அரிகரன் கூறியதும் மூவரும் அங்கிருந்து புறப்பட்டனர்.
அரிகரன் வீட்டில் பரிமாறிய அப்பிள் சாற்றைக் குடித்த ஜெயா, சுதாவிடம் "என்ன வெட்கப் படுகிறீர், இங்க தானே இருக்கப் போறீர், எடுத்துக் குடியும், பிஸ்கற்றிலையும் சாப்பிடும்" எனக் கூறிய பின்னரே சுதா பிஸ்கற்றையும் சாப்பிட்டு அப்பிள் சாற்றையும் குடித்தான்.
"சரி, அரிகரன் நான் வரப்போறன்" எனக் கூறியபடி எழுந்த ஜெயாவிடம், "ஏன் நின்று சனி, ஞாயிறு போகலாம்தானே" என்றான் அரிகரன்.
"குறை நினைக்க வேண்டாம், நான் பின்னேரம் வேலைக்குப் போக வேணும். இன்னொரு முறைக்கு வந்தால் நிற்கிறன். உண்மையாகத்தான் சொல்லுறன்" என்றான் ஜெயா.
"என்ன இழுத்தடிக்கிறியள், பின்ன நான் சமைச்சுப் போட்டன் சாப்பிட்டுப் போங்களேன்."
ஜெயா அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை.
"இரண்டு பேரும் முகத்தைக் கழுவிப் போட்டு வாங்கோ சாப்பிடுவம். 'ரொய்லற்' அங்க இடது பக்கத்தில இருக்கு" என அரிகரன் கூறிய சிறிது நேரத்தில் மூவரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டனர்.
"சரி சுதா, நான் வரப்போறன், உமக்கு வேண்டியதெல்லாம் அரிகரன் செய்வார். ஒரு பிரச்னையும் இல்லாமல் இரும், என்ன சரியே, அரிகரன் நான் வாறன், ஒருக்கா அவருக்கு என்னென்ன செய்ய வேணுமோ அதெல்லாத்தையும் செய்து விடும்" என்றான் ஜெயா.
"என்ன இவ்வளவு தூரம் வந்து விட்டு இப்படிச் சொல்லுறியள், நீங்கள் பயப்படாதையுங்கோ, நான் எல்லாம் செய்து விடுகிறன்" எனக் கூறியபடி அரிகரன் ஜெயாவை வழி அனுப்பி வைத்தான்.

காலம் கரைந்தோடியது. அரிகரனின் உதவியால் சுதா தான் இருந்த நாட்டின் பாஷையையும் நன்றாகக் கதைக்கத் தொடங்கினான்.
தொழிற்சாலை ஒன்றில் நல்ல வேலையும் கிடைத்தது. நல்ல வாலிபராக எல்லோருடனும் நன்கு பழகியும் வந்தான் சுதா.
அரிகரனும் திருமணம் முடித்துக் கொண்டு சுதாவை விட்டு சற்றுத் தொலைதூரத்துக்குக் குடி பெயர்ந்தான்.
சுதா தனியே இருந்து கொண்டு வேலைக்குப் போய் வருவதிலும் எப்போதாவது அரிகரன் வீட்டுக்குப் போவதிலும் தொலைக்காட்சி பார்ப்பதிலும் தாயாருக்குக் கடிதம் எழுதுவதிலும் நீச்சல் தடாகத்தில் நீச்



படிப்பகம்

www.padippakam.com

சலடிப்பதிலும் பொழுதைக் கழித்து வந்தான்.

ஒரு நாள், நீச்சல் தடாகத்தில் வழமை போல் நீச்சலடித்துக் கொண்டிருந்த சுதாவுக்கு புதிய அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

நீச்சல் தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த சுதாவைப் பார்த்து அதே தடாகத்தின் மறு முனையில் இருந்து அழகான இள வயது மங்கை ஒருத்தி புன்முறுவல் பூத்ததை அவதானித்த சுதா பதிலுக்குத் தானும் சிரித்தான்.

சிரித்தவன் அவளது அழகில் மயங்கி சில நிமிடங்கள் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

மஞ்சள் நிற மேனியும் நீண்ட வெள்ளையும் பழுப்பு நிறமும் கொண்ட முடியுடனும் காணப்பட்ட சொர்க்க லோகத்து நாயகியோ என்று சொல்லுமளவுக்கு மெல்லச் சிரித்துக் கொண்டிருந்த அந்த இளம் பெண்ணிடம் சுதா தன்னையே பறிகொடுத்தான்.

அவளையே கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த சுதாவை அவதானித்த அவளது சிநேகிதி, அவளது இடுப்பில் தட்டி தன் கண்

அசைவு மூலம் அவளது அழகில் மயங்கி நின்ற சுதாவின் நிலையை அவளுக்கு உணர்த்தினாள்.

அந்த நிலையில் சுதாவைக் கண்ணுற்ற அந்த மஞ்சள் நிறப் பருவ மங்கைக்கு நாணத்தால் முகம் சிவந்தது. மறுபடியும் உதட்டில் புன்முறுவல் அரும்ப தனது இடது கையால் உதட்டைப் பொத்திய வண்ணம் சிரித்தாள்.

மறு நிமிடம் சுதா அருகே அந்த மஞ்சள் நிற அழகி காணப்பட்டாள்.

அறிமுகப் படலம் ஆரம்பமாகியது.

"எந்த நாட்டில் இருந்து வந்திருக்கிறீர்கள்" என அவள் வினவ, அவன் "இலங்கை" என்றபோது, "இலங்கையா எனக்குத் தெரியாது; ஆபிரிக்கக் கண்டத்திலா..." என்று கேட்டாள்.

"இல்லை... இந்தியாவுக்குப் பக்கத்தில் உள்ள நாடு. ஒரு காலத்தில் "சிலோன்" என்று பெயர். இப்போது ஶ்ரீலங்கா. அதோட தேயிலை விளையும் நாடு" எனச் சுதா கூறியதும் ---

"ஓ... அதுவா எனக்குத் தெரியும். அழகான நாடு. நல்ல சூரிய ஒளி கடவுள் கொடுத்த சொர்க்க பூமி. எங்கட நாடு மாதிரி அங்கே குளிரில்லை இல்லையா" என்றாள் அவள்.

சுதாவின் பெயரைக் கேட்டறிந்து கொண்ட அவள், தனது பெயரையும் மெலானி எனக் கூறினாள்.

சுதாவின் விலாசத்தையும் தொலைபேசி நம்பரையும் வாங்கிக் கொண்ட அவள், பதிலுக்கு தனது தொலைபேசி நம்பரையும் விலாசத்தையும் கொடுத்து விட்டு "ஓ கே... மீண்டும் சந்திப்போம்" எனக் கூறிக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

வீட்டுக்கு வந்த சுதாவுக்கு அவளை மறக்க முடியவில்லை. மெத்தையில் படுத்தவாறே, மெலானியின் அழகு, உடல் அமைப்பு, நிறம் பேச்சு ஆகியவற்றைச் சிந்தனையில் நிறுத்தி சிந்திக்கத் தொடங்கினான்.

அவனது சிந்தனையைக் கலைத்துக் கொண்டு தொலைபேசி அடித்தது.

"நான் மெலானி பேசுகிறேன், உங்க வீட்டுக்கு மாலை ஏழு மணிக்கு வருகிறேன், சம்மதமா?"

"மெலானியா.. ஆமாம்.. அதற்கென்ன பிரச்னையில்லை, வாங்கோ" எனக் கூறியபடி தொலைபேசி ரிசீவரைக் கீழே வைத்தான் சுதா. அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

சிறிது நேரம் கழித்து வாசலில் பொருத்தப்பட்டிருந்த மணிச் சத்தம் கேட்டு கதவைத் திறந்தான் சுதா.

"ஹலோ..." என்றபடி மெலானி ஒரு கையில் பூக்களை ஏந்திய வண்ணம் மறு கையை அவனை நோக்கி நீட்



படிப்பகம்

www.padippakam.com


அழகிய ஆடைகளுக்கும், தங்கவளையல் நகைகளுக்கும்

நீங்கள் மறவாது நாடவேண்டிய தரமான வியாபார ஸ்தாபனம்:

ORIENTALISCHE

TEXTILIEN & SCHMUCK

உங்கள் இல்லத்தேவைகளுக்கும், மங்களகர வைபவங்களுக்கும் உங்கள் மனநிறைவுக்கேற்ற

வளையல், சங்கிலி, பதக்கம், அட்டியல் மற்றும் காதணிகள்
(வரி அறவிடப்பட்ட 22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம்)
பானுறிஸ், காஞ்சிபுரம் மற்றும் எல்லாவகையான
இந்தியா, சிங்கப்பூர் ஜவுளிவகைகள்
ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள்
அனைவருக்கும் அவரவர்க்கேற்ப பலவகை டிசைன்களில்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

HAUPT-BAHNHOF , KÖNIGSWALL 16
UNDERGROUND, 4600 DORTMUND 1

T.P : 0231/162377




படிப்பகம்

www.padippakam.com

டினாள். அவனும் அவளது கைக ளைக் குலுக்கி உள்ளே அழைத்து உபசரித்தான்.
அவள் திடீரென சுதாவைப் பார்த்து "இன்று இரவு 'டிஸ்கோ'வுக்கு வர முடியுமா?" எனக் கேட்டதும் அவ னால் எதுவுமே சொல்ல முடிய வில்லை. முதலில் சிறிது தயங்கிய வன் பின்னர் அவளது வேண்டு கோளுக்கு இணங்கினான்.
சிறிது நேரத்தில் இருவரும் 'டிஸ் கோ'வுக்குள் இருந்தனர்.
அங்கே ஒரு புதிய உலகையே உணர்ந்தான் அவன்.
உலகையே மறந்த நிலையில் பல மஞ்சள் நிற யுவதிகளும் இளைஞர் களும் காணப்பட்டனர். அங்கே இசைத்துக் கொண்டிருந்த இசைக்கு ஏற்ப சிலர் நடனமாடிக் கொண்டிருந் தனர்.
மெலானி அவனைப் பார்த்து "எப்படி நன்றாக இருக்கிறதா" என வினவ, அவன் "ஆம்" என்றதும் சுதாவைத் தன்னுடன் நடனமாட வரும்படி அழைத்தாள் மெலானி.
"எனக்கு நடனமாடத் தெரியாதே" என்றதும் "பரவாயில்லை வாருங்கள், ஆடிப் பார்ப்பம்" என மெலானி அழைத்தபோது சுதாவால் அதனை மறுக்க முடியவில்லை.
இருவரும் நடனம் ஆடிக் கொண்டி ருந்தபோது, "நன்றாக ஆடுகிறீர் களே, மிகவும் நன்றாக இருக்கிறது" எனப் பாராட்டினாள் மெலானி.
ஆடிக் கொண்டிருந்தவள் சிறிது நேரத்தில் "ஆடியது போதும் ஏதா வது குடிப்பம்" என ஆட்டத்தை நிறுத்திவிட்டு சுதாவை மதுபானச் சாலைக்கு அழைத்துச் சென்றாள்.
"நீங்கள் என்ன குடிக்கிறியள்? பியர் குடியுங்கள்" எனக் கேட்டபோது சுதா மறுப்புத் தெரிவித்தும் அவள் விட்ட பாடில்லை.
பியரை வாங்கி சுதாவுடன் சேர்ந்து தானும் அருந்தினாள். சுதாவுக்கு அன்று எல்லாமே புதிய அனுபவமாக



இருந்தது. பியரைப் பருகப் பருக அவனது தலை சுற்றியது.
சிறிது நேரத்தில் அவன் தனது தலையை மெதுவாக மெலானியின் மார்பில் சாய்த்துக் கொண்டான். அவளும் அவனைத் தன் உடலோடு அரவணைத்தபடி அவனை அவனது அறையில் கொண்டு போய்ச் சேர்த் தாள்.

நாட்கள் நகர்ந்தன. மெலானிக்கும் சுதாவுக்கும் இடையிலான உறவில் நெருக்கம் அதிகரித்தது.
மெலானியின் அன்பும் அரவணைப் பும் சுதாவுக்கு அளவுக்கு அதிகமான இன்பத்தைக் கொடுத்தது. பெற்ற தாயைக் கூட சுதா வெறுக்க ஆரம் பித்தான்.
மெலானியின் உறவு ஏற்படுவதற்கு முன்னர் மாதத்தில் ஒரு தடவையா வது தாயாருக்குக் கடிதம் எழுதி வந்த சுதா, இப்போதெல்லாம் கடி தம் எழுதுவதே இல்லை. "பிள் ளைக்கு என்ன கஷ்டமோ, அது தான் கடிதம் போடுவதில்லை" என நினைத்த தாயார் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டேயிருந்தார்.
சுதாவோ, "கிழடிக்கு வேற வேலை யில்லை, நெடுகிலும் கடிதம் எழுதிக் கொண்டேயிருக்கு" எனக் கூறியபடி வரும் கடிதங்களை எல்லாம் கிழிந்



படிப்பகம்

www.padippakam.com

தெறிந்து விட்டு மெலானியே கதியென்று இருந்தான். தான் உழைக்கும் பணத்தையெல்லாம் அவளுக்காகவே செலவழித்தான்.
சுதாவின் நடத்தையைக் கேள்விப்பட்ட ஜெயா, சுதாவை தொலைபேசியில் அழைத்து ஏசினான். அதனால் எதுவித பலனும் ஏற்படவில்லை.
"ஜெயா, எனக்கென்டு தனிப்பட்ட சுதந்திரம் இருக்கு -அதில் எவரும் தலையிட வேண்டாம்" என முகத்தில் அடித்தமாதிரிக் கூறினான் சுதா. அதன் பின்னர் ஜெயாவும் சுதாவைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டான்.
மெலானியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக்கி மேல்நாட்டிலேயே நிரந்தரமாக வாழலாம் என்ற நம்பிக்கையுடனேயே சுதா தனது வாழ்நாளை ஓட்டி வந்தான்..
ஒரு நாள்....
மெலானி வருவாள் என்ற எண்ணத்துடன் நீச்சல் தடாகத்துக்குச் சென்ற சுதாவுக்கு அங்கு பெரும் ஏமாற்றம் தான் காத்திருந்தது.
நீச்சல் தடாகத்தில் மெலானி தனது நாட்டு வாலிபனுடன் சல்லாபம் புரிந்து கொண்டிருந்ததைச் சுதா கண்டான். அவனது கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. அவனது இதயம் சுக்கு நூறாக வெடித்து விடும் போல் இருந்தது.
"மெலானி" எனச் சற்று ஆத்திரத்துடன் குரல் கொடுத்தான் சுதா.
குரலைக் கேட்ட மெலானி, தனது நாட்டு வாலிபனுடன் நீச்சல் தடாகத்தை வெளியே வந்து, "ஹலோ..." என்றாள் மிகவும் சாதாரணமாக.
"என்ன இதெல்லாம்....? என்னுடன் பழகி விட்டு ....?" எனச் சுதா மெலானியை நோக்கி கேள்விக் கணைகளைத் தொடுத்தபோது, அவள் தனது புதுக் காதலனின் இதழ்களுடன் தனது இதழ்களை சற்று அழுத்தமாக இணைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்தாள்.
மெலானி தனது புதிய காதலனின் அரவணைப்பில் இருந்தபடியே "இவர்தான் எனது புதிய நண்பர்.. இவரைத்தான் நான் திருமணம் செய்யப் போகிறேன்" என தனது காதலனை சுதாவுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.
சுதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆத்திரம் பன்மடங்கு அதிகரித்தது.
"அப்படியானால், என்னுடன் கதைத்தது, பழகியது எல்லாம்,..?"
"ஓ.. அதுவா சுதா, அதெல்லாம் இளமைக் காலத்து விளையாட்டுக்கள். எங்களுக்கு இதெல்லாம் சர்வ சாதாரணம்" என மெலானி சுதாவைப் பார்த்துக் கூற, "இந்தக் கறுப்பு என்ன சொல்கிறது" எனக் கேலிப் புன்னகையுடன் கேட்ட தனது புதிய காதலனை மேலும் நன்றாக இறுக்கி அணைத்து மீண்டும் ஒரு தடவை முத்தமிட்டு விட்டு அவனை அணைத்தவாறு அந்த இடத்தை விட்டு சிட்டாகப் பறந்தாள் மெலானி.
சுதாவால் என்னதான் செய்ய முடியும். கண்களில் தோன்றிய கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் அறைக்கு வந்தவனுக்கு அங்கும் ஓர் அதிர்ச்சி காத்துக் கிடந்தது.
"ஒழுங்காக வேலைக்கு வராததால் நீர் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறீர்" என அவன் வேலை செய்யும் அலுவலகத்திலிருந்து வந்த கடிதம் அவனை மேலும் நிலை குலையச் செய்தது.
சிந்திய கண்ணீருடன் மெத்தையில் விழுந்தவன் தனது கண்ணீர் வற்றும் மட்டும் அழுது தீர்த்தான்.
சிறிது நேரத்தில் அறையில் இருந்த அழைப்பு மணி அடித்தபோது அவனுக்கு மெலானியின் நினைப்பே வந்தது. 'மெலானிதான் மனம் மாறி வந்



படிப்பகம்

www.padippakam.com

திருக்கிறாள்' என்ற எண்ணத்துடன் கதவைத் திறந்தபோது, அரிகரன் நின்றான்.
"இந்தா பாரும், உமக்கு உம்மட அம்மா எத்தனையோ கடிதம் போட்டு அலுத்துப் போய் ஜெயாவுக்குக் கடிதம் போட்டிருக்கிறா. ஜெயா உம்மோட கதைக்க விருப்பமில்லாதத்தில எனக்கு அனுப்பியிருக்கிறார். அதைத்தான் கொண்டு வந்திருக்கிறன்" என்று கூறிய அரிகரனை உள்ளே அழைத்து தாங்க முடியாத வேதனையுடன் மெலானியின் கதையை அவனிடம் கூறினான் சுதா.
இக்கதையைக் கேட்டதும் அரிகரன் நீண்டதொரு பிரசங்கத்தையே அங்கு வைத்துவிட்டான் ---
"இங்குள்ள பெண்களுக்கும் ஆண்களுக்கும் இது சகஜம். எங்காவது நூறில ஒண்டுதான் எங்கட நாட்டுப் பொம்பிளையள் மாதிரி ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையுடன் நடக்குதுகள். உம்... எங்கட நாட்டு பொம்பிளையளைக் கலியாணம் கட்டச் சொல்லிக் கேட்டால் உம்ம மாதிரியான ஆட்கள், "அவள் கறுப்பு... குணம் சரியில்லை... அவள் அவனோடை கதைத்தவள்... இவனோட கதைத்தவள்.... அதோட இவ்வளவு லட்சம் வை-அவ்வளவு லட்சம் வை..." என்று சொல்லி தட்டிக் கழிப்பியள். உம்மை மாதிரிக் கன பேர் மெலானி போல பொம்பிளையளால அவதிப்பட்டிருக்கினம். சில பேர் கலியாணம் செய்துபோட்டு பிள்ளையளோட பிரிஞ்சும் இருக்கினம். சரி, சரி இப்ப உம்மட அம்மாவின்ர கடிதத்தைப் பிரிச்சுப் பாரும்" என்றான் அரிகரன்.
"பக்கத்து வீட்டு பார்வதியம்மாதான் கடிதம் போட்டிருக்கிறா..." என்றவாறு கடிதத்தைப் பிரித்துப் படித்த சுதா, திடீரென "ஐயோ....... அம்மா ......" என அந்த அறையே அதிரும்படி சத்மிட்டு அழுதான்.



"என்ன விசயம் சுதா... " எனக் கேட்ட அரிகரனிடம் எதுவுமே கூற முடியாத நிலையில் தனது கையில் இருந்த கடிதத்தை நீட்டினான் சுதா.
"தம்பி சுதா, உமது அம்மா போட்ட கடிதங்களுக்கு நீர் நீண்ட நாட்களாகப் பதில் போடாதபடியினால் உமது அம்மா யோசிச்சு யோசிச்சு இப்போது மூளை மாறாட்ட நிலையில் இருக்கிறா....." என்றவாறு அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.
"பாத்தீரா தம்பி, உன்ரை அம்மாவின்ரை நிலைமையை. இவ்வளவு நாளும் நீர் அம்மாவும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம் எண்டு மஞ்சள் நிற பொம்பிளைக்குப் பின்னால சுத்தியதுதான் மிச்சம். கடைசியில அவளும் போயிட்டாள். அம்மாவின் நிலையும் இப்படி பரிதாபமாகிவிட்டது. உங்களைப் போல ஆட்களுக்கு நாங்கள் சொன்னால் ஏறாது, பட்டு அனுபவிச்சால்தான் தெரியும்" எனக் கூறிவிட்டு அரிகரனும் தமது வீட்டுக்குச் சென்றுவிட்டான்.
சுதா மெத்தையில் இருந்த தலையணையை கண்ணீரால் நனைத்துக் கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை)



படிப்பகம்

www.padippakam.com

# என்னுடன் ஒரு நிமிடம்

**- காசி-**

சுழன்று கொண்டிருக்கிறது உலகம்.

இதில் வாழும் நாம் தூங்கிக் கொண்டிருந்தால் தாங்கிக் கொள்ளாது இயற்கை. எறும்பும் ஊர்ந்து கொண்டிருக்கிறது. அந்தச் சின்னஞ்சிறிய எறும்பு கூட தனது உணவைத் தானே தேடி உண்ணவேண்டும் என்பதே இயற்கை அன்னையின் விதி. நாங்கள் மனிதர்கள் எறும்பைவிட எத்தனையோ ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்கள் ஏன் இந்த இயற்கை அன்னையின் விதியை மீறவேண்டும்? உழைத்து உண்ணவேண்டும். உண்டது ஜீரணிக்க உழைக்கவேண்டும். உழைத்தும் உணவு கிடையாது தவிப்போருக்கு எம் உழைப்பை நல்க வேண்டும். இது நாங்கள் பிறந்து வாழும் இந்த உலகத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகளாகும்.

புள்ளிகள் கோடுகள் ஆகின்றன. கோடுகள் சிந்தையைக் கொள்ளை கொள்ளும் சித்திரங்கள் ஆகின்றன. நாங்கள் சோம்பலில் தூங்கிக் கொண்டிருக்கும்போது புள்ளிகளாகப் பயனற்று இருக்கின்றோம். சோம்பலைக் களைந்து சுறுசுறுப்பை வளர்க்கையில் கோடுகளாக நீள்கிறோம். உழைப்பென்னும் சித்திரத்தை வரைகின்றோம். வாழ்க்கைச் சித்திரத்தை வரைகின்றோம். சோம்பிக் கிடக்கும் மனிதனின் வாழ்க்கை ஒரு புள்ளியுடன் அடங்கிவிடுகின்றது. அறிவுக்கும் அங்கங்களுக்கும் வேலை கொடுத்து ஆக்கங்களை செய்து குவிப்பவன் வாழ்க்கை கோடுகளாய் கோடுகளுடன் இணைத்து சித்திரங்களில் சரித்திரமாகின்றான்.

சிலருக்கு உழைப்புக்கு அர்த்தம் புரிவதில்லை. உழைத்து வங்கிகளை நிரப்புவது தான் உழைப்பு என்று சிலர் வரைவிலக்கணம் வைத்திருக்கின்றார்கள். உண்மை இது அல்ல. நாங்கள் உணவு உண்ணுகின்றோம். வடை பாயாசத்துடன் உண்ணுகின்றோம். இந்த உணவு முழுவதும் எமது வாழ்க்கைக்கு அவசியந்தானா ? என்று எண்ணிப் பார்க்கையிலேயே நாம் உண்ணும் உணவில் பாதியோ அல்லது அதில்பாதியோ தான் எம் உடலுக்கு வேண்டியதாகிறது. மீதி எமது உடலில் ஆங்காங்கே கொழுப்புத் திட்டிகளாகவும் அநாவசிய வீக்கங்களாகவும் மாறுகின்றது. இது சக்கரைவியாதி, இரத்தக்கொதிப்பு, இதயக்கோளாறுகள் என்று பலவித



படிப்பகம்

www.padippakam.com

வியாதிகளுக்கு அழைப்பட,விடும் தூதுவனாகின்றது. உழைப்பிற்கு ஏற்ற உணவு உணவிற்கு ஏற்ற உழைப்பு. இதுவே உடல் ஆரோக் கியத்திற்கு வழி.
இதுபோல தாம் உழைக்கும் பணம் எமது அவசிய தேவைகள் போக மிகுதி ஆக்கபூர்மான செயற்பாடுக ளுக்கு பயன்படவேண்டும். அளவுக்கு மீறிய ஆடம்பரம், தேவைக்கு மிஞ் சிய தேவைகளும் செலவுக்கு மிஞ் சிய செலவுகளும் இயற்கையை திருடுவதற்குச் சமமானதாகும்.
நாங்கள் வாழ்வதற்கு உழைப்பது எங் கள் குடும்பம் வாழ்வதற்கு உழைப் பது, சமூகத்துக்காக உழைப்பது, சமாதானத்திற்காக உழைப்பது என்று உழைப்புக்கள் வளர்ந்து கொண்டே போகும்.
தெருவோரத்தில் இருந்து சப்பாத்துத் துடைக்கும் ஒருவனின் உழைப்பும் தெருக்கட்டுவதற்குத் திட்டம் தீட்டும் இஞ்சினியரின் உழைப்பும் தேவால யத்தில் பூஜை நடத்தும் மதகுருவின் உழைப்பும் ஆண்டவனின் கண்களுக் குச் சமமாகவே தெரிகிறது. அவன் ஒவ்வொருவரிடமும் இருந்து அவர வர் ஆற்றலுக்குரிய உழைப்பையே எதிர்பார்க்கிறான். நமக்கும் உலகத் துக்கும் நன்மை பயக்கும் முறையில் நாம் செய்யும் ஒவ்வொரு செயற்பா டும் ஆண்டவனின் வங்கியில் நமக்கு வரவு வைக்கப்படுகின்றது என்பதை உணரவேண்டும்.
படித்துவிட்டு கற்பனையிலே கிடப் பவர்களை மேதைகள் என்று சொல் லமுடியாது. உழைத்துவிட்டு களைத் துப் போனவர்களை களைத்தபோதும் உழைப்பைக் கைவிடாது இறுதி வரை ஊக்கத்துடன் உழைத்தவர் களே மேதைகள் என்று சரித்திரம் புகழ்கிறது.
நாங்கள் உண்மையாக உழைக்கை யில் தர்மம் பேணப்படுகிறது. உள் ளக் களங்கங்கள் விலகுகின்றது. சோம்பிக் கிடக்கையிலே ஆயிரம் சிந்தனைகள் அடுத்தவர் பற்றிய யோசனைகள், பொறாமை, போலித் தனம் போன்றவற்றின் வளர்ச்சிகள் மனவயலில் இடம் பிடிக்கின்றன.
நாம் உண்ணும் உணவு மற்றவர்க ளின் உழைப்பில் களவாடப்பட்டதா னால் அதைத் திருப்பிக் கொடுக்க வைக்கும் இயற்கையின் சட்டம். சிலர் குறுக்கு வழிகளில் பணம் சம் பாதிப்பதற்கு பல தந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள். சட்டங்களை தம் அறிவினாலோ பணத்தினாலோ ஏமாற்றி தப்பிக் கொள்கின்றார்கள். இவர்கள் மனித சட்டத்தில் இருந்து தப்பிக் கொள்ளலாம். ஆனால் இறைவனின் கண்களில் இருந்து தப்பிக்க முடியாது. இயற்கைச் சட் டம் இவர்களுக்கு உரிய இடத்தில் தண்டனை வழங்கியே தீரும்.
மனித வாழ்க்கையில் துன்பங்கள் துயரங்கள் வருவது இயற்கை. இவற்றை தாங்கிக்கவும் சமாளிக்க வும் மனதில் தைரியத்தை தாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். இந்த துயரங்களின் தாக்கங்கள் உள்ளத் தைத் தாக்கி அதனை சோர வைக் காது பார்த்துக் கொள்ளவேண்டும். உள்ளத்தின் முயற்சி என்னும் நீர் ஓட் டம் தடைப்பட்டு விட்டால் வாழ்க்கை சேறாகி நாற்றமெடுக்கும்.
சோம்பலுக்குச் சிறு இடங்கொடுத் தால் போதும் அது விரைவில் எம்மை முழுதாக அடிமை கொண்டு விடும். முயற்சி இன்றித் தூங்கிக் கிடக்கையில் வறுமைப் பேய் கத வைத் தட்டும். வியாதிப் பிசாசுகள் நம்மை நோக்கிப் படை எடுக்கும். சோம்பல் உள்ளத்தில் ஆட்சி புரி கையில் எமது முகத்தின் ஒளி குன்றி கருமை விரியும். விடியாதவன் என்று நண்பர்கள் எம்மைவிட்டு விலகுவர்.
வெளிநாட்டைப் பொறுத்தவரை நாங் கள் பல்வேறு பிரச்னைகள் எதிர்பாக் கவேண்டியிருக்கிறது என்பது உண் மையே. ஆனால் இந்தப் பிரச்னை களில் தலையாய பிரச்னை பாஷைப்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்னை இந்தப் பிரச்னையைத் தீர்க்காமல் மற்றைய பிரச்னைகளை நாடுகையில் எல்லாமே சங்கடங்க ளாய் எம்மை முழிக்க வைக்கின்றன. ஒரு நாட்டில் காலடி எடுத்து வைத் தால் முதலில் அந்த நாட்டு மொழியை கற்க நாம் எம்மைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும். அதற் காக இராப்பகல் என்று முயற்சி செய் தால் ஏன் முடியாது ? மொழி தெரிந் தால் எங்கள் அறிவை எங்கள் திற மைகளை மற்றவனுக்கு வெளிப்படுத் தமுடியும். நகைச்சுவையாக கதைத்து விடயங்களைச் சாதிக்க முடியும். வேலை எடுப்பதும் சரி வீடு வாடகைக்கு பெறுவதும் சரி மொழி தெரிந்தால் இலகுவாகிவிடுகிறது. எங்களுக்கு முதல் வந்த கடன் கட் டவேண்டும். பலர் சொல்வது இது தான். இப்படிச் சொன்னவர்கள் பத்து பதினான்கு வருடங்கள் கடந்த பின்பும் இன்னும் அவர்களுக்கு நேரமும் வசதியும் வரவில்லை. அந்த நாட்டு மொழியைக் கற்பதற்கு இதில் இருந்து தெரிகிறது. எங்க ளுக்கு நேரமின்மையும் வசதியின் மையும் வாழ்நாள் பூராவும் இருக்கத் தான் போகிறது. இதைப் பார்த்தால் நாங்கள் ஒருபோதுமே முன்னேற முடியாது. உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தி ஊக்கத்தை வளர்த்து அதற்கு என்று நேரத்தை ஒதுக்கி அந்த நாட்டு மொழியைக் கற்றவர் கள் தங்கள் முயற்சியினால் முன் னேறி மொழிபெயர்ப்பாளர்களாகவோ, அலுவலக உத்தியோகஸ்தர்களா கவோ, தொழிற்சாலை மேலதிகாரி களாகவோ உயர்ந்து விளங்குகிறார் கள். முயற்சி செய்யாமல் அக்கறை இன்றி இருந்தவர்கள் இன்னும் பழைய நிலையிலேயே தமது வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். மனிதரில் பலரகம். சிலர் இந்த வாழ்க்கையே போதும் என்று சிந்திக் கவோ முயற்சிக்கவோ முயலாமல் இருப்பவர்கள். சிலர் இப்படிச் செய்

## புது உலகம்

நாளை நடக்கும் உரிமைப் போரை
நலமுடன் வென்றிடவே
தோளை நிமிர்த்திய தோழர்கள் உனதணி
வந்து நெருங்குகின்றார்.
காளைகள் எங்கள் கைகளை நம்பியே
காத்துக் கிடக்குதாடா - நாடு
காத்துக்கிடக்குதடா
வேளை வருகுது நம்பி எழுவாய்
உலகம் எங்களதே - நாளைய
உலகம் எங்களதே
நாளைய உலகில் சுடர்விடும் கதிரவன்
எங்கள் மண்ணினிலே - அது
எங்கள் தமிழ் மண்ணினிலே
ஏழைகள் உயர்ந்தவர் இல்லையென்றொரு
நாட்டினை அமைத்திடுவோம் - புது
நாட்டினை அமைத்திடுவோம்
தமிழ்ஈழம் என்றொரு நாட்டினை அமைத்து
உலகிற்கு காட்டிடுவோம் - இந்த
உலகிற்குக் காட்டிடுவோம்.

**-வண்ணை தெய்வம்**



படிப்பகம்

www.padippakam.com

தால் முன்னேறலாம் என்று சிந்திக்கிறார்கள். ஆனால் அதைச் செயலாக்க அவர்கள் மனதில் துணிவதில்லை. நட்டம் வந்தால் என்ன செய்வது என்ற அங்கலாய்ப்பில் சிந்தனையுடனேயே நிறுத்திக் கொள்கிறார்கள். சிலர் சிந்தித்துவிட்டு அடுத்து வரும் அல்லது அதற்கப்பால் செய்வோம் என்று பின்போட்டு அதன்பின் ஆறிய கஞ்சி பழங்கஞ்சியான நிலையில் செயற்பாடில்லாமல் இருந்து விடுகிறார்கள். ஒரு சிலர் மட்டுமே தங்கள் சிந்தனையை உடனே திட்டங்களாக்கி செயலில் குதிக்கிறார்கள். வெற்றிகளைச் சந்திக்கிறார்கள்.

இந்த மனிதன் சும்மா இருந்து கொண்டு ஏதேதோ எழுதுகிறார் செய்து பார்த்தால் தான் தெரியும் என்று சிலர் செல்லலாம். ஆனால் செய்து பார்த்தவர்கள் உயர்ந்து விளங்குகின்றார்கள் என்பதை நான் அனுபவ ரீதியில் கண்டபின்பே எழுதுகின்றேன். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஜெர்மனிக்கு வந்த ஆரம்ப நாளில் புகையிரத நிலையத்தில் இருந்து தனது வீட்டிற்குப் போகத் தெரியாமல் திணறி நின்றார். பின் ஏதோ ஒரு சிறு அடையாளத்தை நினைவில் கொண்டு பல மணி நேரம் தேடலின் பின் தன் வீட்டிற்குச் சென்றவர். இன்று ஜெர்மனி எந்த ஒரு மூலையில் இருக்கும் இடத்திற்கும் முகவரி இருந்தால் தன்னந்தனியாகச் சென்றடையும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார். இது மட்டுமல்ல இந்த நண்பரை நான் பதினான்கு வருடங்களின் முன் சந்திக்கையில் வீடுவீடாகச் சென்று பேப்பர் போடும் வேலையை மார்கழிப் பனியிலும் அந்த குளிர் நடுக்கத்தின் இடையே செய்து கொண்டிருந்தார். அப்போ தான் ஜெர்மனிக்கு வந்து ஒரு சில மாதங்கள் தான் இருக்கும். அவருடன் எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்படாத

இலக்கியக் காற்றினிலே..

-அம்சன்

# ராணிமுத்து 'ஸ்ரைலி'ல் நமக்கு ஒரு சஞ்சிகை

*ஜெர்மனி - மாஸ்பேர்க் (MARSBERG) நகரிலிருந்து வெளிவரும் கலை இலக்கிய சஞ்சிகையான "வண்ணத்துப் பூச்சி" இம்மாதம் 27 ம் திகதி ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட உள்ளது.*

*முதலில் கையெழுத்துப் பிரதியாகவும் பின்னர் கணனிப் பதிப்பாகவும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் இச்சஞ்சிகை ஏப்ரல் மாதம் முதல் புதிய அமைப்பில் வெளிவரவுள்ளது.*

*தமிழக ராணிமுத்து, மாலைமதி சஞ்சிகைகள் போன்று ஒரு குறுநாவலை உள்ளடக்கியதாகவும் மற்றும் வழமையான அம்சங்களுடனும் அழகிய வடிவமைப்பில் 'வண்ணத்துப்பூச்சி' வெளிவரவுள்ளது. நம்மவரின் குறுநாவல்களே தொடர்ந்து வண்ணத்துப் பூச்சியில் இடம் பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

நன்றி: "ஈழநாடு"
(12. 03. 93)



படிப்பகம்

www.padippakam.com

காலம். அவர் தன் நண்பர்களுடன் கதைக்கும்போது அவர் ஒரு சதா சுறுசுறுப்பான மனிதர் என்பது தெரியவந்தது. ஏதாவது செய்யவேண்டும் என்று சிந்தனையைக் கிளறி முயற்சிகள் செய்து கொண்டிருந்தார். இன்று அவர் ஒரு தொழில் அதிபராய் பலருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நிலைக்கு உயர்ந்திருக்கிறார். அவரின் உதவி பலருக்குத் தேவைப்படுகிறது. அந்த நிலைக்கு அவர் வளர்ந்ததற்கு காரணம், விடாமுயற்சி தன் மீது கொண்டிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை. இது போன்று எத்தனையோ உதாரணங்கள் அடுக்கிக் கொண்டே போகலாம்.

என்னில் எனக்கு நம்பிக்கை இருக்கவேண்டும் இல்லாவிட்டால் எல்லாமே புஸ்வாணமாகிவிடும். நம்பிக்கையும் முயற்சியும் உழைப்பும் ஊக்கமும் ஒரு மனிதனை உயர்த்தி சமூகத்தில் நிலையான அந்தஸ்தை உருவாக்கும் அவனை ஊரும் உலகமும் புகழ்ந்து பாடும்.

கழிகிற ஒவ்வொரு விநாடியும் பொன்னுக்குச் சமமானதாகும். நாங்கள் ஊக்கமின்றி சோம்பிக் கிடக்கையில் இந்த பொன் விநாடிகள் எம்மைத் தாண்டிக் கொண்டு வருகின்றன. விழித்திருப்பவர்கள் இவற்றைக் கைப்பற்றிக் கொள்கின்றார்கள். வீண் நேரத்தைப் போக்குபவர்கள் கோட்டை விடுகின்றார்கள்.

தாங்கள் நூறுவருடம் வாழ்வோம் என்று ஒவ்வொருவரும் எங்களிற்குள் நினைக்கின்றோம். நூறு வருடம் நூறு நாட்களாக நூறு நிமிடங்களாகக் கூடக் குறுகலாம். இதனால் நாம் நலமுடன், உடற்பலத்துடன் இருக்கும்போது எமது அறிவைத் தட்டி எழுப்பி ஆக்கபூர்வமான செயற்பாடுகளை இவ்வுலகத்தில் படைப்போம்.

நூறு ஆண்டுகள் ஒன்றுமே செய்யாமல் வாழ்வதைவிட ஒரு சில காலம் வாழ்ந்தாலும் அந்தக் குறுகிய காலத்தில் ஒரு மனிதன் செய்யும் ஆக்கபூர்வ செயற்பாடுகள் அவன் இறந்த பின்பும் இறவாது இவ்வுலகில் நின்று அவன் பெயரைப் பறைசாற்றும்.

என்னால் முடியாது. எனக்கு நேரமில்லை. எனக்கு வசதியில்லை என்று சொல்லி ஒழித்துக் கொள்ளாதீர்கள். என்னால் முடியும். எனக்கு நேரமிருக்கிறது. எனக்கு வசதியிருக்கிறது என்று சாதனை செய்யக் குதியுங்கள்.

செயற்பாடுகள் எல்லாமே வெற்றியடையும் என்றோ வெற்றிகள் எல்லாமே சாதனைகளாகும் என்றோ சொல்லமுடியாது தான். ஆனால் நல்ல வழியில் தனக்கும் தன் சமூகத்திற்கும் தர்ம வழி நாடிச் செய்யும் எந்தச் செயற்பாடும் வெற்றி அழிக்காத கட்டத்திலும் அவன் எதிர்கால வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பது உறுதியாகும்.

எமது முயற்சிகளுக்கு நேரடி வெற்றி கிடைக்காமல் போகலாம். தோல்விகள் வந்து மோதலாம். ஆனால் உங்கள் நெஞ்சிலே ஒரு துணிவும் விரிந்த அனுபவமும் உங்களுக்கு ஏற்படுகிறது. இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. மனிதர்களுக்கு மேலாக இயற்கை அன்னையின் மாபெரும் சக்தி ஒன்று இருக்கிறது. அந்த சக்தி முயற்சியுடைய ஒவ்வொருவனையும் காதலிக்கிறது. அவனைச் சுற்றி அந்த சக்தி அவனையே தொடர்கிறது. அவன் வீழ்ந்தால் தூக்கிவிடவும் அவனை நோக்கி வரும் துன்பங்களை விரட்டி அடிக்கவும் அந்த இயற்கைச் சக்தி (இறைவனின் கருணை) முன்னிற்கிறது.

நம்பமுடியவில்லையா? செய்து பாருங்கள் அனுபவங்களை நீங்களே சந்திப்பீர்கள் .

சில மனத்திடங் கொண்ட செயல் வீரர்கள் மரணம் தங்களை நோக்கி வரும்போது கூட, தீ வந்து என்னை



படிப்பகம்

www.padippakam.com

வீழ்த்தும் வரை நான் உழைத்துக் கொண்டே இருப்பேன் என்று சவாலுடன் செயற்படுவார்கள். இவர்களை மரணங்கள் கூட அணுணுகத் தயங்கும்.
இதனால் தங்கங்களே !
தன்னம்பிக்கையை வளர்த்து உற்சாகத்துடன் செயற்படுங்கள். சோர்வுகளைத் தூக்கி வீசிவிட்டு மலையுடன் மோதும் துணிவுடன் உங்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை எங்கள் இனத்திற்கும் இந்த உலகத்திற்கும் அள்ளி வழங்கிச் சரித்திரம் படையுங்கள். தனிமரம் தோப்பாகாது. தனிப் புள்ளிகள் சித்திரமாகாது. ஒற்றுமை, ஒருமைப்பாடு, சமாதானம் என்று ஒன்றிணைந்து உங்கள் சக்தியை எம் இனத்திற்கு வழங்குங்கள். தமிழன் அகதியாகும் நிலையை மாற்றி தமிழனிற்கு ஒரு விடிவை ஏற்படுத்துங்கள் . உங்கள் வருங்கால சந்ததிகள் நெஞ்சில் நிறுத்தி வாழ்த்தி வணங்குவர். ●

## நான் என்ன செய்தேன் (அம்மா)

என்னை இப்பாரினிலே உதிக்க வைத்த அம்மா
என் மீது அன்பை வைத்து பண்போடு வளர்த்த அம்மா
என்னை பரிவோடு பாலூட்டி அறிவூட்டி வளர்த்த அம்மா
கண்ணை இமைகாப்பது போல் பாதுகாத்த அம்மா
பஞ்சகாலத்திலும் என் பசி தீர்த்த அம்மா
கஸ்டத்திலும் என்னை கரம்பற்றி கரை ஏற்றிய அம்மா
மண்வீட்டிலும் மகராஜனாகப் பார்த்த அம்மா
தோல்விகளைக் கண்டும் துவண்டுவிடாது தூக்கி வளர்த்த அம்மா
துன்பத்திலும் கைகொடுக்கும் நல்லவர்களை காட்டிய அம்மா
எந்தக் கவலையும் என்னை நெருங்கவிடாது கிளிபோல வளர்த்த அம்மா
ஊர் என்னை இழித்துப் பழித்தாலும் என்னை அரவணைத்த அம்மா
தவறுகள் பல செய்த போதும் திருத்தி புத்தியூட்டிய அம்மா
அப்பாவின் பணிப்புக்கு செவி சாய்க்காது தினம்
பேசியபோது எனக்காக பரிந்துரைத்த அம்மா
ஆண்டவனின் துணைகிடைக்க அருள்வேண்டி நின்ற அம்மா
நான் என்ன செய்தேன்
நினைத்துப் பார்க்கிறேன்
ஞாபகத்தை மீட்டிப் பார்க்கின்றேன்
மீண்டும் மீண்டும் இல்லை எதுவுமே இல்லை
எல்லாமே பூச்சியம் தான் அம்மா
உன் சேவை முன் எல்லாமே பூச்சியம் தான் அம்மா...

- **க. குணாளன்**



படிப்பகம்

www.padippakam.com





# அவர்கள் திரும்பிப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள்!

எழுபதுகளின் பிற்பகுதி... பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலாகியிருந்தது. வடபகுதியில் 'பயங்கரவாத'த்தை ஆறுமாதங்களுக்குள் அடக்கவென விசேடமாக பிரிகேடியர் ஒருவர் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டிருந்தார்.

இரவோடிரவாக கறுப்புக்காரில் வருபவர்களால் பலர் கடத்தப்பட்டுக் கொண்டிருந்த இருண்ட காலத்தின் தொடக்கம்...

நள்ளிரவு வேளை கறுப்புக் காரில் வந்தவர்களால் நவாலியில் ஒரே வீட்டைச் சேர்ந்த இருவர் கடத்திச் செல்லப்பட்டு சொல்லொணா வகையில் சித்திரவதை செய்யப்பட்டு மரணமாகிய பின் அல்லைப்பிட்டி பண்ணை வீதியில் வீசப்பட்ட அதிர்ச்சிச் செய்தி வடபகுதி மக்களை உலுப்பிய காலம்.

அந்தக் கல்லூரி க. பொ. த. உயர்தர வகுப்பு கலைப்பிரிவு மாணவர்களில் ஒருவன் சிவானந்தன்.. அதிபர் ஆசிரியர்களின் விருப்புக்குரிய சிறந்த மாணவன். அவன் படிக்கின்ற பாடங்களில் சமஸ்கிருதமும் ஒன்று. அவனது தமிழ் அறிவை மெச்சிய சமஸ்கிருத ஆசிரியர் சமஸ்கிருதம் கற்பதன் மூலம் மொழி -இலக்கிய அறிவு மேலும் வளம் பெறும் எனக் கூறி அவனை கட்டாயமாக சமஸ்கிருதம் கற்க வைத்தார். கல்லூரியில் நடைபெறும் கலை இலக்கிய நாடக விழாக்கள், போட்டிகள் பலவற்றி



படிப்பகம்

www.padippakam.com

லும் சிவானந்தனுக்கும் பரிசு காத்தி ருக்கும்.

அதே போன்று இன்னுமொரு.... சுவர்ணலதா.... பெயருக்கேற்ற அழகுக்கொடி... கலை இலக்கிய நாடகவிழாக்கள், பேட்டிகள் யாவற்றிலும் அவள் ஒளிர்வாள். சிவானந்தாவும் சுவர்ணலதாவும் ஒரே வகுப்பில் கற்றாலும் இருவருக்கும் எல்லா விடயங்களிலும் போட்டி தான். அவர்களின் தற்கங்களுக்கு சமஸ்கிருத வகுப்பு மிக்க வசதி. ஏனெனில் அந்த நேரம் வேறு மாணவர் குறைவு. மாணவிகளே அதிகமாக வகுப்பில் இருப்பர். போட்டிகள், விழாக்கள் எல்லாம் அவர்கள் இதயங்களிலும் ஒருவரையொருவர் மறக்கமுடியாதபடி செய்து கொண்டு தான் வந்தது.

கல்லூரி அதிபர் தான் அந்த வகுப்புக்கு 'ஐரோப்பிய வரலாறு' கற்பிப்பார். அந்த வகுப்பு அவனுக்கு பிடித்தமானது. ஒரு நாள் தனது 'ஐரோப்பிய வரலாறு' கொப்பியைப் பிரட்டி பிரெஞ்சுப் புரட்சி பற்றிய விடயத்தை ஆர்வத்தோடு படித்த பின் கொப்பி மட்டையின் உட்பக்கத்தை மேலோட்டமாகப் பார்த்தான். அதில் ஆங்கிலத்தில் தீட்டப்பட்டிருந்த வாக்கியம் அவனை எண்ண அலைகளில் மிதக்க வைத்தது." சாகும் உன் சுவர்ணாவை நினைவில் வைத்திரு" இந்த வாசகம் நினைவில் ஆடிக்கொண்டே இருந்தது. ஆயினும் அதிலும் மேலாக ... பரீட்சைக்கு இன்னும் நான்கு மாதங்கள் கூட இல்லை.... ஏப்ரலில் நடைபெறவுள்ள பரீட்சையில் விஞ்ஞான பிரிவிலும், கலைபிரிவிலும் மிகச் சிறந்த சித்தியினை பலர் பெறுவாரென அதிபரும் ஆசிரியர்களும் எண்ணியிருந்தனர். சிவானந்தன் சீர்திருத்த எண்ணங்களும் கருத்துக்களும் இன உணர்ச்சி





படிப்பகம்

www.padippakam.com

யும் தமிழ் அபிமானமும் தீவிரத்தன்மையும் சுவர்ணாவுக்கு அவ்வளவாய்ப் பிடிப்பதில்லை. 'இந்த வயதில் இதெல்லாம் தேவையில்லை. அரசியலில் ஈடுபட்டுள்ள உங்க அண்ணாவை அதுகளில் ஈடுபடுகிறது பரவாயில்லை. உங்களுக்கு ஏன் இந்த வயதில நாட்டைப் பற்றின சிந்தனை...' இப்படி எத்தனையோ கூறி சிவானந்தனை அவள் திசை திருப்பப் பார்த்தாள். அவன் அவற்றுக்கெல்லாம் சுடச்சுட பதில் கொடுப்பான். சீண்டுதல் அதிகமானால் ஒரு முறைப்புப் பார்வையுடன் பேசாமல் போய்விடுவான். அன்றும் அப்படித் தான் நடந்தது. சுவர்ணாவின் சீண்டுதல் கேள்விகளுக்கு பதில் சொல்ல பொறுக்கமுடியாத நிலையில் முறைத்துவிட்டுப் போயிருந்தான். 'அல்லைப்பிட்டி பண்ணை வீதியில் இருவர் சடலம், சித்திரவதைக் காயங்கள், ஆணுறுப்புக்கள் இல்லை!" அன்று வந்த பத்திரிகைச் செய்தியை படித்தவனுக்கு தூக்கமே வரவில்லை. பரீட்சைக்கான பாடங்களை படிக்கவும் முடியவில்லை. ' தமிழனாகப் பிறந்துவிட்டதால் இப்படி எல்லாம் கொடுமைகளா ? இதைத் தடுத்துநிறுத்த முடியாதா ? ' பலவாறாக எண்ணியவன் முடிவுக்கு வந்துவிட்டான். தங்கியிருந்து படித்து வந்த வீட்டாருக்கு ஒரு கடிதம் எழுதி மேசையில் வைத்தான். வீட்டுக்கு ஒரு கடிதமும் எழுதி தபாலில் சேர்த்தான். தனக்குத் தெரிந்த நண்பனைத் தேடிச் சென்றவன்... பல மாதங்களாக...

சிவானந்தனின் பெற்றோர் சகோதரர்கள் அரசியலில் ஈடுபாடு கொண்டவர்கள் தான். ஆனாலும் சிவானந்தனின் முடிவினை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கல்லூரியில் அவன் வரவைத் தினமும் எதிர்பார்த்து சுவர்ணா... நாட்கள் ...மாதங்களாக... அவளால் கல்லூரியில் கலகலப்பாக பழக முடியவில்லை. ஏனோ தானோ என்றவாறே தான் பரீட்சையும் எழுதினாள்.

சிவானந்தன் கல்லூரிப் படிப்பை இடையில் விட்டுத் தலைமறைவானது கல்லூரி அதிபர் ஆசிரியர்களையும் பெரும் வேதனைக்குள்ளாக்கியது. 'நல்ல றிசல்ற் எடுக்கக்கூடிய பிள்ளை, இப்படிப் போனானே" என அவர்கள் தமக்குள் பல நாள் கவலைப்பட்டுக் கொண்டனர்.

சுவர்ணா பரீட்சையில் மூன்று பாடங்களில் தான் சித்தி பெற்றாள். அவளிலும் பார்க்க வகுப்பில் பின்னடைந்திருந்த பலர் சிறந்த சித்தியினைப் பெற்று பல்கலைக்கழகம் போகும் வாய்ப்பினையும் பெற்றனர்.

சுவர்ணா வீட்டிலேயே முடங்கிக் கிடந்தாள். மீண்டும் பரீட்சைக்குப் படிக்க அவளுக்கு மனம் வரவில்லை. நாட்டு நிலமையையும் மோசமாகிக் கொண்டே வந்தது.

சிவா உயிருடன் இருப்பாரா ? அவளுக்கு தெளிவான செய்தி எதுவும் கிட்டவில்லை. பெற்றோரின் வற்புறுத்தலில் திருமணம் ஏற்பாடாகியது. புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்தில் படித்த பட்டம் பெற்று பிரான்சில் பல்கலைக்கழகம் ஒன்றில் ஆய்வாளராகக் கடமையாற்றும் ஒருவருக்கு வாழ்க்கைப் பட்டாள்.

பிரான்ஸ் வந்து சில வருடங்கள் ஓடிவிட்டன. இரண்டு குழந்தைகளுக்கும் தாயாகிவிட்டாள். அன்று பரிஸ் நகரில் ஒரு விழா. அந்த விழா மூலம் சேகரிக்கப்படும் பணம் முழுவதும் ஈழத்தில் அகதிகளாய் அல்லலுறும் தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அனுப்பிவைக்கப்பட்டது. அந்த விழாவுக்கு சுவர்ணா கணவர் பிள்ளைகளுடன் வந்திருந்தார். சுவர்



படிப்பகம்

www.padippakam.com

ணாவின் கணவருக்கு முன்பெல்லாம் இத்தகைய விழாக்களோ ஈழத்தில் நடக்கும் விடுதலைப் போராட்டம் பற்றி கதைப்பதோ பிடிக்காது.... ' வேலையற்றதுகள் , அறிவுகெட்டதுகள்' என்றவாறு கூறிவிட்டு தனது வேலைகளிலேயே மூழ்கிப்போயிருப்பார். பல வருடங்களுக்கு முன்பு புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு வந்தவர் என்பதில் பெருமை. மணம் முடித்து வந்த காலத்தில் சுவர்ணாவும் இவை பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. ஆனால் பின்னர் சுவர்ணாவின் தணியாத தமிழார்வம் கலை இலக்கியப் பற்று , நாட்டு உணர்வு அவளை தாயத்தை எண்ணிப் பார்க்க வைத்தது.

வீட்டுக்கு வந்து சேரும் தமிழ்ப்பத்திரிகை, சஞ்சிகைகளை போராட்ட நிகழ்வுகளை சித்தரிக்கும் எந்த இதழ்களையும் படிக்கத் தவறுவதில்லை. ' களத்தில் கேட்கும் கானங்களை 'விரும்பிக் கேட்பாள். இரு பிள்ளைகளும் கூடத் தான்.. ஆடம்பரச் செலவுகளை ஒறுத்து இயன்றவரை தாயக மக்களுக்கு நிதியுதவி கூட செய்து வந்தாள். பிள்ளைகளின் தமிழார்வமும் அவளுக்கு அளவிலா மகிழ்ச்சியைக் கொடுத்தது.

சுவர்ணாவின் நடைமுறையும், படிப்பும் ஆர்வமும் அதிகமான வேளை காதில் போட்டு வைக்கும் செய்திகளும் அவளின் கணவன் மனதிலும் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அன்று தான் முதன் முதலாக, ஈழத்தின் நிகழ்வுகளை விளக்கும் அந்த விழாவுக்கு அவர் குடும்பத்துடன் வந்திருக்கிறார்.

விழாவில் ஓர் இளைஞன் சிறப்புரை.... தாயக நிகழ்வுகளைக் கூறும் நடன , நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. சிறப்புரையைக் கேட்ட சுவர்ணாவும் கணவரும் உணர்ச்சிக் கொதிப்பாகினர். தாயக நிலைமைகளைக் கேட்ட அவர்கள் மனம் கொதித்தது. இயன்றவரை மண் மீட்புக்கு உதவவேண்டுமென கணவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட சுவர்ணாவின் கண்கள் கலங்கின.

விழா முடிவில் கூட்டமண்டப வாசலுக்கு வந்த சுவர்ணாவின் கணவன் சிறப்புரையாற்றிய இளைஞனைக் கண்டதும் வணக்கம் சொல்லிவிட்டு அவனது உணர்வு பூர்வமான பேச்சு, தன்போன்ற பலரினை சிந்திக்கத் தூண்டியதென மனப்பூர்வமாகப் பாராட்டினார். சுவர்ணாவும் வந்து வணக்கம் சொல்லி, அவனது முகத்தை கூர்ந்து பார்த்தவளுக்கு திகைப்பு அந்த ஒரு கணத்தில் ... என்னென்னவோ... கடந்த கால நிகழ்வுகள் எல்லாம் படமாக வந்து போயின. வணக்கம் சொல்லிக் கூப்பிய கரங்களில் இரு விரல்கள் இல்லாததையும் சுவர்ணா கண்டார்.

' நீங்கள் சிவானந்தன் தானே' 'ஆமாம்' . நீங்கள்....' நான் சுவர்ணலதா.... இவர் என் கணவர்... இவர்கள் பிள்ளைகள்...'

'தாயகப் பற்றுள்ள ஒருவரைக் கணவராகப் பெற்றுள்ளீர்கள்.. சந்தோஷம்'

- வி.ரி. இளங்கோவன் -



படிப்பகம்

www.padippakam.com

'என்னை ஞாபகமிருக்கா....'

'ஓமோம்.. ஞாபகமிருக்கு... இது 'ஐரோப்பிய' நாடாகிலும் எம்மவரை மறக்கமுடியுமா?....'

சுவர்ணா தன் கணவருக்கு சிவானந்தனை தன்னோடு படித்தவர் என அறிமுகப்படுத்தினார்.

'நீங்கள் கலியாணம் முடிச்சிட்டீர்களா ? குழந்தைகள் எத்தனை...?'

சுவர்ணா தான் கேட்டாள்.

'எனக்கா .... ஆ... கலியாணமா.... அதைச் சிந்திக்க அன்றிலிருந்து இன்று வரை நேரமில்லை. எமது மண்ணை மீட்கவேண்டும். பிறகு பார்ப்போம்'

எல்லோரும் பேசிக் கொண்டு ஒரு றெஸ்ரோறன்ருக்குள் நுழைந்தனர் கோப்பியைப் பருகியவாறு....

'இவ்வளவு காலமும் எங்கை இருந்தனீங்க... எப்ப இங்க வந்தனீங்க.... கைவிரலுக்கு என்ன நடந்தது....'

அவள் தான் கேட்டாள்.

'நம்ம நாடு முழுதும் இருந்தேன். பல முறை காயப்பட்டன். நாலு மாதத்திற்கு முன்னர் ஒரு காலிலை காயங்கள் அதிகமாய்ப் போச்சு. வயித்திலை குண்டு பாய்ஞ்சிற்றுது. தலையில காயம். கையிலும் காயம். தாயக விடுதலைக்கு எதையும் தாங்கலாம் தானே.... வைத்தியம் செய்யவென இங்கு அனுப்பி வைச்சாங்க...'

'சிவா...சுவர் இருந்தாத் தான் சித்திரம் எழுதலாம் எண்டு சொல்லுவினம். நீங்க முதல் உங்கள் உடல் நிலையை நல்லாய்ப் பார்க்கவேணும்'

'இப்போ உடல்நிலை நல்லாயிருக்கு. விரைவில் ஊர் திரும்ப இருக்கிறன்..'

'சிவா...தாயக விடுதலைக்கு நாங்களும் பங்களிப்புச் செய்ய ஆயத்தமாகத் தான் இருக்கிறம். முந்தியப் போலை இல்லை இப்ப எங்கடை சனம் இங்க தாயக உணர்வோடை தான் இருக்கு. அங்க இரண்டாந்தரப் பிரசைகளாக வாழுமுடியாது எனத் தானே எங்கடை பழைய தலைவர் மார் குரல் கொடுத்துப் போட்டு தங்கடை நலனை மட்டும் பாத்தினம். இங்கை ஐரோப்பிய நாடுகளில் நாங்க பிரசாவுரிமை எடுத்தாலும் இரண்டாந்தரப் பிரசைகளாகத் தான் வாழவேண்டும். இது எல்லோருக்கும் விளங்கும். இங்க உள்ள வாழ்க்கைச் சொகுசு அங்கை கிடைக்குமா என்ற நினைப்பு ஒரு சிலருக்கு இருக்குத் தான் விரைவிலை இங்கையும் அடி விழு அவைக்கும் புத்தி வரும்' சுவர்ணாவின் கணவர் தான் உணர்வு பூர்வமாகச் சொன்னார்.

சுவர்ணாவுக்கு கணவரை நினைக்கப் பெருமையாக இருந்தது. 'தம்பி சிவா... நான் முந்தி இந்தப் போராட்டங்களையெல்லாம் வெறுத்தனான். ஆனால் சுவர்ணா தான் எனக்கு நாட்டைத் திருப்பிப் பார்க்கின்ற உணர்வை ஏற்படுத்தினவ. இப்ப இங்கை ....ஐரோப்பிய நாடுகளிலை எங்கடை சனத்துக்கு அகதி அந்தஸ்து கிடைத்து உயிரைப் பாது காத்துக் கொள்ள முடியுதெண்டா.... அது அங்க தாயகத்திலை உங்களைப் போல தம்பிமாற்ர தியாகத்தாலை.. அவங்க சிந்துகிற இரத்தத்தாலை தான். இதை எங்கடை சனம் இங்கை மறக்கக்கூடாது. பெற்ற தாயையும் பிறந்த பூமியையும் மறக்கக்கூடாதென்பது விளங்கும். இங்க இப்பவுள்ள நிலைமைகள் தான் தொடர்ந்திருக்குமெண்டு சொல்ல முடியாது..... என்ரை ஆய்வு வேலைகள் முடிஞ்சவுடனை நானும் விரைவில குடும்பத்தோடை நாடு திரும்பப் போறன். எங்கடை மண்ணுக்கு என்னாலியன்ற ஏதாவது செய்ய வேணுமெண்ட துடிப்பு எனக்கு இருக்கு.. அதுக்கு ஒரு காரணம் உங்கட இண்டைய பேச்சு, விளக்கங்கள் எண்டும் சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com

"எப்ப உங்க அக்கிறிமன்ற் முடியு துங்கோ" ஆர்வத்தோடு கணவரைக் கேட்டாள் சுவர்ணா.

ஐரோப்பாவிலும் தன்னால் சிறு பணி செய்ய முடிந்ததேயென நினைத்து ஒரு கணம் மகிழ்ந்தான் சிவா....

" சிவா ஒரு நிமிடம்.... ஏன் ஆனந் தன் என்ற பெயரிலை மேடையிலை



பேசினீங்க ." சுவர்ணா தான் கேட் டாள்.

"சிவானந்தன் என்ற பெயர் உங்க ளைக் போல ஒரு சிலருக்குத் தான் தெரியும் ஆனந்தன் என்ற பெயர் நம்ம மண்ணில் உள்ளவர்களுக்கும் தோழர்களுக்கும் தெரிந்த பெயர்"

எல்லோரும் கோப்பி குடித்து முடிந்த பின்னர் வீதியில் இறங்கினர். சுவர் ணாவின் கணவர் காரை ஸ்ராட் செய்தார். ஊர் திரும்பமுன் ஒரு முறை வீட்டுக்கு வந்து செல்லுமாறு குடும்பத்தினர் எல்லோரும் ஒரே குரலில் சிவானந்தனுக்கு அழைப்பு விடுத்தனர்.

சிவானந்தன் வீதியில் இறங்கினான். தூரத்தில் அவனுக்காக பலர் காத்து நின்றனர்.

தூரத்தே ' ஈகிள் கோபுர ஒளி' அழ காக வான்பரப்பை அழகூட்டுவதைப் பார்த்தவாறு அவன் நடக்கிறான். ●



விழவிழ
எழுவோம்
விழவிழ
எழுவோம்
ஒன்று விழ
நாங்கள்
ஒன்பதாய்
எழுவோம்!

-காசி ஆனந்தன்



படிப்பகம்

www.padippakam.com

# இந்த நல்ல வேளையில் நினைக்கின்றோம் உங்கள் உதவிகளை!

அனைத்து வாசகர்களுக்கும் முதலில் வண்ணத்துப்பூச்சி தலைவணங்குகிறது. வண்ணத்துப்பூச்சியின் வளர்ச்சிக்கும், அதன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் என்றும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கும் கொக்சவர்லண்ட் வாழ் தமிழ் மக்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"வண்ணத்துப்பூச்சி" சஞ்சிகையை அச்சில் அழகுற உருவாக்கித் தரும் கொக்சவர்லண்ட் கலாச்சார அலுவலக அதிகாரிகளுக்கும், மெசடே, பிறிலோன், ஆன்ஸ்பேர்க் நகரங்களுக்கும், இதற்குத் தொடர்பாக இருக்கும் திருமதி. டீமிள் (FRAU DIEMAEL) அவர்களுக்கும் எமது நன்றிகளைக் கூறுகிறோம். எமது செயற்பாடுகளுக்கு அவ்வப்போது உதவிக்கரம் கொடுக்கும் திருமதி சூனமன் அவர்களுக்கும் நன்றிகள்.

"வண்ணத்துப்பூச்சி"யின் பிறப்புக்கும், அதன் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்த எனது மைத்துனி நிர்மலா, அவரது கணவனும் எனது அன்பு நண்பனுமான திரு. மு. லிங்கம் இருவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

எமது ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்குக் கை கொடுத்து உதவிய கலைவிளக்கு ஆசிரியர்கள் திரு., திருமதி பாக்கியநாதன், இலங்கை வானொலி முன்னாள் அறிவிப்பாளர் திரு. என். ரி. ஜெகன் அவர்களுக்கும் மற்றும் எமக்குத் துணைநிற்கும் கொக்சவர்லண்ட் தமிழர் ஒன்றியம், ஐரோப்பா வாசகர் வட்டம், ஈழவாலிபர் விளையாட்டுக் கழகம் கொக்சவர்லண்ட், அபூர்வசகோதரர் விளையாட்டுக் கழகம் சோஸ்ற இவர்களுக்கும் எம் நன்றிகள்.

ஐந்தாவது ஆண்டு விழாவை நடத்த ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கும் "ஈழநாடு" நிறுவனத்துக்கும் எமது நன்றிகள்.

எமது பல்வேறு முயற்சிகளுக்கும் துணைக்கரம் தந்து உதவிகள் புரிந்து கொண்டிருக்கும் பிராங்பேர்ட் தமிழ் மன்றத்தலைவர் திரு. சிவனடியான் ஸ்ரீபதி, ஈழநாடு பிரதம ஆசிரியர் திரு. எஸ். எஸ். குகநாதன் இருவருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



உருவப்படங்கள்



ஓவியம்




விளம்பர போர்ட்டுகள்





- சஞ்சிகைகளுக்கான அட்டைப்படங்கள்
- திருமண வாழ்த்து மடல்கள்
- விளம்பர போர்ட்டுகள்
- கோயில் திரைச் சீலைகள்
- உருவப் படங்கள்

மற்றும் சகலவித ஓவிய வேலைகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள் :

தொலைபேசி: 069/ 704439 or 4960969


படிப்பகம்